# MANOHARA

## A TAMIL DRAMA

BY

RAO BAHADUR. P. SAMBANDAM, B.A., B.L.,

*Author of:*

The Two Sisters, Galava, The Eye of Love, The Curse of Urvasi, The Merchant of Vanipura, Fate and Love, Simhalanatha, Pushpavalli, Amaladitya, Magapathi, Farces, Siruthondar, The Golden Fetters, True Love, The Bandit Chief, Bricks-Between, At Any Cost, The Fair Ghost, The Wedding of Valli, Brahmin *vs* Non-Brahmin, Vijayarangam, As you like it, Ratnavali, Lord Buddha, The Tragedy of Silence, The Good Fairy, Geetha Manjari, The True Brother, Malavikagnimitra, Chandrahari, The Demon Land, Sabapathy Part I, The Pongal Feast or Sabapathy Part II, A Rehearsal or Sabapathy Part III, Sabapathy Part IV, Blessed in a Wife, The Dancing Girl, Subbadra-Arjuna, Karna the Giver, Sahadeva's Stratagem, The Surgeon General's prescription, Vichu's Wife, Sakuntala, Vikramorvasi, The Point of View, The Two Selves, The Tragic Denouement, The Sub-Assistant Magistrate of Sultanpet, Harischandra, Blind Ambition, Markandeya, Sarangadhara, The Two Friends, The Knavery of Kalappa As We Sow-So We Reap, Over Forty Years Before the Footlights Parts I & II, The Tamil Drama etc, in Tamil; and Harischandra, and Yayathi in English.

SEVENTH EDITION

Madras:

PRINTED BY THE PEERLESS PRESS,

13, THAMBU CHETTY STREET, G. T.

[All Rights Reserved. 1934 Price per Copy 2-0-0

M. I. P. PROJECT
Microfilmed.

# மநோஹரா

இந்த தமிழ் நாடகம்

ராவ்பஹதூர்
ப. சம்பந்த முதலியார், பி.ஏ., பி.எல்.,
அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட மற்றத் தமிழ் நூல்கள்:—

லீலாவதி – சுலோசனே, சாரங்கதரன், மகபதி, காதலர் கண்கள், நற்குல தெய்வம், ஊர்வசியின் சாபம், இடைச்சுவர் இருபுறமும், என்ன நேர்ந்திடினும், விஜயரங்கம், கள்வர் தலைவன், தாசிப்பெண், மெய்க்காதல், பொன் விலங்குகள், சிம்ஹளநாதன், விரும்பிய விதமே, சிறுத்தொண்டர், காலவரிஷி, ரஜபுத்ரவீரன், உண்மையான சகோதரன், ரத்னவளி, புஷ்பவல்லி, கீதமஞ்சரி, பிரஹசனங்கள், அமலாதித்யன், சபாபதி முதற்பாகம், பொங்கல்பண்டிகை அல்லது சபாபதி இரண்டாம் பாகம், ஓர் ஒத்திகை அல்லது சபாபதி மூன்றும் பாகம், சபாபதி நான்காம் பாகம், வள்ளிமணம், பேயல்லபெண் மணியே, புத்த அவதாரம், விசுவின் மனைவி, வேதாள உலகம், மனைவியால் மீண்டவன், சந்திரஹரி, சுபத்திரார்ஜுனு, கொடையாளி கர்ணன், சஹதேவன் சூழ்ச்சி, நோக்கத்தின் குறிப்பு, இரண்டு ஆத்மாக்கள், சர்ஜன்ஜெனரல் விதித்த மருந்து, மாளவிகாக்னி மித்ரம், விபரீதமான முடிவு, சுல்தான்பேட்டை சப் அசிஸ்டெண்ட் மாஜிஸ்டிரேட், சகுந்தலை, காளப்பன் கள்ளத்தனம், விக்ரமோர்வசி, முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும், நாடகமேடை நினைவுகள் முதற்பாகம், நாடகமேடை நினைவுகள் இரண்டாம் பாகம், நாடகத் தமிழ், பிராம்மணனும்-சூத்திரனும, முதலியன.

ஏழாம் பதிப்பு

சென்னை 'பியர்லெஸ்' அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.

1934

காபி ரைட்.]

[விலை ரூபா. 1-4-0

# PREFACE.

This is a stage Edition of "Manohara" As it is cut, this drama can be acted in 3½ hours, or at the most 4 hours.

Persons desirous of staging this or any other drama by me, are informed that they will have to pay a small royalty and take my previous permission before doing so, otherwise they become liable to be prosecuted under the latest Copyright act in a Criminal Court.

"Pammal Lodge"
G. T. Madras.
1st May 1934.

THE AUTHOR.

42241

INSCRIBED

to

THE BELOVED MEMORY

of

MY PARENTS

**P. VIJIARANGA MUDALIAR**

and

**P. MANICKAVELU AMMAL**

and

MY FRIEND

**C. RANGAVADIVELU**

# மனோஹரன்

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| புருஷோத்தமன் | ... ... | சோழநாட்டரசன் |
| மனோஹரன் | ... ... | புருஷோத்தமன் புதல்வன் |
| சத்தியசீலர் | ... ... | சோழதேசத்துப் பிரதானமந்திரி |
| ராஜப்பிரியன் | ... ... | மனோஹரன் தோழன் |
| பௌத்தாயனன் | ... ... | ஓர் மந்திரி |
| ரணவீரகேது | ... ... | சோழசேனாதிபதி |
| விகடன் | ... ... | அரண்மனை விதூஷகன் |
| அமிர்தகேசரி | ... ... | ஓர் வைத்தியன் |
| வசந்தன் | ... ... | கேசரிவர்மனுக்கும் வசந்தசேனைக்கும் பிறந்தவன் |
| பத்மாவதி | ... ... | புருஷோத்தமன் பத்னி |
| விஜயா | ... ... | மனோஹரன் மனைவி |
| வசந்தசேனை | ... ... | அரண்மனை தாசி |
| நீலவேணி | ... ... | ஓர் தாதி. |

புருஷோத்தமன் குரு, சேனைவீரர்கள், சேவகர்கள், சோழபாண்டிய சைனியங்கள், கேசரிவர்மன் அருவம், தாதியர்.

கதை நிகழ் இடம்—சோழநாட்டிலும் அதன் அருகிலுள்ள பிரதேசத்திலும்.

# மனோஹரன்

## முதல் அங்கம்.

### முதற் காட்சி.

இடம்:—அரண்மனையில் பத்மாவதிதேவியின் அறை. காலம்—காலை.

பத்மாவதிதேவி மஞ்சத்தின்மீது வீற்றிருக்க மனோஹரன் தன் தாயார் பாதத்தருகில் உட்கார்ந்திருக்கிறான். அருகில் தன் தாதி தாங்க விஜயாள் அமுதவண்ணம நிற்கிறாள். நீலவேணி பத்மாவதிக்குப் பின்புறமாக நிற்கிறாள்; சத்தியசீலனும் ராஜப்பிரியனும் ஒரு புறமாக நின்று மெல்லப் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

பத். கண்ணே, மனோஹரா, நமது படைகளெல்லாம் பாண்டிய நாட்டை நோக்கி எப்பொழுது புறப்படுவதாகக் கூறினை?

ம. அம்மணி, இன்றைத்தினம் முபபது நாழிகைக்கெல்லாம் புறப்பட வேண்டுமென்று, நமது குலகுரு காலம் நிர்ணயித்திருக்கிறார்.

பத். ஆனால் நான் உன்னைத் தாமதிக்கும்படிச் செய்யலாகாது, சீக்கிரம் புறப்படு. கண்ணே, சுத்த வீரனாகிய உனக்குப் பெண்பாலாகிய நான் என்ன உரைக்கக்கூடும்?

ராகம்—பியாகடை-தாளம்—ஆதி.

பல்லவி.

மனோஹராவுன் மகிமை யறிந்தும்
மாதோ நான் எடுத்துரைப்பது (ம)

அனுபல்லவி.

தன்னை யில்லா தயாள வீரா
தானவர் பணியும் சூரா (ம)

சரணம்.

தஞ்சமென் றுனைத்தாவி யடைந்தாரை
அஞ்சலெனவே நீ ஆதரிப்பாயே
பஞ்சையர் மீதும் பாவையர் மீதும்
பாணத்தை நீ யென்றும் எய்யாதே (ம)

ஆயினும் ஒன்று கூறுகிறேன். உடலபிமானம், உயிரபிமானம், உறவபிமானம் இம்மூன்றையும் நீத்துப் போர் புரியும் அமர்க்களத்தில், மானுபிமான மொன்றைமாத்திரம் மறவாதே; என்ன இடுக்கண் வந்து நேர்ந்தபோதிலும் அதர்ம யுத்தம் புரியாதே. பகைவரை வஞ்சித்துக் கொல்லாதே. உனது ஜன்மத்துவேஷியா யிருந்தபோதிலும் அமர்க்களத்தில் நிராயுதனுய் நின்றவன் மீதும், உன்னைத் தஞ்சமென்றடைந்தவன் மீதும், உனது பாணத்தைச் செலுத்தாதே; அப்படிப்பட்டவர்களை உனது உயிரையாவது கொடுத்துக் காப்பாற்று.

ம. அம்மா அப்படியே ஆகட்டும்—இச்சிறந்த உடைவாளேது?

பத். உன்னிடம் இதைக் கொடுப்பதற்கே இதை எடுத்து வைத்தேன் இன்றைத்தினம். இது யாருடையது தெரியுமா உனக்கு? இது என் தந்தையாகிய அதிவீரசேர மஹாராஜனுடையது. அவர் முத்துவிஜய பாண்டியனது சூதால், தனது நாடு நகரமெல்லாம் இழந்து தெய்வாதீனத்தால் இறக்கும்படி நேரிட்டபொழுது, தன்னுல் தன் பகையை முடிக்கக் கொடுத்துவைக்காமற் போன போதிலும், தன் பேரனுகிய உன்னுலாவது தன் சபதம் முடியவேண்டுமெனக் கருதி, நீ குழந்தையாயிருந்தபொழுது இவ் வாளை என்னிடங் கொடுத்து உனக்கு வயது வந்தவுடன் இதை உன்னிடம் ஒப்புவிக்கும்படி கூறி, தேகவியோக மடைந்தார். கண்ணே, மனோஹரா, உனது மூதாதையினுடைய சபதத்தை நிறைவேற்றுவையா?

ம. அம்மணி, அதை இன்னதென்று கூறும், ஒரு க்ஷணத்தில் முடித்துவிடுகிறேன்.

பத். அத் துஷ்டனுகிய முத்துவிஜயபாண்டியனது சென்னியை இவ்வுடைவாளால் சேதித்து, அவன் நம்மிடமிருந்து கவர்ந்த நாடு நகர முதலியவற்றையெல்லாம் மீட்கவேண்டும். கண்ணே, செய்வையா நீ இதை?

ம. அம்மணி, உமதருளாலும், தெய்வகடாட்சத்திஞலும் எனது புஜபல பராக்கிரமத்திஞலும் அப்படியே செய்கிறேன்—இது சத்தியம்.

பத். கண்ணே, இவ்வுடைவாளால் உனது பகைவரை யமனுலகுக்கேற்றி, உனது சபதத்தை நிறைவேற்றி, உனது கீர்த்தியையும் புகழையும் நிலைபெறச் செய்து, சீக்கிரம் உனது தந்தையும் நானும் மகிழும்படி வெற்றி வீரனுகத் திரும்பி வருவாய்!

[பத்மாவதி உடைவாளை மனோஹரன் கையில் கொடுக்கிருள் அரண்மனைக்கு வெளியில் ஒரு ங்கு சேர்க்கப்பட்ட சைனியங்கள் "ஜெய! ஜெய," என்று கோஷிக்கின்றனர்.]

ரா. அம்மா, நற் சகுனமும் நமக்கு வாய்த்தது. இளவரச அப்படியே வெற்றி பெற்று வருவார் என்பதற்குத் தடையில்லை.

சத். அதற்குச் சந்தேக மென்ன?

பத். மனோஹரா, உனது பாட்டனுரும் முன்னேர்களும் உடகார்ந்து ராஜரீகம் செலுத்திய சிம்மாசனம் பாண்டியனது சபையிலிருக்கிறது; அதையும் எப்படியாவது மீட்டு கொண்டு வா. உனது பாட்டனர் அதை எனக்கு ஸ்திதனமாகக் கொடுக்க எண்ணியிருந்தார்.

ம. அப்படியே ஆகட்டும், அம்மா, நான் விடை பெற்றுகொள்ளுகிறேன்—நேரமாகிறது.

ரா. ஆமாம், அம்மா, படைகளெல்லாம் அணி வகுத்து நிற்கின்றன—புறப்படும் லக்னம் வந்து விட்டது.

ம. [தன் தாயாரிடமும் விஜயாளிடமும் விடைபெற்று] நான் போய் ஜெயித்து வருகிறேன்!

[மனோஹரன், ராஜப்பிரியன், சத்தியசீலர் மூவரும் போகின்றனர். பத்மாவதி தன் முகத்தை முன்தானையால் மூடி மஞ்சத்தின் மீது சாய்ந்து விடுகிறாள். விஜயாள் தேம்பியழுது பத்மாவதியின் மடியின்மீது வீழ்கிறாள்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாவது காட்சி.

இடம்:—அரண்மனையில் வசந்தசேனையினுடைய அந்தரங்கமான அறை.

காலம்:—மாலை.

வசந்தசேனையும், நீலவேணியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

வஸே. நீலவேணி, அன்றைத்தினமே இவ்விஷயங்களையெல்லாம் ஏன் என்னிடம் வந்து கூறவில்லை?

நீ. நான் என்ன செய்வேன்? இந்த இரண்டு தினங்களும் எனக்கு ஓயாது வேலை யிருந்தது அவ்வரண்மனையில். திடீரென்று வந்துவிட்டால் ஏதாவது என் மீது சந்தேகங் கொள்ளமாட்டார்களா?

வஸே. ஆம் உன்மீதும் குற்றமில்லை; இப்பொழுதாவது வந்து கூறினையே அம்மட்டும். சரிதான், நீ விரைவிற் சென்று இன்னும் அங்கே என்ன நடக்கிறதென்று தெரிந்து அப்போதைக் கப்போது என்னிடங் கூறிக்கொண்டிரு.

நீ. அப்படியே, அம்மணி, அதை நான் மறப்பேனா? ஒரு காலும் மறக்கமாட்டேன்.—அம்மா, என்னுடைய தமயனார் அமிர்தகேசரியைப்பற்றி முன்பே தங்களிடம் கூறியிருக்கிறேன். அவர் எப்படியாவது நம்முடைய ராஜகுமாரருக்குக் கண்டிருக்கும் வியாதியைப் போக்கிவிடுவதாகக் கூற

கிருர். எப்படியாவது தாங்கள் மஹாராஜா விடம் கூறி அவரை நமது அரண்மனை வயித்தியராக ஏற்றுக்கொள்ளும் படிச் சொல்லவேண்டும்.

வனே. அதற்கென்ன? அப்படியே ஆகட்டும், நீ போ; நான் சொன்னபடி மாத்திரம் செய்.

நீ. அப்படியே, அம்மா; நான் பிறகு அழைத்து வருகிறேன் அவரை. [போகிருள்.

வனே. இதென்ன சங்கடம்! நான் பத்மாவதிக்குத் தீமை நினைத் துச் செய்யுந் தொழில்களெல்லாம் அவளுக்குக் கடைசி யில் நன்மையாய் முடிக்கின்றனவே! இப்பொழுது மனோ ஹரன் வெற்றிவீரனுகத் திரும்புவானுயின் இதுவரையில் நான் பட்டபாடெல்லாம் வீணுக்கு விழலுக்கு முத்துலை கட்டி யிறைத்ததேயாகும். இம்மனோஹரன் உயிருட னிருக்குமளவும் பத்மாவதியை நான் அசைக்க முடியாது சீ! சீ! இனி நான் தாமதிக்கலாகாது. எப்படியாவது மனோஹரனுடைய உயிருக்கு வழி தேடவேண்டும். மற்ற வர்களெல்லாம் எனக்குச் சமான மானவர்களன்று.

பௌத்தாயனர் வருகிருர்.

பௌ. அம்மணி, நமஸ்காரம்.

வனே. வாரும் பௌத்தாயனரே—ஏதோ முக்கியமான சமாசாரம் சொல்ல வந்தாற்போல் தோற்றுகிறது. என்ன முகம் வெளுத்துக் காட்டுகிறது?

பௌ. வேறொன்றும் விசேஷமில்லை. மனோஹரர் நேற்றைத் தினம் பாண்டியனது படைகளைச் சந்தித்து அவைகளை நன்ருக முறி யடித்தபின்னர், பாண்டியனது பட்டணத்துக் குட் பிரவேசித்து முத்து விஜயனைக் கொன்று பட்டணத் தையும் கைப்பற்றியதாகவும், சீக்கிரம் எல்லா வேலைகளையும் முடித்துக்கொண்டு திரும்பி வருவதாகவும் செய்தி வந்தது மஹாராஜாவுக்கு.

வனே. பௌத்தாயனரே, நாம் நமது வசமாக்கி யனுப்பிய இரண்டு படைவீரர்களும் என்ன வாயினர்?

பௌ. அதை மெல்ல விசாரித்தறிந்தேன். மனோஹரன் ஓர் உதவியும் தனக்கு வேண்டாமென்று கூறி, மூத்து விஜய பாண்டியனுடன் வாள் யுத்தம் புரியும்பொழுது, ஓர் பக்கமாக இருந்து அவர்களிருவரும் மனோஹரன் மீது பாணத்தை யெய்ய, அதை யெப்படியோ பார்த்துக்கொண்டிருந்த ராஜப்பிரியன் அப்பாணத்தைத் தன் மார்பிற்றாங்கித் தடுத்து, அவ்விருவரையுங் கொன்று விட்டானாம்!

வனே. ராஜப்பிரியனா? அவனுக்கு அவ்வளவு வீரம் எங்கிருந்து வந்தது?

பௌ. ராஜப்பிரியன் சமாசாரம் உங்களுக்குத் தெரியாது. அவன் பயந்தவன்போல நடிப்பதெல்லாம் அவ்வளவும் வேஷம், அவனையும் சுத்த வீரனென்று நினையும். அவனில்லாதிருப்பானாயின் மனோஹரன் இதுவரையில் இறந்து நமதெண்ணம் நிறைவேறி யிருக்கும்.

வனே. அவையெல்லாம் மிருக்கட்டும் மேல் நடக்கவேண்டிய காரியத்தைப் பற்றி யோசிப்போம்—வேறு வழியில்லை!—பௌத்தாயனரே, உமக்கு முதன் மந்திரியாகவேண்டுமென்று உண்மையில் இச்சை இருக்கிறதோ?

பௌ. அம்மணி, அதை நான் தங்களிடம் பன்முறை கூறியிருக்கிறேன். எல்லாம் தங்களுடைய சித்தம். தாம் மனது வைத்தால் ஆகாமற்போமோ எக்காரியமும்? தாங்கள் மஹாராஜாவிடம் ஒரு வார்த்தை கூறுவீராயின் அந்த க்ஷணமுதல் நான் பிரதான மந்திரிதான்!

வனே. ஆனால் நான் உமக்கொரு கட்டளை யிடுகிறேன், அதன்படி செய்கிறீரா?

பௌ. என்னாற் கூடுமானதானாற் செய்யத் தடையில்லை.

வனே. இந்த க்ஷணம் புறப்பட்டுப்போய்—மனோஹரனை—எப்படியாவது—கொன்று—வருகிறீரா?

பௌ. அம்மணி! அது அசாத்தியமான காரியம்! எவ்வளவோ இவ் விஷயங்களிற் கைதேர்ந்த அந்த இரண்டு வீரர்களால் ஆகாமற்போன காரியம் என்னாலாகப்போகிறதா? அவனைக் கொல்வது தவிர வேறேதாவது கட்டளையிடும் செய்கிறேன்.

வனை. ஆனால்—உடனே புறப்பட்டுப்போய் அவனிடத்திலிருக்கிற உடைவாளை எப்படியாவது அபகரித்து வந்துவிடும். பிறகு செய்யவேண்டியவற்றை அப்புறம் கூறுகிறேன். மனோஹரன் இங்கு வருமுன் அவனது உடைவாளுடன் நீர் வந்து சேரவேண்டும். இதாவது செய்வீரா?

பௌ. இது சாத்தியமான காரியம். இதோ புறப்படுகிறேன். அம்மணி, தங்கள் தயவிருக்கவேண்டும். இப்பிரயத்னத்தில் எனதுயிர் போனாலும் போகும். ஆயினும் உமக்காகத் துணிகிறேன். ஞாபக மிருக்கவேண்டும்.

வனை. நீர் ஒன்றும் அஞ்சவேண்டாம். புறப்படும் சீக்கிரம். எனக்குதவி செய்தவர்களை நான் ஒருக்காலும் மறக்க மாட்டேன். [தூரத்தில் ஒரு கூச்சல் கேட்கிறது.] பௌத்தாயனரே! அதென்ன சப்தம்?

பௌ. நான் சென்று கேட்டுவரவா விரைவில்?

வனை. வேண்டாம். போகும்போது என்னவென்று விசாரித்து யாரிடமாவது கூறி இங்கனுப்பிவிட்டு, நீர் நேராக உம்முடைய வேலையை நோக்கிச் செல்லும். ஒரு க்ஷணப் பொழுதும் இனித்தாமதிப்பின் நம்முடைய காரியம் சித்தி பெறாது, புறப்படும்.

பௌ. ராஜமகிஷி, நான் பெரிய குடும்பமுடையவன், நான் இறப்பேனாயின் என் குடும்பத்தைத் தாம் தான் காப்பாற்ற வேண்டும்,—

வனை. ஒன்றும் அஞ்சாதீர் நீர்போம். [பௌத்தாயனன் போகிறான்] ஐயோ பாவம்! மறுபடியும் இவனை நான் உயிருடன் காண்பது அசாத்தியம்! எனக்காக வீணில் எத்தனை பெயரை

நான் மாளும்படிச் செய்கிறேன். இதனால் நானடைந்த பயனென்ன? இக்காரியத்தில் நான் கைவிட்டுக் கொண்டநாள் முதலாக ஒரு நிமிஷமேனும் எனக்கு மன சஞ்சல மில்லாதிருந்த தில்லையே! எந்நேரமும் எங்கு நாம் செய்யும் சூழ்ச்சிகள் தவறிவிடுகின்றனவோ, எங்கு பிறர் அவைகளைக் கண்டுபிடித்து விடுகின்றனரோ, எங்கு பத்மாவதியிடம் மறுபடியும் மஹாராஜாவுக்கு அன்பு பிறந்துவிடுகிறதோ என்னும் கவலை பாதித்துக்கொண்டே யிருக்கிறதல்லவா? மனோஹரனைக் காணும் பொழுதும், அவனைப் பற்றிக் கேட்கும்பொழுதும், அவனது தீரத்தை நினைக்கும்பொழுதும் என் மனம் எவ்வாறு நடுநடுங்குகிறது! மனோஹரன் பத்மாவதி குமாரனாகவும் விஜயாளுக்கு மாரனாகவும் எனக்கு மாறனாகவும் உதித்திருக்கிறானே! என்ன சங்கடங்கள்! எங்கு நோக்கினும் தொந்தரவு தான்; நான் பத்மாவதியின் தோழியாய்ச் சேர நாட்டிலிருந்து இங்கு வந்த பொழுதிருந்ததைவிட இப்பொழுது நான் அதிகமாயனுபவிக்கும் சுகமென்ன? கவலையுற்ற கருடனாய் வாழ்வதினும் கவலை யற்ற காகமாய் வாழ்வதே மேலாகும்! இத்தொல்லைகளை யெல்லாம் விட்டு ஒருவரு மறியாதபடி எங்கேயாவது ஓடிப்போய்த் தொல்லையற்று என் வாழ்நாட்களைக் கழிக்கவா? பத்மாவதி தன் கணவனுடன் முன்பு போல சுகமாய் வாழட்டுமே, இவர்களைப் பிரித்த பாவம் இன்னும் எனக்கெதற்கு? சீ! என்ன வாழ்வு—

ஒரு தோழி வருகிறாள்.

யார் அது? என்ன சமாசாரம்? நான் அழையாதிருக்கும் பொழுது என்னிடம் வரவேண்டாமென்று எத்தனை முறை உன்னிடம் கூறியிருக்கிறேன்?

தோ. ஆம், உண்மைதான், ஆயினும் பௌத்தாயனர் சீக்கிரம் உம்முடன் ஒரு சேதி கூறிவரும்படி யனுப்பினார்.

வஸே. ஆம், ஆம்! என்ன சமாசாரம்? என்ன சொல்லச் சொன்னார்?

தோ. இளவரசர் ஜெயம்பெற்று நம்முடைய பட்டணத்தை நோக்கித் திரும்பி வருவதாகவும், அதிவீரசேர மஹா ராஜனுடைய வஜ்ர சிங்காதனத்தைப் பாண்டியனிட மிருந்து மீட்டுத் தன் தாயாரிடம் இளவரசர் அனுப்பியிருக் கிறதாகவும் சொல்லச் சொன்னார்.

வஸ. எங்கே அந்த சிம்மாசனம்? பத்மாவதியிடம் போய்ச் சேர்ந்துவிட்டதா?

தோ. இல்லை, இப்பொழுதுதான் அதை மஹாராஜாவுக்குக் காண் பித்துவிட்டு அந்த அரண்மனைக்கு எடுத்துச் செல்கிறார்கள் சேவகர்கள்.

வஸ. நீ உடனே ஓடிச்சென்று, அந்த ஆட்களை நான் கட்டளை யிட்டதாகக்கூறி, மறுபடியும் மஹாராஜாவிடம் அதை எடுத்துப்போகச் சொன்னதாகச் சொல். விரைந்து செல்! பத்மாவதியிடம் அந்தச் சிம்மாசனம் போய்ச் சேருமா யின் உன்னை அரண்மனையினின்றும் நீக்கிவிடுவேன்!

தோ. ஒரு வேளை பட்டமகிஷி கோபித்துக் கொண்டால்—

வஸ. பட்டமகிஷியாவது! யார் பட்டமகிஷி? நான் தான் பட்ட மகிஷி! போ, நான் சொன்னபடி செய். இல்லா விட்டால் மஹாராஜாவிடம் கூறி உன்னைச் சிரச்சேதம் செய்துவிடும் படி செய்வேன்! என் முன்னில்லாதே! [அறைக்கு வெளியில் பிடித்துத் தள்ளுகிறாள்.] சீ! என்ன தான் மஹாராஜா என் கைவசத்திலிருந்தாலும், பலருக்கு முன்பாக சபையில் என் னைத் தமது மனைவியாக ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யா விட்டால் என் பெருமை எதற்குதவும்? சீ! இதைவிட இறப்பதே மேலாகும்!—ஆம், ஆகட்டும்! நாளைத்தினமே மஹாராஜா என்னை பத்மாவதிக்குச் சமானமான ஸ்திதியில் பலரறிய ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யாவிட்டால் நான் வசந்தசேனையன்று! நாளை நவராத்திரிகொலுவின் முதல் நாளல்லவா? சபையில் இந்தப் பத்மாவதியின் சிம்மாசனத் திலேயே மஹாராஜா என்னைத் தமதருகில் உட்காரவைத்

துக்கொள்ளும்படி செய்கிறேன்! இனி நான் தாமதிக்கலாகாது, உடனே மஹாராஜாவிடம் போகவேண்டும்.

[போகிறான்.]

காட்சி முடிகிறது.

---

## மூன்றாம் காட்சி.

இடம்-அரண்மனையில் வசந்தசேனையின் இருப்பிடத்தைச்சார்ந்த ஒரு வீதி

காலம்—மாலை.

வசந்தன் வேகமாய் ஓடி வருகிறான். விகடன் மெல்லப் பின்புறமாக வருகிறான்.

வ. சந்தேக மில்லை!

விக. சந்தேக மில்லை!

வ. கொஞ்சங்கூட சந்தேக மில்லை.

விக. கொஞ்சங்கூட சந்தேக மில்லை.

வ. சந்தேக மில்லை ஐயா, இண்ணு!

விக. ஆமையா, சந்தேகமே யில்லை!

வ. என்னத்துக்கு?

விக. ஆ!—அதுதான் உங்களைக் கேக்கணுமிண்ணு இருந்தேன்; என்னாத்துக்குச் சந்தேகமில்லை?

வ. உலகங் கெட்டுப் போச்சையா இன்றேன்!

விக. சந்தேகமில்லை, உலகந்தான் கெட்டுப் போச்சே, கேட்பானேன்?

வ. ஐயா, ஒரு பேச்சு சொல்றேன், உலகம் கெட்டுப் போச்சு, கெட்டுப் போச்சு உலகம், போச்சு கெட்டு உலகம்-பூட்டுது! பூட்டுது! பூட்டுது!

விக. பூட்டுது! பூட்டுது! பூட்டுது!

வ. சந்தேக மில்லை!

விக. சந்தேக மில்லை. தங்களுக்குச் சந்தேகமென்பதே எது? மூளையிலே எதுவானாலும் இருந்தாலல்லவோ சந்தேகம் வர

ணும். அங்கேதான் ஒண்ணு மில்லேயே! நண்ணு சொன்னேங்கோ சொன்னாலும், ஒரு புத்தியில்லாத பேச்சு!

வ. ஏன் ஐயா? என்னே புத்தியில்லாதவனின்னு சொல்ரைங்கோ?

விக. தங்களே அப்படிச் சொல்வேனோ? புத்தியில் ஆதவன், சூரியனுக்குச் சமானமானவனே இண்ணு, சொன்னேன்.

வ. அதெல்லா மிருக்கட்டுமையா-இப்போ எனக்கு ராணி ஒரு வயித்தியனே ஏற்பாடு செய்திருக்கிறாங்களாமே, எனக்கு வயித்தியன் என்னாத்துக்கு இண்ணு ஒரு கேள்வி கேக்கறே?

விக. நண்ணு கேட்டைங்கோ ஒரு முட்டாள் கேள்வி. நானுங் கேக்கரே, என்னாத்துக்கு உங்களுக்கு வயித்தியன்? என்னாத்துக்கு?

வ. எனக்கு என்ன புக்தி கெட்டுப்போயிருக்குதா?

விக. என்னமா கெடும்? அது இருந்தா அல்லவோ கெட? அது இல்லவே யில்லயே! என்னமா கெடும் அது?

வ. சந்தேகமில்லே! இந்த வயித்தியனுக்கு பயித்தியம் புடிச்சியிருக்குது!

விக. சந்தேகமில்லே! வயித்ய மிண்ணு என்ன, பயித்திய மிண்ணு என்ன? வயித்தியரெல்லாம் பயித்தியம் புடிச்சிப்போனவங்கதானே.

வ. உம்—வயித்தியரு என்ன மருந்து கொடுப்பாரு?

விக. ஏ! என்ன கொடுக்கப்போறாரு? நேர்வாளம் சீர்வாளம், ஒரு பத்து பலம் கொடுக்கப்போறாரு அவ்வளவுதான், அப்றம் கொடுக்றதெது? அத்தோடே சரி!

வ. எனக்கு மருந்து கொடுத்தா மண்டேயே பேத்துடமாட்டேனு! சந்தேகமில்லே!

விக. சந்தேகமில்லே, உங்கவீரம் கேப்பானேன்? பூரம்தானே!

வ. ஆமாம்—ஒருவேளே அம்மா கோவிச்சிக்கினு என்ன செய்யாது?

விக. ஆ!—அது வொரு சந்தேக மிருக்குது—என்ன செய்ய லாம்?

வ. ஐயர்! நான் சொல்றபடி செய்யறிங்களா? மொள்ள அந்த வயித்தியரே அனுப்பிச்சிடுங்க, உங்களுக்கு இந்த முத்து மாலே தர்ரேன்.

விக. ஆமாம், அப்புறம் உங்க பழய வயித்தியரே தெரித்தூட் டேன் இண்ணு, சின்னராணி கோவிச்சிக்கிறுங்களே, அப் புறம் இதுக்கும் கோவிச்சிக்கிறு?

வ. அதெல்லாம் நான் சொல்லிடுறேன்.

விக. ஐஐயோ! அதோ வர்ராப்போலே யிருக்குதையா வைத்தி யரு உங்களே தேடிக்கினு! எங்கேயாலும் ஒளிச்சிக்கிங் கோ! ஒளிச்சிக்கிங்கோ! நான் பேசி அனுப்பிச்சூட்றேன்! ஒளிச்சிக்கிங்கோ! ஒளிச்சிக்கிங்கோ!

[வசந்தனை யொரு பெட்டிக்குள் ஒளிந் துகொள்ளச் செய்கிறுன்.]

அதோ வர்ராப்போலே யிருக்குது, ஒரு வேடிக்க பண்ணு வோம். நம்பளும் அவரெப்போல் ஒரு வயித்திய வேஷம் போட்டுக்குவோம்! [போகிறுன்.]

எதிர்ப்புற மிருந்து நீலவேணியும் அமிர்தகேசரியும் வருகிறுர்கள்.

நீ. இங்குதானிரும். நான் போய்ச் சின்ன ராணி எங்கே என்று பார்த்து விட்டு வருகிறேன். [போகிறுன்.]

[அமிர்தகேசரி ஒரு புறமாக உட் கார்ந்து தன் ஓலைப்புஸ்தகத்தை விரித்துப் படிக்கிறுன். விக டன் மெல்ல வந்து அவன் பக் கத்திலுட்கார்ந்து தானும் ஒரு ஓலைப் புஸ்தகத்தை விரித்து அவனைப்போல் படிக்கிறுன்.]

அ. [கொஞ்சம் திகைத்து] ஐயா! தாங்கள்—

விக. உம்—

அ. தங்களுடைய—

விக. உம்—

அ. தங்களுடைய நாமதேயம்—

விக உம்—

அ. தங்களுடைய நாமதேயத்தைக் கேட்கலாமோ?

விக. கேட்கலாம்.

அ. தங்களுடைய நாம தேய மென்ன?

விக. பன்ரெண்டி லொன்று சொல்லுங்கள்.

அ. தங்கள் பெயரென்ன வென்று கேட்கிறேன்.

விக. அதைத்தான் ஜோசியம் பார்த்துச் சொல்லுகிறேன்.

அ. இதேது பயித்தியம்போ லிருக்கிறதே!

விக. அடடா! நீங்களா? அண்ணா! அண்ணா! அண்ணா!

[அவனைத் தழுவி கட்டிக்கொண்டு]

இத்தனை நேரம் தெரியாமல் போச்சே! என்னெ மறந்துப் பூட்டைங்களா என்ன? அண்ணா! எல்லாரும் வீட்டிலே க்ஷேமந்தானே? அண்ணி என்னமா யிருக்கிறாங்க?

அ. அப்பா என்னை விடு விடு! நீ யாரப்பா? எனக்குத் தம்பி ஒருவனு மில்லையே!

விக. அண்ணா! இதுக்குள்ளே மறந்தூட்டைங்களா? நான் தான் உங்க தம்பி யாச்சே!

அ. தம்பியாவது? நீ எப்படி எனக் குறவு? நீ யார்?

விக. எப்படி உறவா? இதுக்குள்ளே மறந்தூட்டைங்களே அண்ணா! உங்க பாட்டனுக்குப் பாட்டனெயும் என் பாட்டனுக்குப் பாட்டனெயும் ஒரே புலி முழிங்கூட்டுதே, மறந்தூட்டைங்களா? நீங்கதான் மறந்துட்டாலும் நான் மறக்க மாட்டேன் நம்பளுடைய பந்துத்வத்தே!

அ. ஐஐயோ! அப்படி யொன்றுமில்லை. நான் உன் பந்து வல்ல, எனக் குன்னைத் தெரியாதே! தெரியாதே!

விக. இல்லெ, இல்லெ, நீங்க என் அண்ணாதான்! நான் விடவே மாட்டேன்!

அ. ஐயோ சனி—என்னை விடப்பா! நீ என் தம்பிதான், விடு விடு!—இதென்ன பெரிய இழவாக இருக்கிறது—அப்பா, இந்த அரண்மனையில் உனக் கென்ன வேலை?

விக. அந்த வேலெயெ யேன் கேக்கரைங்கோ? சின்ன ராணிக்கு ஒரு புள்ளெ இருக்கிருரு; பெரிய பயித்தியம்! அவரோடே எப்பவும் இருந்துக்கினு அவர் ஒருத்தருக்கும் கெடுதி செய் யாமலிருக்கும்படி பாத்துக்கிறது.

அ. அவர் என்ன எல்லோரையும் அடிக்கிருரா என்ன?

விக. அந்த எழவே கேக்காதைங்கோ! யாராளுலும் புதுசாவந்தா போதும்; பாத்துட்டாரோ யமலோகந்தான்!

அ. அப்படியா?

விக. ஆமாம். நீங்க என்னுத்துக்கு வந்தைங்கோ அண்ணு?

அ. அந்த ராஜகுமாரருக்கு வயித்தியஞ் செய்ய வந்திருக்கிறேன், சின்ன ராணியின் உத்திரவுப்படி. அப்பா, நீ சொல்லும் படியான துஷ்டராயிருந்தால் நான் என்ன செய்வது?

விக. அண்ணு! அண்ணு! ஐஐயோ! இதென்ன சங்கடமா யிருக்குது! உங்களே பாத்தாருண்ணு தவிடு பொடி யாக்கி விடுவாரே! இதுக் கென்னு செய்றது?

அ. இதற் கொரு யுக்தியு மில்லையா?

விக. ஒண்ணுமில்லே! சந்தேக மில்லே!

வ. [பெட்டிக்குள்ளிருந்து] சந்தேக மில்லே! சந்தேக மில்லே!

அ. யார் அது? யார் அது?

விக. ஐஐயோ அவர் இங்கு வர்ராப்போலே இருக்குதே! எதி ரிலே பார்த்தா உங்க பாடு தீந்துது!

அ. அப்பா! நான் என்ன செய்வது? என்ன செய்வது?

விக. நான் சொல்றபடி கேளுங்கோ, இங்கே எங்கே யானும் ஒளிச்சிக்கினு இருங்கோ, நான் போயி சமாதானப்படித்தி அழெச்சிக்கினுவரேன்.

அ. எங்கே ஒளித்துக்கொள்வது? எங்கே ஒளித்துக்கொள்வது?

விக. அதோ அந்தப் பெட்டியிலே ஒளிச்சிக்கிங்கோ!

[பெட்டியைக் காட்டிவிட்டுப் போகிறான். அமிர்தகேசரி பெட்டியைத் திறந்து உள்ளே நுழையப் பார்க்க வசந்தன் அதனுள்ளிருந்து வெளியிற் கிளம்பி அமிர்தகேசரியைப் பிடித்துக்கொண்டு, 'சந்தேகமில்லே! சந்தேகமில்லே!' என்று கூச்சலிடுகிறான் அமிர்தகேசரி பயந்து போகிறான்.]

கூச்சலைக்கேட்டு நீலவேணியும் வசந்தசேனையும் ஓடி வருகிறார்கள்.

வஸே. இதென்ன! இதென்ன!

வ. அம்மா, நான் இங்கே ஒளிச்சிக்கினு இருந்தேன்; இவ வந்து என் தலமேலெ உக்காரப்பாத்தாரு, நான் ஒத்துக்கு வேணு? மாட்டேன்—சந்தேகமில்லே! நீங்க ஒணுமிண்ணு யாரெயிண்ணாலும் கேளுங்கோ!

அ. ராஜமகிஷி! நான் அறியாமற் செய்த பிழையை மன்னிக்க வேண்டும். இங்கே யாரோ ஒருவர் இருந்தார், அவர் ராஜ குமாரர் வருவார், உன்னைக் கண்டால் கெடுதி செய்வார் இதற்குள் மறைந்து கொண்டிரு, என்று என்னிடம் கூறினார்—

விகடன் தன் வேஷத்தைக் களைந்துவிட்டு மறுபடியும் மெல்ல வருகிறான் ஒரு புறமாக.

விக. அம்மணி, நமஸ்காரம்; என்ன சமாசாரம்? என்ன சங்கதி? என்ன விசேஷம்? என்ன தாத்பரியம்?

வஸே. விகடா! இதெல்லாம் உன் வேலையோ?

விக. என்ன அம்மணி! எனக்கொண்ணுந் தெரியாதே; நான் தூங்கிக்கினு இருந்தேன், கூச்சல்கேட்டு என்ன விஷய மிண்ணு ஓடிவந்தேன்; தூக்கமெல்லாங் கெட்டுது. என்ன சேதி?

அ. அம்மணி, இவர்தான் என்னை மறைந்து கொள்ளும்படிச் சொன்னதென்று நினைக்கிறேன்.

வ. பாக்கைங்களா ஐயா! உட்டேனா நானு? சந்தேகமில்லே!

வஸே. விகடா! நான் இம்முறையும் உன்னை மன்னித்தேன்! இனி இம்மாதிரியான துர்க்கிருத்தியங்கள் செய்யாதே! இதென்ன சங்கடமாயிருக்கிறது!

விக. இல்லெ அம்மணி, நான் மறுபடியுஞ் செய்யவேமாட்டேன். சந்தேகமில்லே!

வ. ஆமாம், அம்மா சந்தேகமேயில்லே!

வஸே. நீலவேணி, இவர்தானா உன் தமையனாராகிய வைத்தியர்?

விக. ஆமம்மா, இவர்தான் என் தமயனாராகிய பயித்தியர்.

நீ. இவர் அரண்மனை விதூஷகர், இவர் கூறுவதைக் கவனிக்க வேண்டாம் அண்ணா.—[வசந்தசேனையுடன்] ஆமாம், அம்மா, எப்படியும் ராஜகுமாரருக்குக் கண்டிருக்கிற வியாதியை நீக்கிவிடுவதாகக் கூறுகிறார்.

அ. அம்மணி, ஈஸ்வரனுடைய கிருபையினாலும், எனது குருவின் கடாக்ஷத்தாலும் நமது இளவரசருக்குக் கண்டிருக்கிற வியாதியைச் சீக்கிரத்தில் தீர்த்துவிடுவேன்—இது பித்தத்தைச் சார்ந்த வியாதி—

வ. என்னா ஐயா! எனக்கு பயித்தியமா புடிச்சிப்போச்சி?

வஸே. வசந்தா! பேசாமல் இரு சற்று! எனக்குக் கோபம் வரும்படி செய்யாதே!

அ. அம்மணி, என்னுடைய கைவல்லபம் இங்கே தெரியாது—

விக. ஆமாம், இங்கே என்னடா தெரியும்? அங்கே போனவங்களே கேட்டா தெரியும்!

அ. என்னிடத்திலே இந்த பித்தத்திற்கு ஒரு மாத்திரை இருக்கிறதுங்கோ—

விக. அந்த மாத்திரெ சாப்பிட்டவுடனே வைகுண்ட யாத்திரை தானுங்கோ!

அ. இல்லே, ஐயா, அப்படியல்ல அந்த மாத்திரையை மூன்று வேளை புசித்தால் அப்புறம் மருந்தே சாப்பிடவேண்டியதில்லே.

விக. வாஸ்தவம், மூணுவேளெ சாப்பிட்ட பிற்பாடு, அப்புறம் மருந்து என்னத்துக்கு? ஆளே பூட்டா அப்புறம் மரு தெங்கே சாப்பிட்றது? சந்தேகமில்லை!

வ. சந்தேகமில்லை.

வனே. விகடா! நீ பேசாமலிருக்கமாட்டாயா?

விக. இல்லெ, அம்மணி, பேசாமலிருக்கிறத்துக்குத்தான் மாத்திரெ சொல்றாரே எங்க அண்ணெ!

அ. ராஜபத்தினி, இதேமாதிரியாக எங்கள் ஊரில் ஒருவருக்கு வியாதி கண்டிருந்தது நாலைந்து மாதங்களுக்கு முன்பாக அநேக வைத்தியர்கள் வந்து பார்த்து அசாத்திய மென்று கைவிட்டார்கள். பிறகு நான் போய் இந்த மாத்திரையை மூன்று வேளை கொடுத்தேன், போய்விட்டது.

விக. உயிரா? ஐயோ பாவம்!

அ. இல்லை, ஐயா, நோய் போய்விட்டது.

விக. வாஸ்தவந்தான் நோய்போய் விட்டது, அத்தோடே அவரும் போய்விட்டார். தாங்களென்ன கால்மாடோ தலைமாடோ?

நீ. பேசாமலிரு மையா! — அம்மா, எப்படியாவது தாங்கள் அனுக்கிரகிக்க வேண்டும். —

வனே. நீலவேணி, அதற்கென்ன? அப்படியே ஆகட்டும், நான் சொன்னபடி செய்யாமற்போவேனா? [அமிர்தகேசரிக்கு] ஐயா, உம்மை இளவரசருக்கு வயித்தியராக நியமித்தேன். இன்று முதல் ஆரம்பித்து சீக்கிரம் இவனது வியாதியைத் தீர்க்கவேண்டும். உம்முடைய பெயரென்ன?

அ. அமிர்தகேசரி.

விக. அமிர்தவேசரி!

அ. இல்லை, ஐயா, பரிகாசம் பண்ணுதீர், அமிர்தகேசரி.

விக. மன்னிப்பு நான் சொன்னது தப்புதான், இதுவேசரி!

வனே. பேசாமலிருக்கமாட்டாய் நீ? வா, உனக்குத்தகுந்த தண்டனை விதிக்கிறேன்! வசந்தா, இதோ இருக்கிற அமிர்த

கேசரி சொற்படி நீ நடந்துவரவேண்டும். இல்லாவிட்டால் உன்னை நான் தண்டிப்பேன். விகடா, வசந்தன் அமிர்த கேசரி சொற்படி நடக்கும்படிச் செய்யவேண்டும் நீ. அவர் களிருவரும், சச்சரவிட்டுக்கொண்டால் உன்னை அரண் மனையினின்றும் நீக்கிவிடுவேன்.

விக. அம்மணி! இது நல்ல வேலெயாயிருக்குதே; இவங்க ச்ண்டே போட்டுக்குனு எனக்கு தண்டனெயா? அம்மணி; இந்த வேலெ எனக்கு வாணும், வாணும்!

வனே. விகடா, அப்படியல்ல அவர்கள் சமாதானமாயிருக்கும்படி செய்; வசந்தன் வியாதி நீங்கினால் உனக்கு நல்ல பரிசளிக் கிறேன்.

[ஒரு தாதி வந்து வசந்தசேனையின் செவியில் ஏதோ ரகசியமாய்க் கூற, அவளுக்குத் தானும் ரகசியமாக் விடைகொடுத் தனுப்புகிறாள்.]

சரிதான், நீங்கள் புறப்பட்டுச் செல்லுங்கள்.

[அமிர்தகேசரி, விகடன், வசந்தன், நீலவேணி போகிறார்கள்.]

இப்பொழுதுதான் நமக்கு நல்லகாலம் பிறந்திருக்கிறது! இனி பத்மாவதி இறப்பாளென்பதற்குச் சந்தேகமில்லை! அவளிறப்பாளாயின் மனோஹரனும் இறப்பான் துயராற் றாது; விஜயாள் கருவோடு உடன் செல்வாள். பிறகு நாம் கவலையற்று வாழலாம்—அப்பா!

பௌத்தாயனர் வருகிறார்.

வனே. முதல் மந்திரி, பௌத்தாயனரே! மெச்சினேன் உமது புத்தியை!

பௌ. [மனோஹரன் உடைவாளை அவளிடம் கொடுத்து] தாங்களிட்ட கட்டளையை நிறைவேற்றிவிட்டேன்; ஆயினும் எப்படி உயி ருடன் தப்பி வந்தேனென்று எனக்கே ஆச்சர்யமாயிருக் கிறது!

வனே. அந்தச் சிங்கத்தின் வாயினின்றும் எப்படி தப்பி வந்தீர் ?

பௌ. அம்மா, நான் போகும்பொழுதே நீலவேணியிடமிருந்து அந்த வாளைப்பற்றிய எல்லா விஷயங்களையும் ஆதியோடந்தமாக அறிந்துகொண்டேன். பிறகு ஓர் சந்நியாசி வேடம் பூண்டு நமது சேனைகள் தங்கியிருந்த இடத்தைச் சார்ந்து, மனோஹரரிடம் அவரது தாயார் ஆசியுடன் அனுப்பியதாகக் கூறினேன். உடனே அவர் மகிழ்ந்து எனக்கு வேண்டிய உணவு முதலியவற்றைக் கொடுப்பித்து, எப்பொழுதும் தன் பக்கலிலேயே யிருக்கும்படி கூறினார். இது தெய்வாதீனமெனக் கருதி சந்தோஷத்துடன் நான் உடன்பட்டு, நடுநிசியில் சமயம் பார்த்து அவர் அருகில் வைத்திருந்த உடைவாளை மெல்லென எடுத்துக்கொண்டு புறப்பட்டு வந்துவிட்டேன்.

வனே. மனோஹரன் உம்மீது சிறிதும் சந்தேகங் கொள்ளவில்லையா?

பௌ. நான் தனது தாயாரிடமிருந்து வந்ததாகக் கூறியது முதல் என்மீது எள்ளளவும் அவர் சந்தேகங் கொள்ளவில்லை.

வனே. மிகவும் சந்தோஷம். காலத்தில் நீர் எனக்குச் செய்த இப் பேருதவியை நான் ஒருகாலும் மறவேன்.—மனோஹரன் எப்பொழுது இங்கு வருவதாக உத்தேசித்திருக்கிறான் தெரியுமா உமக்கு ?

பௌ. நாளத்தினம் காலை வருவதாக மஹாராஜாவுக்குச் சேதி வந்திருப்பதாக நானறிந்தேன்.

வனே. அப்படியா ? ஆனால் தாமதிக்கலாகாது! மனோஹரன் திரும்பி வருமுன் நமதெண்ணத்தை நிறைவேற்றிவிட வேண்டும்—பௌத்தாயனரே, நீர் இதுவரையில் செய்த உதவி ஒரு பெரிதன்று, இனிச் செய்யப்போகிறதே பேருதவியாம். அதையும் செய்வீரென்பதற்குச் சந்தேகமே இல்லை. இந்த உடைவாளை, ஏதாவது ரக்தத்தைப் பூசி, பத்மாவதியிடம் எடுத்துச் சென்று மனோஹரன் இறந்ததாகவும், இதை அதற்கு ஓர் குறியாக அவளிடம் அனுப்பிய

தாகவும் கூறி, எப்படியாவது பத்மாவதி புத்திர சோகத்தால் தற்கொலை புரியும்படி செய்யவேண்டும். பத்மாவதி இறந்த க்ஷணம் நீர் முதன் மந்திரியாய் விட்டீர் என எண்ணும்—புறப்படும் உடனே!—

பௌ. அம்மா, இது கஷ்டமல்ல பிறகு மனோஹரன் திரும்பி வந்தால் என் செய்வது?

வஸ. நீர் உரு மாறிப் போம் இப்பொழுது; பிறகு அவன் வருவானாயின் நடக்கவேண்டியவற்றிற்கு நானிருக்கிறேன். புறப்படும் உடனே!—

பௌ. இதோ புறப்பட்டுவிட்டேன். [போகும்பொழுது ஒரு புறமாக] சீ! என் புத்தியை என் சொல்லுவது? ஆயினும் பார்ப்போம். [போகிறான்.]

வஸ. பத்மாவதி யிறந்தாலும் இறக்காவிட்டாலும் பௌத்தாயனன் இறப்பானென்பதற்குச் சந்தேகமில்லை ஐயோ! எனது வலையில் அகப்பட்டு எத்தனை பெயர் மாள்கிறார்கள்! [போகிறாள்.]

காட்சி முடிகிறது.

## நான்காம் காட்சி.

இடம்—அரண்மனையைச் சார்ந்த காவிரிக் கரையோரமுள்ள ஓர் வசந்தமண்டபம். காலம்—சூரிய அஸ்தமானம்.

பத்மாவதி ஓர் பளிங்காசனத்தின்மீது வீற்றிருக்க, நீலவேணி அருகில் நின்று காற்றெழ மெல்ல விசிறுகிறாள்.

விஜயாள் கரையோர முள்ள படியின்மீது ஒரு தோழியுடன் உட்கார்ந்திருக்கிறாள்; பத்மாவதிக்குச் சற்று தூரத்தில் சத்தியசீலர் உட்கார்ந்திருக்கிறார்.

ச. —ஆகவே அம்மணி, கெடுதியின் வழி நன்மை யுதிக்குமென உறுதியாகக் கடைபிடித்து, நமக்கொரு தீங்கு நேரிடுங்கால், இதுவும் ஏதோ ஒரு நன்மைக்கே நேர்ந்ததெனப் பொறுத்து, அம்மட்டும் இதினும் கேடான ஓர் விபத்து நமக்குச் சம்பவிக்காதொழிந்ததேயெனச் சந்தோஷப்

பூமிதலே முறைமையாம். முற்றும் உணர்ந்த தம்மை யொத்தவர்களுக்கு நான் இவைகளை எடுத்துரைப்பது அநுவசியமேயாம்?

ப. ஆம், சத்தியசீலரே, நமக்கு நேரிடுங் கெடுதிகள் முடிவில் யோசிக்கு மிடத்து ஒரு விதத்தில், நமக்கு நன்மைகளாக முடிகின்றன. மனோஹரன் யுத்தத்திற்கு இச்சிறுவயதிற் செல்லவேண்டி வந்ததே என்று முன்பு வருத்த முற்றேன். அக்காலத்தில் நான் அவனை யுத்த முனைக் கனுப்பியிரா விட்டால், இப்பொழுது ஜெயம் பெற்று அவனடைந்த கீர்த்தியை எப்படி பெற்றிருப்பான்?

வி. ஒரு வேளை யுத்தத்தில் இறந்திருந்தால்?—

ப. அப்பொழுதுமென்ன? சுத்தவீரனுக யுத்தத்தில் இறந்தான் மனோஹரன் என்னும் கீர்த்தி என்றும் நிலைத்திருக்கு மல்லவா? புகழின்றி இப்புவியிற் பிறப்பதிற் பயனென்ன?

"தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

வி. மாமி, இன்றைக்கு எட்டு நாளாய்விட்டதே! இன்னும் வர வில்லையே?

ராகம்—நாயகி. தாளம்—அடதாள சாப்பு.

பல்லவி.

இன்னும் வரக்காணேன் மாமி
ஏது நான் செய்வேன் மாமி (இ)

அநுபல்லவி.

என்று வருவாரோ நாதன்
என்றேங்கு தென்றன் மனம் (இ)

சரணம்.

எட்டு நாளாயும் மாமி
இங்கு வரக்காணேனோ
அட்டி செய்யலு மாமோ
அபாய மென் நேர்ந்ததுவோ? (இ)

ப. கண்ணே ! ஏன் வருத்தப் படுகிறாய் ? எப்படியும் வருவான் சீக்கிரம் வருந்தாதே—

ராகம்—மோகனம். தாளம்—ரூபகம்

பல்லவி.

சந்தேகம் வேண்டாம் என் கண்ணே
நீ தான் தயிரியமாக இருப்பாயே (ச)

அனுபல்லவி.

எந்த விதத்தாலும் உன் கணவனுக்குப் பயமொன்றில்லை
எட்டு நாளைக்குள்ளே வருவான் தடையில்லை. (ச)

சரணம்.

போன இடத்தில் ஜெயமே கிடைத்துப்
புகழுடன் வருவான் பயமேன் ?
தான தருமம் செய்த தவமெல்லாம் வீண்போமோ
தனையன் சுகமாய் வருவான் தவித்திடலாமோ? (ச)

—சத்தியசீலரே, மனோஹரன் எப்பொழுது வருவதாகக் கூறினீர் ?

ச. மஹாராஜாவுக்கு நாளைத்தினம் இங்கு வருவதாகச் சேதி சொல்லி அனுப்பியிருக்கிறார். இந்தச் சந்தர்ப்பத்தில் விஜயாளுக்கு அவர் கூறிய மொழியை மறந்திருப்பினும் மறந்திருப்பார் ; இது மன்னிக்கத் தக்கதே.

வி. என்ன மன்னிக்கத் தக்கது ? வருகிறேன் என்று கூறிவிட்டு வராமலிருப்பது மன்னிக்கத் தக்கதோ?—பகைவரைத்தான் ஜெயித்தாய்விட்டதே, இனி சீக்கிரம் வந்து விடுகிறது தானே ?

ச. அம்மா, அப்படி யல்ல ; ஒரு தேசத்தை ஜெயித்த பிறகு செய்யவேண்டிய ஏற்பாடுகள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை எல்லாம் செய்துவிட்டுத்தானே வரவேண்டும் ?

ப. சத்தியசீலரே, மனோஹரன் பாண்டிய நாட்டினின்றும் வெற்றியில் கொண்ட பொருள்களில் ஏதாவது சிம்மாசனம் வணைப்பியிருக்கிறனா ?

சு. ஆம், அம்மணி. அது—மஹாராஜாவின் அரண்மனையிலிருக்கிறது. நாளைத்தினம் நவராத்திரி கொலு ஆரம்பமாகையால், அந்தச் சிம்மாசனத்தின்மீதிருந்து சபை நடத்தவேண்டுமென்று மஹாராஜா ஏற்பாடு செய்திருக்கிறார்.

ப. ஏது மஹாராஜாவுக்கு மனோஹரனிடம் அவ்வளவு பிரீதியுண்டாயது?—எப்படியாவது அவர்களிருவரும் சந்தோஷமாயிருந்தாற் போது மெனக்கு—

ஒரு தோழி வருகிறாள்.

தோ. அம்மா, யாரோ ஒரு பெரியவர் தங்களை உடனே பார்க்க வேண்டுமென்று வந்திருக்கிறார்; மனோஹர ரிடமிருந்து வந்திருப்பதாகச் சொல்லும்படி கட்டளையிட்டார்.

ப. அப்படியா? உடனே வரச்சொல் [தோழி போகிறாள்] மனோஹரன் தானாகவராமல் வேறொருவரிடம் என்ன சங்கதி சொல்லி அனுப்பியிருக்கக்கூடும்?

பௌத்தாயன் சந்நியாசி வேடம் பூண்டு வருகிறான்.

சுவாமி, இங்கு எழுந்தருள வேண்டும். தாங்கள் யாரோ தெரியவில்லை; மனோஹர னிடமிருந்து என்ன சமாசாரங் கொண்டு வந்தீர்?

பௌ. [உட்கார்ந்து] உலக வாழ்க்கை யென்பது அநித்யம்! நீரிற் குமிழி யாக்கை; நம்மா லென்ன இருக்கிறது? எல்லாம் ஜெகதீசன் செயல்—சிவ சிவ சிவ!

ப. சுவாமி, என் மைந்தன் மனோஹரன் க்ஷேமந்தானே?

பௌ. வருத்தப்படவேண்டாம், "குடம்பை தனித்தொழிய புட் பறந்தற்றே, உடம்போடு உயிரிடை நட்பு"!

வி. ஐயா! என் பிராண நாதருக்கு ஏதாவது கெடுதி நேரிட்டதா என்ன?

பௌ. "ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவாரோ?" ஆகவே நமது மனத்தை நாமே தேற்றிக் கொள்ள வேண்டும். ஆயினும் நமது மனோஹரர் கீர்த்தி யடைந்தே பிறகு—

ஜ. ஐயர்! என்ன சமாசாரம்? எங்களுக் கொன்றும் விளங்க வில்லை!

பௌ. தாங்கள்தானே மனோஹரருடைய தாயார்?—தங்களிடம் இந்த உடைவாளைச் சேர்ப்பிக்கச் சொன்னார் அறிகுறியாக!

[விஜயாள் மாமி! மாமி! எனக் கதறிக் கொண்டு பத்மாவதியின் மடிமீது வீழ்கிறாள்.]

ப. கண்ணே! மனோஹரா! [மூர்ச்சையாகிறாள்.]

ச. அம்மணீ! அம்மணீ! சற்று பொறும்; இதென்ன ஆச்சரிய மாயிருக்கிறது. மனோஹரர் வெற்றி யடைந்து நாளைத் தினம் திரும்பி வருவதாக சமாசாரம் சொல்லியனுப்பி யிருக்கிறார். அவர் எப்படி இறந்திருக்கக்கூடும்? ஐயா, சற்று விரைவில் விளங்கச் சொல்ல வேண்டும்—அம்மணி, நீங்கள் வருந்தவேண்டாம்.

பௌ. சந்தேக மொன்றுமில்லை, பாண்டியனை ஜெயித்து திரும்பி வரும்போது, நேற்றைத்தினம் இரவு, மனோஹரர் பாசறை யில் உறங்குங்கால், பாண்டியனது சேவகர்களில் தப்பிப் பிழைத்த சிலர், தங்கள் அரசன் இறந்த பழியைத் தீர்க்கும் பொருட்டு கபடமாய் அறைக்குட் பிரவேசித்து, மனோ ஹரரை மரணகாயப்படுத்திச் சென்றார்கள்.

ப. [எழுந்திருந்து.] சரி! இனி யோசிப்பானேன்? கண்ணே மனோஹரா! நாங்களும் இதோ வந்துவிட்டோம், பயப் படாதே! ஆயினும் நீ வீரனுக வாளுடன் போரில் மாளாது உறங்கும்பொழுது கொலை செய்யப்பட்டு இறக்கவேண்டி வந்ததல்லவா! கண்ணே! கண்ணே! [துக்கப்படுகிறாள்.]

ச. அம்மணி! நான் கூறுவதைச் சற்று கேளும். இதில் ஏதோ சூது இருக்கிறது. மனோஹரர் ஒருகாலும் இம்மாதிரியாகத் தமக்குச் சொல்லி யனுப்பியிருக்கமாட்டாரே! சற்று நிதா னியும். இவ்விஷயத்தை தீர விசாரிக்க வேண்டும்.

ப. இன்னும் விசாரிப்பதென்ன? சத்தியசீலரே, நமதரண் மனையின் ஓர் மூலையில் எரி மூட்டும்படி கட்டளையிடும்

உடனே. நாங்களிருவரும் அக்கினிப்பிரவேச மாகவேண்டும்! மனோஹரன் இறந்தபின் நாங்கள் உயிர்வாழ்வானேன்?

திடீரென்று மனோஹரனும் ராஜப்பிரியனும் வருகிறார்கள்.

வி. [மனோஹரனைக் கட்டிக்கொண்டு] பிராணநாதா! பிராணநாதா!

ப. [மனோஹரனை ஆலிங்கனம் செய்து] கண்ணே! மனோஹரா!

[மெல்ல நழுகப்பார்க்கும் பௌத்தாயனனை ராஜப்பிரியன் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுகிறான்.]

ப. கண்ணே! மனோஹரா!

ராகம்—கமாஸ்—தாளம்—சாப்பு

பல்லவி.

காணக்கிடைத்த தேதோ ஸுமந்தா
கண்ணே உன்னை நான் இன்று!

அநுபல்லவி.

பாணம் பட்டிறந்தா யென்று
பரதவித்த நான் இன்று

சரணம்.

பெற்ற வென்மனம் பெரிதுங் கலங்கிற்றே
உற்று மலர்ந்த உடல் மலங்கிற்றே
பற்றியெறிந்த வென் பாழ்வயிற்றினில்
பாலை வார்த்தாற்போ லின்று.

ரா. சுவாமி! தாங்கள் தானே! அப்பொழுதே நினைத்தேன். எங்கே போகிறீர்கள்? சற்றுப் பொறுங்கள். நானும் உடன் வருகிறேன்!

ம. அம்மணி! என்ன சமாசாரம்? இதென்ன உடைவாளில் ரத்தம்?—சத்தியசீலரே! இதெல்லாம் என்ன?

ச. இளவரசே! சற்றுத் தாமதித்து வந்திருப்பீராயின் உமது அன்னையும் மனைவியும் அக்கினிப் பிரவேசமாகி

இறந்திருப்பார்கள். சற்று முன்பாக இந்தக் கபடன் இவ்வுடைவாளை இக்கோலத்துடன் கொணர்ந்து, தாம் பகைவரால் உறங்கும் பொழுது மரண காய மடைந்து இறந்ததாயும், இறப்பதன்முன் இவ்வுடைவாளை அறி குறியாகத்தம தன்னைக் கனுப்பி, தாம் சென்ற விடத்திற்கு அவர்களையும் சீக்கிரம் வரும்படி வேண்டியதாயும் கூறினான்.

ரா. அரசே! ஏன், இப்பொழுதாவது என் சொல்லை நம்புவீரா? அப்பொழுதே இதில் ஏதோ சூதிருக்கிறதெனக் கூறினேனே!

ம. ராஜப்பிரியா! நம்பினேன்! நம்பினேன்! தோழா, என்துயிரை இரண்டாம் முறை காப்பாற்றினை. அப்பா, உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

ரா. எனக்கு நீர் செய்யவேண்டிய கைம்மாறொன் றிருக்கிறது. இந்த மஹானுபாவர் அங்கிருந்து வந்த வேகத்தில் உடம்பெல்லாம் மாசு படிந்திருக்கிறது. அதற்காக, கை கால்களைக் கட்டி இவருக்கு நான் காவேரி ஸ்நானம் செய்விக்க வேண்டும், உத்திரவளியும்.

ம. செய் அப்படியே! நானே கொன்றிருப்பே னிவனை!

ப. மனோஹரா, பொறு, அப்படி யொன்றும் செய்ய வேண்டாம், நாம்தான் இப்பெரிய ஆபத்தினின்றுந் தப்பினோமே, ஐயோ பாவம்! இவன் பிழைத்துப்போகட்டும், அவனை விட்டுவிடுங்கள்.

ரா. என்ன அம்மணி, இப் பாதகனையா விட்டுவிடும்படிச் சொல்லுகிறீர்கள்? உங்களை யெல்லாம் அழிக்கப் பார்த்தானே சற்று முன்பாக! இதனை மறந்திரோ இதற்குள்ளாக! இவனைத் தண்டியாது உயிருடன் விடுதலே பாபம்!

ப. அப்படியல்ல, இவன் தானாகச் செய்திருக்கமாட்டான். யாரோ ஏவியிருக்கவேண்டு மிவனை!—அப்பா, இனி இம்மாதிரியான தீய தொழிலிற் பிரவேசியாது புத்திசாலியாக வாழ்.

ம. ஆடே பாதகா! யாருடைய உயிரைப் போக்கப்பார்த்தனையோ அவர்களுடைய கருணையினால் உன் உயிர் தப்பினை. இனிமேலாவது இம்மாதிரியான துர்க்கிர்த்தியங்கள் செய்யாதே, போ.

ப. நீ யேன் இவ்வேளையில் கை யிட்டுக்கொண்டாய்? நாங்கள் உனக்கென்ன தீங்கு செய்தோம்? நீயார்?

பௌ. அம்மணி, எனதுயிரைக் காப்பாற்றினீர்கள்! இதை நான் மறவேன். நான் சந்யாசி யன்று, பௌத்தாயனன்!

எல்லோரும். பௌத்தாயனன்!

பௌ. ஆம் வசந்தசேனையினுடைய ஏவலினால் இத்தொழிலிற்கு உடன்பட்ட பௌத்தாயனன் நான்!

ம. ஆ! அப்படியா சமாசாரம்?

[பௌத்தாயனன் தலையைச் சேதிக்க உடைவாளை வீசுகிறான். பத்மாவதி அவனைத்தடுக்கிறாள்.]

ப. மனோஹரா! இவனுக்கு நான் உயிர்ப் பிச்சை தந்தபின் இவனை நீ கொல்லலாகாது; விட்டுவிடு, அவன் போகட்டும் —விட்டுவிடு என் சொற்படி.—

ம. ஆம்!—சீ! அற்பனே, பிழைத்துப்போ! உன்னைக் கொல்வதில் என்ன பயன்? அந்த வசந்தசேனையை யல்லவோ கொல்லவேண்டும்.

பௌ. அம்மணி இரண்டாம் முறை எனது உயிரைக் காத்தீர் —இளவரசே, இதை நான் என்றும் மறவேன்! உமக்கு ஓர் ஆபத்தில் எப்படியாவது நான் இறப்பதன்முன் உதவுகிறேன் பாரும்!—நான் போகுமுன் ஒன்று கூறுகிறேன் வசந்தசேனை உயிருட னிருக்குமளவும் உமது உயிருக்கு ஹானிதான்! மறவாதீர்! [போகிறான்.]

ம. அந்த வசந்தசேனையை இப்பொழுதே கொன்றுவிட்டு வருகிறேன். இதுவரையில் ஓர் காரணம் வேண்டுமே என்று பொறுத்திருந்தேன். இனி நான் க்ஷணமேனும் தாமதியேன்.

ப. மனோஹரா, வா இப்படி—உட்கார்—யுத்தத்திற்குப் போய் ஜெயம் பெற்று வந்தவன் சற்று நேரமாவது என்னிடம் பேசிப்போவதை விட்டு எங்கேயோ திடீரென்று போய் விடுகிறாயே!

ம. ஆமாம், அம்மணி, மன்னிக்க வேண்டும். [உட்கார்ந்து] அம்மா, உமது கட்டளைப்படி முத்துவிஜயனைக் கொன்று, எனது பாட்டனாருடைய சபதத்தை நிறைவேற்றினேனோ இல்லையோ?

ப. கண்ணே, உன் வாக்கை நிறைவேற்றினாய்! சந்தேகமில்லை. என் மனம் இப்பொழுது குளிர்ந்து சந்தோஷ மடைந்தது போல, எப்பொழுதும் நீ ஒரு தீங்கு மின்றி நீடூழி காலம் சந்தோஷமாய் வாழ்வாயாக! ஆயினும் கண்ணே, இதை விட நீ எனக்குச் செய்யவேண்டிய பெரிய உபகார மொன் றிருக்கிறது, அதைச் செய்வாயா கண்ணே?

ம. [உடைவாளை வீசி] சொல்லும், இந்தக்ஷணம் செய்கிறேன்! வசந்தசேனையைக் கொன்று வரவா?

ப. முதலில் இவ் வுடைவாளை உரையில் போடு—நீ மஹாராஜா வுக்காவது வசந்தசேனைக்காவது என் அனுமதி யின்றி உன் னுயிருள்ளளவும் ஒரு தீங்கும் செய்வதில்லை யென்று பிர மாணம் செய்துகொடு.

ம. அம்மா, இதென்ன இப்படி கேட்கிறீர்கள்? வசந்தசேனை உமக்கு இதுவரையிற் செய்த தீங்கெல்லாம் போதாதென்று முடிவில் நமதுயிருக்கெல்லாம் ஒரே உலயாக வைத்தாளே சற்று முன்பாக! இதை மறந்துவிட்டீரா என்ன இதற்குள் ளாக? அவளை நான் தண்டியாது விட மாட்டேன்; வேண்டு மென்றால், மஹாராஜாவை நான் ஒன்றும் செய்யவில்லை யென்று பிரமாணஞ் செய்து தருகிறேன்—

ப. அப்படி வேண்டா மெனக்கு, நான் சொன்னபடி கையடித் துக் கொடுப்பாயானால் ஏற்றுக்கொள்ளுகிறேன். இல்லா விட்டால் ஒன்றும் எனக்கு வேண்டாம். ஜெயம் பெற்று

வந்த மனோஹரன், தன்னைப் பெற்ற தாயார் கேட்கும்படி யான ஒரு வரத்தைக் கொடுக்க அசக்தனானனெனப் பலர் நகைப்பார்கள் நாளை; இந்தப் பழிச் சொல்லைப் பெற உனக்கு விருப்பமானால் உன்னிஷ்டப்படிச் செய்.

ம. ஐயோ! அப்படி ஒன்றுமில்லை யம்மணி! நீர் கேட்பதை நான் மறுப்பேனே? ஆயினும் எதற்காக இப்படிப்பிரமாணம் செய்யும்படி கேட்கிறீர்?

ப. காலம் வரும்பொழுது நியாயம் கூறுகிறேன். இப்பொழுது என் சொற்படி செய்கிறாயா மாட்டாயா?

ம. அப்படியே ஆகட்டும், அம்மணி. [சத்தியம் செய்கிறான்.]

ப. சத்தியசீலரே, ராஜப்பிரியா, விஜயா, நீங்களெல்லோரும் சாட்சி—மனோஹரா, இதைமறவாதே.

வி. பிராணநாதா, எனக்கொரு வரம்வேண்டும்.

ம. சரி! உனக்கென்னவரம் வேண்டும்? நானினி யுத்தத்திற்கே போகலாகாதெனக் கேட்டுவிடு. பிறகு அரண்மனையில் அந்தப்புரத்தில் உட்கார்ந்துகொண்டு கழலாடிக் கொண்டிருக்கிறேன்.

வி. அப்படி யில்லை, பிராணநாதா இனி என்னிடம் கூறியபடியே எப்பொழுதும் நடக்கிறதாக வாக்களியும்.

ம. என்ன அப்படி நடவாமற்போன திதுவரையில்?

வி. இன்றைத்தினம் வருவதாகக் கூறிவிட்டு நாளைத்தினம் வரப் பார்த்தீரே!

ம. ஒஹொ! வாஸ்தவந்தான். என் சொற்படி நடவாதிருந்தேனாயின் என்னென்ன தீமைகள் நேர்ந்திருக்கும்! இதினின்றும் ராஜப்பிரியன் தான் காப்பாற்றினான்.

ரா. அம்மா, உங்களுக் சமாசாரம் தெரியாதோ? ஐஐயோ! நான் பலவந்தப்படுத்தி யல்லவோ அழைத்துக்கொண்டு வந்தேன். அங்கே ஒரு ஸ்திரீயைக் கல்யாணம் பண்

ணிக்கொண்டு அவ்விடத்தை விட்டு வர மனமில்லாமலல்லவோ இருந்தார். சமாசாரந் தெரியாதோ?

வி. என்ன பிராணநாதா?

ம. இதென்ன ராஜப்பிரியா?

வி. இருக்கு மிருக்கும்! அவர் பொய் பேசுவாரோ?

[முகத்தை முன் தானையால் மூடிக்கொள்ளுகிருள்.]

ம. அடடே! ராஜப்பிரியா! என்ன எப்பொழுது பார்த்தாலும் நம்மைச் சங்கடத்திலேயே கொண்டுவந்து விடுகிறாய்! சீசீ! விளையாடாதே, அதோ பார்! விஜயாள் அழத் தொடங்குகிருள்!—கண்ணே, விஜயா! அப்படி யொன்று மில்லை.

ராக—நாயகி. தாளம்—ரூபகம்.

கண்ணிகள்.

ம. ஈதுனக்குத் தகுமோ கண்ணே
ஏதுகுற்றம் செய்தேன் பெண்ணே
தீது ஒன்றும் செய்தறியேன்
தெள்ளமுதே நீயே பாராய்.

வி. மறந்தீரோ நாதா நீரும்
மாதுநான் என்பதைத் தேரும்
பிறந்தேனோ நானிக்கதிக்கு
பேதைமடி யேனோ இன்றே.

ம. கோபமென்மேல் ஏனோ மானே
கூறுவாய் எந்தன் தேனே
பாபமென்ன செய்தேனோ நான்
பகருவாய் இன்றே நீ தான்.

வி. உற்று உமைப்பெற்ற சுகம்
சற்றே சொலும் கற்று நீரே

பற்றென் பதைப்பெற் றறியேன்
பகருவதென்னே நான்தான்.

உம்—உம்—இருக்கும்! இருக்கும்!

ம. ராஜப்பிரியா! சீ! உண்மையைக் கூறு!

ரா. ஒன்று மில்லை யம்மா. தாம் வருந்தவேண்டாம். வேடிக்கையாக, வீரலட்சுமியை மணந்தாரெனக் கூறினேன், அந்தச் சக்களத்தி உமக்கு ஒரு தீங்குஞ் செய்யமாட்டாள்! வருத்தமேவண்டாம். [எல்லோரும் நகைக்கிறார்கள்.]

ம. ராஜப்பிரியா, ஆகட்டும், உனக்கு விவாக மாகட்டும் உன்னை என்னபாடு படுத்துகிறேன் பார்!

ரா. என்னையா? நான் கலியாணஞ் செய்துகொள்ளுங் காலத்தில் பார்த்துக்கொள்வோம்; உம்மைப் போலவா நான்? மையிட்ட கண்ணினின்றும் தண்ணீர் வந்தால் உமது வீரமெல்லாம் எங்கேயோ மறைந்து போய்விடுகிறதே? இல்லாவிட்டால் முத்துவிஜயபாண்டியன் மருமகள் காலில் வீழ்ந்தழுதாளென்று, சத்ருவின் குமாரன் என்றும் பாராமல், குலசேகரபாண்டியனுக்குப் பட்டங்கட்டிவிட்டு வருவீரா நீர்?

ப. கண்ணே, அப்படியா செய்தாய்? மிகவும் சந்தோஷம். அதுதான் சுத்தவீரனுக்கு லட்சுணம்! பகைவரைப் பொறுப்பதே மேன்மை.

ரா. சரி, அவருடைய அன்னையல்லவா தாங்கள்! என்ன அப்பா இப்படிப்பகைவருடன் உறவாடலாமா என்று கண்டிப்பதை விட்டு, சாபாஷ் என்று தட்டிக்கொடுக்கிறீர்களே!

ம. ராஜப்பிரியா, முத்துவிஜயன்தான் நமக்கு விரோதி, அவன் குமாரன் நமக்கொரு கெடுதியும் செய்யவில்லையே, அவனையும் ஏன் தண்டிக்க வேண்டும்?

ரா. இப்பொழுது ஒரு கெடுதியும் செய்யவில்லை. இனிமேல் செய்யப்போகிறான். இப்பொழுதே சொன்னேன் பாரும், பாம்பின் வயிற்றில் பாம்புதான் பிறக்கும்.

ம. சரி, நேரமாகிறது அம்மணி, நாங்கள் விடை பெற்றுக் கொள்ளுகிறோம்; சைனியங்க ளிறங்கியிருக்கும் இடம் சென்று நாளைத்தினம் காலை மஹாராஜாவின் கொலுவிற்கு அப்படியே போகவேண்டி யிருக்கிறது.—விஜயா, நான் வருகிறேன்—ராஜப்பிரியா, வா போவோம்; நெடு நேரமாய் விட்டது.

ப. சுகமாய்ப் போய்வாருங்கள், ஜாக்கிரதை.

[*மனோஹரன் சத்தியசீலர் ராஜப்பிரியன் போகிறார்கள்.*]

**காட்சி முடிகிறது.**

# இரண்டாவது அங்கம்.

## முதற் காட்சி.

இடம்—மஹாராஜாவின் கொலு மண்டபம், காலம்—பகல்.

புருஷோத்தம மஹாராஜன் சிங்காதனத்தின் மீது வசந்தசேனையுடன் வீற்றிருக்கிறார். ஒரு புறமாக வசந்தன், விகடன், அமிர்தகேசரீ முதலானோர் உட்கார்ந் திருக்கிறார்கள். மற்றொருபுறம் ரணவீரகேது முதலான மந்திரி பிரதானிகள் நிற்கிறார்கள். சுற்றிலும் தளகர்த்தர் சபையோர் சூழ்ந் திருக்கிறார்கள், வசந்தசேனையின் பின்புறமாக தாதியர் சாமரம் முதலிய தாங்கி நிற்கின்றனர்.

பு. ரணவீரகேது, சபையோரே உங்களுடைய வேண்டு கோளுக்கு மெச்சினோம். இன்றைத்தினம் காலையிலே இதே விஷயத்தைப்பற்றி நமது முதன் மந்திரி சத்திய சீலர் கேட்க, அப்பொழுதே அதற்குடன்பட்டு, மனோ ஹரனுக்கு இளவரசு பட்டம் கட்டத் தீர்மானித்திருக் கிறோம்.

எல்லோரும். மிகவும் சந்தோஷம், மஹாராஜா!

வ. மகாராஜா! சந்தேகமில்லே, மகாராஜா!

பு. வசந்தா!

வ. கொஞ்சங்கூட சந்தேகமே யில்லே, மகாராஜா! நீங்க வேணும் மிண்ணு விகடரெ கேட்டுப் பாருங்கோ.

பு. விகடா, என்ன சமாசாரம் அது?

விக. எனக் கொன்றுந் தெரியாது, மஹாராஜா.

வ. அப்பா! நானு உங்களே ஒண்ணு கேக்கிறேன். நம்ப அமிர்தவேசரி ரொம்ப நல்ல பயித்தியரு; அவருக்கு

நல்ல வெகுமானம் குடுத்து வீட்டுக் கனுப்பிச்சுடணும் இல்லாப்போனு அவர் கொடுக்கர மருந்தெ, அவரே திண்ணுட கட்டளெ யிடுங்க.

பு. ஸ்! விகடா என்ன செய்கிருய் அங்கே? வசந்தனைப் பேசாமலிருக்கும்படிப் பார்த்துக்கொள்.

வ. சந்தேக மில்லை மகாராஜா!

விக. ஆமாம் கொஞ்சங்கூட சந்தேகமில்லை, உக்காருங்கையா!

[இழுத்து உட்காரவைக்கிருன்.]

ஒரு சேவகன் வருகிருன்.

சே. பராக்! மந்திரி சத்திய சீலர் அவர்கள் குரு மகாராஜாவை அழைத்துக்கொண்டு வருகிருர்.

[மஹாராஜா சபையுடன் எழுந்து நிற்கிருர்.]

குரு சத்தியசீலருடன் வருகிருர்.

பு. குருசுவாமி, நமஸ்காரம்—வரவேண்டும், வரவேண்டும்.

[நமஸ்கரிக்க குரு ஆசீர்வதிக்கிருர்.]

தாங்கள் இப்படி எழுந்தருள வேண்டும்.

[குரு உட்கார எல்லோரும் உட்காருகிருர்கள்.]

குரு. புருஷோத்தமா, எல்லாம் க்ஷேமந்தானு?

பு. தங்களுடைய கிருபா நோக்கத்தால் எல்லாம் க்ஷேமந்தான்.

குரு. உன் மகன் மனேஹரனுடைய வெற்றியைக்கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டோம், சிரஞ்சீவியாக வாழ்வானுக! அவனைப் பார்த்து ஆசீர்வதித்துப் போகவே இங்கெழுந்தருளினேம். பத்மாவதியின் மகன் சுத்தவீரனுனது ஓராச்சரியமன்று!—புருஷோத்தமா, உன் பக்கலிலிருப்பது பத்மாவதியல்லவா?

பு. அல்ல—

குரு. அல்லவா? பின்பு யார் அது?—என்ன, கேட்பதற்கு உத்தரம் கூறுது வாளா இருக்கின்றனே?

பு. வசந்தசேனை.

குரு. அடே, புருஷோத்தமா!— வசந்தசேனையா!— வசந்தசேனையைப்பற்றிச் சில விஷயங்கள் நான் கேள்விப்பட்டிருக்கிறேன்—அடே! இவ் விஷயத்தில் நீ செய்துவந்த துர்க்கிருத்தியங்களை யெல்லாம் பொறுத்திருந்தேன் ஆயினும் இதென்ன அதர்மம்? மணஅரையிற் கைக்கொள்ளா மங்கையை, நீ இச்சித்திருக்கும்படியான ஓர் ஸ்திரீயை, பலரறிய சிம்மாசனத்தில் உட்கார வைத்துக்கொள்ளுகிறாயா நீ? இந்த நியாயம் உனக்கு யார் கூறியது? இதுவரையி லிப்படி நடந்ததில்லையே அடே! நானுனக்குக் குருவா யிருந்து இந்த அநியாயம் நடந்தால் உலகத்தார் என்னையன்றோ தூஷிப்பார்கள்! வசந்தசேனையை நீ விவாகம் செய்து கொள்ளலாகாதென முன்பே நியாய மெடுத்துக் கூறியிருக்கிறேன். அதுவுமன்றி பட்டமகிஷி பத்மாவதி இருக்கும்பொழுது வெறொரு ஸ்திரீயை அவளுடைய ஸ்தானத்தில் நீ எப்படி உட்காரவைத்துக் கொள்ளலாம்? இது என்ன அநீதி இதுவோ உன்னுடைய செங்கோன் முறை?—என்ன சும்மா இருக்கிறாய்? சத்தியசீலா! நீ மந்திரியாக இங்கிருந்து இவ் விஷயங்களை யெல்லாம் நீ எப்படி பார்த்துக் கொண் டிருக்கிறாய்? உனக்கும் எங்கே போயது புத்தி?

ச. சுவாமி! என்மீது தாம் முனியலாகாது; இதுவரையில் இம்மாதிரியாக நடந்ததில்லை. தாம் அவசரப்படலாகாது—மஹாராஜா, நான் தங்களுடைய ஊழியனுகிய மந்திரி; ஆயினும் மந்திரியினுடைய முதற்கடன் மஹாராஜா ஏதாவது தவறி நடந்தால், தனது சிரசு போவதாயிருந்தபோதிலும் அதை யெடுத்துக் காட்டவேண்டியதே. ஆகையால் என்னுடைய கடனை நான் தீர்க்கவேண்டும். மஹாராஜா, தம்முடைய குலகுரு

கூறியவண்ணம் தாம் வசந்தசேனையைச் சிம்மாசனத்தில் உட்காரவைத்துக்கொள்வது நியாய மன்று, இது நமது செங்கோன் முறைமைக் கழகன்று, தர்ம சாஸ்திரங் களுக்கெல்லாம் விரோதமாகும்; ராஜதர்மமன்று, ஆகை யால் மஹாராஜா, இப்பொழுதும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை இப்பொழுதாவது வசந்தசேனையை அந்தப் புறத்திற்கு அனுப்பி விடும்—[வெளியில் ஜெயபேரிகை முழங் குகிறது.]

மனோஹரர் வந்துவிட்டார்!—அரசே! அவர் இக்கோலத் தைக் காண்பது நியாய மன்று; புருஷர்களுள் உத்தம ராகிய தமக்கு நான் கூறத் தக்கது இனி என்ன இருக் கிறது? ஆகவே தாம்—[மறுபடியும் ஜெய பேரிகை முழங்கு கிறது.]

ரணவீரர்கள் இருபுறமும் சூழ்ந்து ஜெயகோஷம் செய்ய, மனோஹரனும் ராஜப்பிரியனும் சேனாதிபதிகள் தளகர்த்தர்புடைசூழ வருகிறார்கள்.

எல்லோரும். [எழுந்து மரியாதை செய்கிறார்கள்.] ஜெயவிஜயீபவ!

ம. [சிம்மாசனத் தருகிற் சென்று பிதாவை வணங்குகிறான்.]

பு. [சிம்மாசனம் விட்டுக் கீழே இறங்கி தன் புதல்வனைக் கட்டி யணைக்கிறான்.] கண்ணே! மனோஹரா!

சேவகர். பராக்! பராக்!

பு. மனோஹரா, உனது வெற்றிக்குமெச்சி மகிழ்ந்தேன்! உனது வீரப் பிரதாபம் உலகுள்ளளவும் அழியாது நிலைத் திருக்குமாக! உன் வெற்றிக் கறிகுறியாக இந்த வீரகண் டையை அணிவாயாக!

[மனோஹரன் வணக்கத்துடன் வீரகண்டையை வாங்கிக்கொள்ள ராஜப்பிரியன் அதை மனோஹரனின் காலில் அணிவிக்கிறான்.]

மனோஹரா, சீக்கிரம் உனக்கு இளவரசு பட்டங் கட்டத் தீர்மானித்தேன் இன்று.

[மனோஹரன் பிதாவை வணங்கி பிறகு குருவை வணங்குகிறான்.]

குரு. [ஆசீர்வதித்து] பாண்டிய கோளரியாகிய மனோஹரா! உலகெங்கும் உனது புகழ் பரவ இப்புவியனைத்தும் ஒரு தனிக் குடைக்கீழ் ஆளும் சக்ரவர்த்தி யாவாயாக!

[மனோஹரன் சிங்காதனத்திற்கு இன்னும் அருகிற் செல்ல, வசந்தசேனை அதன் மீது வீற்றிருப்பதைக் கண்ணுற்று கோபாவேசத்துடன் வாளை வீசப் போக, சபையோரெல்லாம் நடு நடுங்கி "பொறும்! பொறும்!" எனக் கூவுகின்றனர்.]

குரு. மனோஹரா! வேண்டாம்! வேண்டாம்! இது நியாயமன்று பொறு! பொறு!

ச. [மனோஹரன் காதில்] அரசே, தம்முடைய தாயாருக்குக் கூறியதை மறவாதீர்!

[மனோஹரன் க்ஷண நேரம் அசைவற்று நின்று பிறகு தன் வாளை உறையிலிட்டுத் தலை குனிந்த வண்ணம் சபையை விட்டுச் சரேலெனப் போகிறான்; சபையில் பெருங் கூச்சல் உண்டாகிறது.]

குரு. புருஷோத்தமா! நான் முன்னமே கூறினேனே, கேட்டனையா? இதனால் இப்பொழுது என்ன கோலாகலம் நேரிடப் போகிறதோ தெரியாது. இந்நேரம் நீயும் உன் பக்கலிலிருக்கிறவளும் இறக்க விருந்தீர்களே! நான் தடுத்தபடி யாலன்றோ மனோஹரன் சற்று கோபம் தணிந்து சென்றான்! அவன் முனிந்தால் மூவுலகும் பொடியாய் விடும், ஜாக்கிரதை! இப்பொழுதே சொன்னேன். இனியாவது என் சொற்படிகேட்டு மனோஹரனைச் சாந்தப்படுத்தினால் நீ இன்னும் கொஞ்ச காலம் சுகமாய் வாழலாம். இல்லாவிடின் உனது நாசகாலம் சீக்கிரத்திற் கிட்டியதென நினை; சுத்தவீரனாகிய மனோஹரன் சத்தியத்திற்குட்பட்டவன்; ஆகவே பிதாவாயிற்றேயென்று பார்த்தான்போலும்; அவன் வாளா சென்றானே என்று நினையாதே; உனது

பகைவரை வெற்றிகொண்டு மீண்ட சத்தியவானுகிய உன் மைந்தன் கண்ணினின்றும் ஓர் நீர்த்துளி விழுமாயின், அது உனது ராஜ்யத்தை யெல்லாம் க்ஷணப் பொழுதில் பஸ்மீகரப்படுத்தும் ஆலகால விஷமென எண்ணுவாய்! என்ன சொல்லுகிருய் இப்பொழுதாவது?—சரி, குல குருவாகிய என் கடனை ஒழித்துவிட்டேன். இனி உன் தலைவிதி! உனது விநாசகாலத்திற்கே உனக்கு இவ்வித விபரீத புத்தி தோற்றுகிறது! நான் இனிமேல் இங்கிருப்பது நியாயமன்று. நான் போகிறேன்.

ச. சுவாமி, தாங்களிவ்வாறு கோபித்துச் செல்லலாகாது—

குரு. சத்தியசீலா! என்னிடம் நீ பேசுவதிற் பயனில்லை, உன் அரசனுக்குப் புத்திகூறு, போ!

கோபத்துடன் போகிருர். சபையில் மறுபடியும் ஆரவாரம் உண்டாகிறது.]

காட்சி முடிகிறது.

## இரண்டாவது காட்சி.

இடம்:—அரண்மனை நந்தவனம். காலம்:—மாலை

வசந்தன் தலைமுழுவதும் புஷ்பச் சரங்கள் தொங்க உடல் எல்லாம் மஞ்சள் நீரால் நனைக்கப்பட்டு அலங்கோலமாய் ஓடிவருகிருன்.

வ. ஆ! சந்தேகமில்லை! சந்தேகமில்லை! இதான் சரியான எடம்

[ஓர் கல்லாசனத்தில் கீழ் மறைந்து கொள்கிருன்.]

பத்மாவதிதேவி மெல்ல வருகிருள்.

ப. கொடுத்துவைத்தவர்கள் அனுபவிக்கிருர்கள், அவர்களைப் பார்த்து நான் பொருமைப்படலாகாது—இங்குச் சற்று உட்காருவோம்; இங்கொருவரும் வரமாட்டார்களென

நினைக்கிறேன்.— ஹா! என் ஜன்மமே ஜன்மம்! எவ்வளவு தான் பொறுப்பது? எதற்கும் ஓர் அளவில்லையா?—ஆயினும் நான் என்பொருட்டு வருந்த வில்லை, என் விதி எனக்கு சகஜமாய்விட்டது. என் பொருட்டு மனோஹரன் வருந்துகிறானே, அதைத்தான் பொறுக்கமுடியவில்லை. தான்படும் வருத்தத்தை எவரிடமாவது கூறுகிறானா? என்னிடமாவது கூறுகிறானா? ஒன்றுமில்லை; தனக்குள் நினைந்து நினைந்து வருந்துகிறானே! ஐயோ! அவனுடைய கைகால்களை நானல்லவோ கட்டிவிட்டிருக்கிறேன்? சுத்த வீரனாகிய மனோஹரனோ இந்த அவமானத்தைப் பொறுப்பவன்? தன் மானத்தை தன்னுயிரினும் மேலாகப் பாவிக்கின்றவன், தனக்கு நேரிட்ட இழிவைக் கண்ணாரக்கண்டும் வாளா இருப்பவனோ அவன்?—கண்ணே! மனோஹரா! நமதன்னை இவ்வளவு அவமானத்தை நேரிற் கண்டும் பொறுக்கும்படி செய்து, பழி வாங்கவொட்டாமல் வாக்கால் நம்மைக்கட்டி விட்டாளல்லவா என்று நினைத்தே கண்ணீர் விட்டனையோ? கண்ணே! உன் நலத்தைக் கோரியே இவ்வாறு செய்தேன்! நமதன்னைக்காக இவ்வளவு பொறுக்கிறோமென நினைத்து சும்மா இரு—அம்மட்டும் இப்படி ஏதாவது நேரிடுமென்று முன்பே மனோஹரனிடம் இவ் வுறுதிமொழி வாங்கிக்கொண்டது நம ததிர்ஷ்டமே!—வழக்கப்படி சாயங்காலம் என்னைப் பார்த்துவிட்டுப் போக வருபவன் இன்றைத்தினம் ஏன் வரவில்லை? இவ்வுற்சவங் கொண்டாடுமிடத்திலாவது இருப்பானெனக் கருதி இங்குவந்து பார்த்தங்கானோம். இன்னும் காலையில் நடந்த விஷயத்தைக் குறித்து நினைந்து வருந்திக் கொண்டிருக்கிறானோ?—அல்லது பழி வாங்க ஏதாவது வகை தேடிக் கொண்டிருக்கிறானோ? என் அனுமதியின்றி

அவ்வண்ணம் ஒன்றும் செய்யான்—கண்ணே! மனோஹரா! உனது நலத்திற்கு நானே சத்ருவானேன்போ லிருக்கிறதே! ஐயோ! என் வயிற்றிற் பிறந்த கொடுமையோ அது?—ஈசனே! ஈசனே! நான் எவ்வளவுதான் பொறுப்பேன்?—

[கண்ணீர் விடுகிருள்.]

மனோஹரன் பின்புறமாக மெல்லவந்து பத்மாவதி அருகில் உட்காருகிருன்.

கண்ணே! மனோஹரா! எங்கே இதுவரையில் உன்னை அரண்மனையிற் காணேம், நான் எங்கும் சுற்றிப்பார்த் தேனே?

ம. நானும் உம்மைத் தேடி அரண்மனை யெங்கும் சற்று முன் பாகச் சுற்றி வந்தேன்.

ப. என்ன சமாசாரம்? ஏதாவது முக்கியமுண்டோ? என்ன நீ சற்று முன்பாக அழுதுகொண்டிருந்தாற்போ லிருக் கிறதே?

ம. அம்மா, என்னை மன்னிக்கவேண்டும். நானும் உங்களை அதே கேள்வி கேட்க வாயைத்திறந்தேன்—அம்மணி, என்ன சமாசாரம்?

ப. மனோஹரா ஏன் என்னிடம் ஒளிக்க முயலுகிருய்? இன் றைத்தினம் காலை கொலுமண்டபத்தில் நடந்த விர்த்தாந்த மெல்லாம் தெரியும் எனக்கு.

ம. யார் சொன்னது?

ப. யார் சொன்னுலுமென்ன?—சத்தியசீலர் சொன்ஞர்—கண்ணே, அது என் தலைவிதி, அதற்காக நீ வருத்தப் படு வானேன்?

ம. அம்மணி, நான் எவ்வாறு பொறுப்பேனிதை? உமக்குப் பணிப்பெண்ணுயிருந்த அந்த வசந்தசேனை, மஹாராஜா வின் அருகில், நான் தமக்காகக் கொணர்ந்த சிங்காதனத் தில், நீர் உட்கார்ந்திருக்கவேண்டிய ஸ்தானத்தில் உட்

கார்ந்திருப்பதைக் கண்டும், நான் பொறுத்திருக்க வேண்டியதாயிற்றே! அம்மணீ! வீணில் என் கையைக் கட்டி விட்டீரே! அதை நான் என் கண்ணாரக் கண்டு எவ்வாறு பொறுப்பேன்? பாரும் வேண்டுமென்றால் என் வீரத்தை! ஒரு வார்த்தை சொல்லும் இப்பட்டண முழுவதையும் ஹதஞ்செய்து வருகிறேன்!

ப. கண்ணே, நீ செய்வாயென்பதற்குச் சந்தேகமென்ன? இவ்வற்பப் பெண்பிள்ளையோ உன்னுடைய கோபத்திற்கெதிர் நிற்பவள்? கண்ணே, ஆயினும் நீ ஒன்று யோசிக்க வேண்டியிருக்கிறது. நான் மஹாராஜாவினுடைய பத்தினி, நீ அவரது மகன். நம்மிருவருடைய கடமையும் என்னவெனில் அவருடைய நலத்தையும் சுகத்தையும் எப்பொழுதும் நாடவேண்டியதே; ஆகவே மஹாராஜாவுக்கு இப்படி நடப்பதில் இஷ்டமிருக்குமாயின் அவருடைய இஷ்டத்திற்கு நாம் குறுக்காக ஏதாவது செய்யலாமா? ஆகவே என் னுத்தரவின்றி அவளுக்கு ஒரு தீங்கும் செய்யேனென்று கூறியதை எக்காலும் மறவாதே! இதற்காக நீ வருத்தப்படலாமோ?

[மனோஹரன் கண்ணீரைத் துடைக்கிறாள்.]

ம. இதற்குத்தான் உம்முடைய வயிற்றில் வீணன் நான் ஒருவன் பிறந்தேனோ? பிறந்ததற்கு நல்ல உபகாரம் செய்கிறேன்! நீர் வருந்த நான் பார்த்துக்கொண்டிருப்பது!

ப. நான் வருத்தப்படுகிறேனென்று உனக்கெப்படித் தெரியும்?

ம. நீர் சொல்லாமற்போனாலும் எனக்கு நன்றாகத் தெரியும். அதை யறியாவிட்டால் நானுமது மகனோ? [எழுந்திருந்து] இதோ ஒரு வார்த்தை கூறுகிறேன். அம்மணி! என் பிதா வசந்தசேனையை நீக்கி, உம்மிடம் பிரியம் வைத்து, உம்மை வரவழைத்து அதேசிம்மாசனத்தில் உட்கார வைத்

துக்கொள்ளும்படிச் செய்யாவிட்டால் நான் மனோஹரனன்று, உமக்கு நான் புத்திரனன்று!

ராகம்—அடாணு. தாளம் ஆதி.

பல்லவி.

எண்ணிய சபத மிதுவே—அம்மா நானும்
எண்ணிய சபத மிதுவே!

அநுபல்லவி.

எண்ணிலாத் துன்பமுமக் கெவள் செய்தாளோ அவளை
இவ்வுலகில் இழிபடச்செய்வேன் என்றுநான் இன்று (எ)

சரணம்.

தேகத்திற் றுளிரத்தம் உள்ளமட்டும்
செய்வேன் துரோகியை அநர்த்தம்
ஆகுங்காரியம் அனைத்தும் ஆகட்டும் இதனால்
அன்னையே உம்மனம் அறிந்திடக்கூறிவிட்டேன் (எ)

ப. ஐயோ! கண்ணே! என்ன யோசியாது சபதம் செய்து விட்டாய்! முடியாத காரியத்தை நீ இவ்வாறு ஏற்றுக் கொள்ளலாமா? வேண்டாம், நான் சொல்வதைக் கேள்.

ம. அம்மணி! என்னுயிருள்ளளவும் முடியாத காரியம் என்று எனக் கொன்றில்லை. இதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

வ. [கீழிருந்து] ஆஹா! சந்தேகமில்லை!

ப. யார் அது?—என்ன சப்தம் அது?

ம. யார் அது?—ஒருவரையுங் காணோமே!

கரத்தில் ஓர் மாலையை ஏந்தி விஜயாள் வருகிறாள்.

விஜயா! நீயா கூவினாய்?

வி. இல்லையே!—மஹாராஜாவும் சின்ன மாமியும் இந்த வழியாக வருகிறார்களென்று சொல்ல வந்தேன் மாமியுடன்.

ம. விஜயா! இப்படிவா இன்னொரு முறை அந்த வசந்தசேனை யைச் சின்ன மாமியென்று கூறுவாயானால் எனக்குக் கோபம் வரும். சொல்லாதே, தெரியுமா?

வி. இனிமேல் சொல்லவில்லை.

ப. மனோஹரா, என்ன எப்பொழுது பார்த்தாலும் கடு கடுத் தே பேசுகிறாயே விஜயாளுடன்! அதிலும் இப்பொழுது கர்ப்பமாயிருக்கிறாள், பாபம்! இது நியாயமன்று, அவள் என்ன செய்வாள்? இனிமேல் அவளுடன் கடுகடுத்துப் பேசாதே. நான் வருகிறேன். விஜயா காத்துக்கொண் டிருக்கிறாள் பார். அவளுடன் மற்றவர்களைப்போல சந் தோஷமாய் உற்சவம் கொண்டாடிக் காலம் கழி.

[விரைந்து போகிறான்.]

ம. கண்ணே, கோபித்துக்கொள்ளாதே! ஏதோ அவசரத்தில் கடுமையாய் மொழிந்து விட்டேன்.

[முத்தம் கொடுக்கிறான்.]

வி. [சிரிப்புடன்] இல்லை, பிராணநாதா, வாரும்.

ம. எங்கே வருவது?

வி. அதோ பாரும், ஆங்காங்குப் பெண்கள் தம் காதலருடன் நீர் நிரம்பிய தடாகங்களி லிறங்கி ஒருவர்மீ தொருவர் தண்ணீர்வாரி இறைத்து விளையாடியும், நிலவை வியந்து புஷ்பம்கமழ் சோலைகளி லுலாவியும், புஷ்பச் செண்டு களால் ஒருவரையொருவர் அடித்தும், புஷ்பமாலைகளால் ஒருவரை யொருவர் கட்டி யிழுத்தும், மகரந்தத்தைத் தூவியும், மல்லிகை மலர்களைச் சூடியும், ஒருவர் கண்ணை ஒருவர் பொத்தியும், இன்னும் இப்படி பற்பல விதமாகக் காலங்கழிக்கிறார்களே, தென்றல் சுகந்தமும் மெல்லனெ வீசும் இவ்வழகிய பூஞ்சோலையில்! பிராணநாதா, இவற் றையெல்லாம் பார்த்துக்கொண்டு தனியா யிருக்க என் மனம் ஒப்புமா? வாரும், நாமும் போய் விளையாடுவோம்.

ம. கண்ணே, என் மனம் ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறது. இப்பொழுது விநோதத்தின் மீது செல்லவில்லை.

வி. உம்! உம்! நான் எப்பொழுது அழைத்தாலும் இப்படித் தானே! உம்! உம்!—

ம. இதென்னடா பெரிய தொந்தரவா யிருக்கிறது!—என்ன செய்யவேண்டும் என்கிறாய்? நானு விளையாடுவது?

வி. அவர்களெல்லாம் என்ன செய்கிறார்கள்? அவர்கள் விளையாடவில்லையோ?

ம. அவர்களெல்லாம் முழு முண்டங்கள், அவர்களுக்கு வேறொரு வேலையு மில்லை. விஜயா, நான் சொல்வதைக் கேள்—

வி. நான் கேட்கமாட்டேன்,

[முகத்தை முன்தானையால் மூடிக்கொள் கிறாள்.]

ம. அடடா! தீர்ந்தது!—கண்ணே, அழவேண்டாம், இதோ வந்து விட்டேன். [கண்ணீரைத் துடைத்து] என்னை வெல்லு வதற்கு இந்தப் பாணம் ஒன்று எப்போழுதும் வைத்துக் கொண்டிருக்கிறாயே!

வி. அதுதான் சரி! வாரு மிப்படி

[புஷ்பமாலையால் அவனைக்கட்டி இழுக் கிறாள்.]

ராஜப்பிரியன் ஒரு புறமாக வருகிறான்.

ரா. சபாஷ்! சபாஷ்! இவர்தான் சுத்தவீரர்! சொன்னால் வெட்கக்கேடு; யாவராலும் பிடிபடாத சுத்த வீரதீர னெனப் பெயர் வைத்துக்கொண்டு ஒரு வனிதையின் கரத் திலுள்ள புஷ்ப மாலையாற் கட்டுண்டீரே!—அடடா! இவர் எங்கிருந்து புறப்பட்டார்!

மறைவிடத்திலிருந்து வசந்தன் வருகிறான்.

வ. ஆஹா சந்தேகமே யில்லை!

ம. வசந்தா!

வ. சந்தேகமே யில்லே! ஏனையா எம்முதுவுமேலே உக்காந்துக் கினு இருந்திங்கோ?

ம. நான் எங்கே உட்கார்ந்துகொண்டிருந்தேன்?

வ. பின்னெ ஏன் முதுவு நோவுது?

ரா. நல்ல நியாயமான கேள்வி, பின்பேன் அவர் முதுகு நோகுது? முதுகு வளைந்து போய் விட்டாற்போ லிருக் கிறதே, ஐஐயோ!

ம. வசந்தா! என்ன சமாசாரம்? எங்கிருந்தாய் இத்தனை நேரம்?

வ. நீங்க எங்கே உக்காந்திக்கினு இருந்திங்க?

ம. இதோ இக் கல்லாசனத்தின் மீது உட்கார்ந்தேன்.

வ. சரிதான்! சந்தேகமில்லே நானு அதுங்கீழே உக்காந்துக்கினு இருந்தேன்; அதுதான் முதுவு நோவுது. ஐயையோ! முதுவு வளெஞ்சி போனுப்போலே இருக்குதே!

ரா. நல்ல நியாயம், சந்தேகமில்லே! ஐயா, அதிருக்கட்டும் இதன் கீழே ஏன் ஒளிந்திருந்தீர்கள்?

வ. கேக்கமாட்டைங்கோ பின்னே! அதோ அந்த குளத் தண்டே விளையாடர பொண்ணுங்கல்லாம், தண்ணியா லேயும் பூவாலேயும் என்னெ அடிச்சாபோலே உங்களெயும் அடிச்சிருந்தா, நீங்களும் ஓடியாந்து இங்கே பதுங்கிக்னு தான் இருப்பிங்கோ.

ம. என்ன தைரியசாலி!

வ. சந்தேகமில்லே! அதிருக்கட்டும்—இப்போ முதுவுநோவுதே அதுக்கென்ன செய்றது? ஐயோ! வளெஞ்செ போச்சே!

ரா. ஆமாமையா! வளைந்தே போய்விட்டது. வசந்தரே! ஆத்தி சூடியிலே "நப்போல்வளே" என்பதற்கு அர்த்தம் தெரி யுமா உமக்கு?

வ. என்ன, என்ன அர்த்தம்?

ரா. ஙவைப்போல வளைந்திரு என்று அர்த்தம். அந்த மாதிரியாக இருக்கிறதுபோல் தோற்றுகிறதே! "ஙப்போல் வளை"

வ. ஐயையோ! ஙப்போல்வளே! ஙப்போல்வளே! [அழுகிறான்.]

ரா. ஐயா! அதற் கழவேண்டாம்; நான் ஒரு யுக்தி சொல்லுகிறேன், அதன்படி கேளும். உலக்கட வயித்தியன் என்று ஒருவனிருக்கிறான்; அவனிடம் சென்றால் குணப்படுத்தி விடுவான்.

வ. ஆ! ஆ! அப்படியா? எங்கே யிருக்கிறாரு அந்த வயித்தியரு? பேரென்ன? ஒலெக்கட வயித்தியரா?

[எல்லோரும் நகைக்கிறார்கள்.]

என்னெப் பாத்தா உங்களுக்கு சிரிப்பா யிருக்குதோ? அப்படியா சங்கதி? அதோ அம்மா வர்ராங்கோ, நீங்கபேசிக்கினிருந்ததெ யெல்லாம் சொல்லிட்றேன்; ஒலெக்கடவயித்தியரு எங்கே யிருக்கிறாரு இண்ணு சொன்ணு சும்மா உட்டுடறேன்; என்ணு சொல்றீங்கோ?

[மறுபடியும் நகைக்கிறார்கள்.]

ரா. மஹாராஜா வருகிறார், இனி நாம் இங்கிருக்கலாகாது.

[போகிறான்.]

புருஷோத்தம மஹாராஜன் வசந்தசேனையுடன் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டு வருகிறார்; சற்று தூரத்தில் தாதியர் சந்தனம் புஷ்பம், சுகந்த பொடி முதலியன கரத்திலேந்தி வருகிறார்கள்.

சத்தியசீலர் இன்னும் தூரத்தில் வருகிறார்.

வஸே. வசந்தா, இதென்ன கோலம்?

வ. அதிருக்கட்டும் அம்மா! ஒலெக்கட வயித்தியரு எங்கே யிருக்கிறாரு சீக்கிரம் சொல்லுங்க! என் முதுவு வளெஞ்சிப்போச்சி! ஙப்போல்வளெ! சந்தேக மில்லெ! கொஞ்

சங்கூட சந்தேகமே யில்லே! சீக்கிரம், சொல்லுங்க; சொஸ் தப்படுத்தணும். [மனோஹரனும் விஜயாளும் நகைக்கிருர்கள்.]

பாருங் கம்மா, திரும்பியும் என்னெப்பார்த்து சிரிக்கிருங்கோ—சொல்லிடட்டுமா? ஆவட்டும்!—அம்மா! உங்களே சிம்மாசனத்திலே யிருந்து தள்ளிட்டு, அவுங்க அம்மாளே மஹாராஜா பக்கத்லே உக்காரவைக்கப் போருராம் அண்ணுத்தே—ஆவட்டும்! ஆவட்டும்!

வஸே. யார்? மனோஹரனு?

வ. ஆமாம், அப்படி செய்ரேன் இண்ணு சபதம் பண்ணுரு.

வஸே. மும்மூர்த்திகளாலும் முடியாதகாரியம் இந்த வேசி மகனல் முடியப்போகிறதோ? அவன் கெட்டான், நீ வா இப்படி.

ம. என்ன சொல்லினே! என்ன சொல்லினே? [வாளை வீசி] அண்ணு! கேட்டீரா வசந்தசேனே சொன்னதை?—என்ன சும்மா இருக்கிறீர்?—உமது குல பத்னியை வேசியென்று ஒருத்தி அழைக்க நீர் கேட்டுக்கொண்டிருப்பதா?—என்ன பேசாமலிருக்கிறீர்? — நீர் உம்முடைய பத்னியின் மானத்தைக் காப்பாற்ருவிட்டாலும் நான் என் தாயாரின் மானத்தைக் காப்பாற்றவேண்டும். என் தாயை வேசியென்று கூறிய நாவை இக்ஷணம் அறுத்தெறிகிறேன்! [வசந்தசேனேயை வெட்ட அருகில் நெருங்குகிருன்.]

பு. [மனோஹரன் கரத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு] மனோஹரா! விடு வாளே!—

ம. ஏன்?

பு. நான் சொன்னபடி கேள்—விடு வாளே!

ம. நான் விடமாட்டேன். உமக்கு வல்லமை இருந்தால் தடுத்துக்கொள்ளும். என தன்னேயைத் தூஷித்த நாவைத் துண்டித்தே விடுவேன்!

ச. [மனோஹரன் காதில் மெல்ல] மறந்தீரோ உமதன்னைக்குக் கூறியதை?

ம. [அசைவற்று நின்று] உம்மை யாரையா இங்கு வரச்சொன்னது? நல்ல சனி!

[வாளைக் கீழே எறிந்துவிட்டு கண்களில்நீர் ததும்பப் போகிருன். புருஷோத்தம மஹாராஜன் ஒரு புறமாகத் தலைகுனிந்தவண்ணம் போகிருர்.]

வஸே. [விஜயாள் அழுவது கண்டு] பாசாங்குக் கள்ளி! நீயும் அழ ஆரம்பித்து விட்டாயா? உன் புருஷனை யார் என்ன செய்து விட்டார்கள்! காக்கா கர் என்ருல் கணவனை அப்பா என்று கட்டிக்கொண்டாளாம்! அழு நீலி! போ அந்த துஷ்டனிடம்.

ச. அம்மா, அழாதேயும்; வாரும்.

[சத்தியசீலர் விஜயாளை அழைத்துச்செல்லுகிருர்.]

வ. அம்மா! வரவர எனக்கு கூனு அதிகமாவுதுபோலே யிருக்குதே! நப்போல்வளே அதிக மாவுதே! வாங்க, சீக்ரம் ஒலெக்கட வயித்தியர் கிட்ட போவணும்.

வஸே. அடி! இந்தப் பைத்தியக்காரனை அரண்மனைக்கு இழுத்துக் கொண்டு போங்கள்! அந்த பைத்தியன் ஒருவனிருந்தானே அவனெங்கே? [வசந்தனை தாதியர் அழைத்துச் செல்கிருர்கள்.] ஆ! நான் இன்றைக் கெழுந்த வேளை என்ன வேளையோ? சிம்மாசனத்தின்மீது மஹாராஜாவுடன் உட்கார்ந்ததும் போதும், நான் பட்ட பாடும் போதும். ஒவ்வொரு விஞடியும் எங்கு என்னுயிர் போகிறதோ என்றல்லவோ நடுங்கி இருந்தேன். மனோஹரன் கரத்தினின்று இரண்டு முறை நான் தப்பியது தெய்வாதீனந்தான். சிம்மாசனத்தி லுட்கார்ந் திருந்த பொழுது எரி நெருப்பின் மீதில் உட்கார்ந்திருந்தால் எவ்வளவு சுகமனுபவிக்கலாமோ அவ்வளவு சுக மனுபவித்தேன்! அது போனுற்போகட்டும்.—இப்பொழுது என்னையு மறியாதபடி

என் வாயில் என்ன சொல் வந்து விட்டது! சீ! என் புத்தி காலையில் நான் பட்ட சங்கடத்தினால் மழுங்கிற்றென்றே நினைக்கின்றேன், இல்லாவிடின் மனோஹரனை வேசி மகனென்பேனோ? பத்தினியாகிய பத்மாவதியை இவ்வாறு சொல்லுவேனோ? வசந்தனைப்பார்த்து வேசிமகனெனக் கூறின் அது உண்மையா யிருக்கும்! என் சமாசாரத்தைப் பிறர்மேல் அறியாதபடி கூறிவிட்டிருக்கவேண்டும்! என்ன மூடபுத்தி!—இப்பொழுது இவைகளை யெல்லாம் யோசித்து வருத்தப்படுவது குணமன்று, மஹாராஜாவோ மிகவும் கோபங்கொண்டு போயிருக்கிறார். கோபமிராதோ பிறகு?—இப்பொழுது உடனே நான் சென்றால் கோபம் அதிகரிக்குமேயொழிய தணியாது. சற்று அதுவாகத் தணிந்தபிறகு செல்லவேண்டும். ஏது, இனி எல்லாம் சங்கடமாகத்தான் முடியும்போலிருக்கிறது! மனோஹரன் இரண்டு முறையும் நீறுபெற்ற சர்ப்பம்போலடங்கிச் சென்றான். என்னவோ விசேஷந் தெரியவில்லை. —சீ! அவசரப்பட்டு ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் பிறகு அதன் பொருட்டு எவ்வளவு கஷ்டம் அனுபவிக்க வேண்டி யிருக்கிறது?

[போகிறான்.]

காட்சி முடிகிறது.

## மூன்றாம் காட்சி.

இடம்—பத்மாவதியின் அறை. காலம்—காலை.

பத்மாவதி மஞ்சத்தின்மீது சாய்ந்திருக்க விஜயாள் அருகில் உட்கார்ந்துகொண் டிருக்கிறாள்.

கண்ணே! விஜயா! இதற்காகவா நீ வருத்தப்படுவது? அவள் ஏதோ பிதற்றினால் அதை ஒரு பொருட்டாக நீ மதித்து அதற்காக வருத்தப்படலாமோ? முகத்தை துடைத்துக்கொள், மனோஹரனை என்னவென்று வைதாள்? நடந்த சமாசாரமென்ன?

வி. நீங்களும் இளவரசரும் அங்கே பேசிக்கொண் டிருந்ததை வசந்தன் ஒளித்திருந்து கேட்டுக்கொண் டிருந்தாளும்—

ப. வசந்தனு ?

வி. ஆம், பிறகு மஹாராஜாவும் வசந்தசேனையும் அந்தப் பக்கம் வர, வசந்தன் தன் தாயாரிடத்திலே போய், இளவரசர் வசந்தசேனையை அந்த சிம்மாசனத்தினின்றும் நீக்கி, உம்மை மஹாராஜா அதன்மீது உட்கார வைத்துக்கொள் ளும்படி எப்படியாவது செய்விப்பதாகச் சத்தியஞ் செய்த தாகக் கூறினன். அதைக் கேட்டவுடன் வசந்தசேனை மும்மூர்த்திகளாலும் ஆகாத இக்காரியம்—இந்த—இந்த —இந்த— [அழுகிறாள்.]

ப. கண்ணே, அழாதே ! சொன்னபடி கேள்—என்ன சொன் ஞள் ?

வி. [அழுதுகொண்டே] பிராணநாதரைப் பார்த்து இந்த—இந்த —வேசி மகனல் ஆகப்போகிறதா என்முள் மாமி!

ப. [திடுக்கிட்டெழுந்து] என்ன சொன்ஞள் ! என்ன சொன் ஞள் !

வி. என் பிராணநாதரை வேசி மகன் என்று சொன்ஞள் மாமி!

ப. அதைக் கேட்டுக்கொண்டு மஹாராஜா சும்மாகவா இருந் தார் ? மனோஹரனும் சும்மாகவா இருந்தான் ?

வி. மஹாராஜா தலையைத் திருப்பிக்கொண்டு சும்மாகத்தானி ருந்தார். பிராணநாதர் மிகுந்த கோபத்துடன் உம்மை வேசி என்ற நாவை உடனே வெட்டி எறிகிறேன் என்று வசந்தசேனை அருகிற் சென்முர்—

ப. பிறகு ? பிறகு ?

வி. அப்பொழுது உடனே மஹாராஜா பிராணநாதர் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு வாளை விட்டு விடும்படி கட்டளையிட்டார்.

ப. ஆனால் அவளைச் சும்மாகவா விட்டுவிட்டான் மனோஹரா னும் ?

வி. மஹாராஜா அவ்வாறு கட்டளையிட்டும், நாவை அறுத்தா லொழிய விடேன் என்று பிடிவாதமாகக் கூறினார். பிறகு சத்தியசீலர் ஏதோகாதிற் கூற, உடனே வாளை யெறிந்து விட்டுக் கண்களில் நீர் தாரைதாரையாய்ச் சொரிய சபே லென்று போய்விட்டார்.

ப. கண்ணே ! மனோஹரா ! நீயே புத்திரசிகாமணி !— விஜயா பிறகு மஹாராஜா என்ன செய்தார் ?

வி. அவரும் ஒருவருடனும் பேசாமலே இன்னொரு புறமாகப் போய்விட்டார்.

ப. அவ்வளவாவது என் மானத்திற்காகச் செய்தாரே, வசந்த சேனையை அவள் சொன்னதற்காக மெச்சிக் கொள்ளாமல் இதுவும் என் பாக்கியந்தான் ! இன்னும் யாராவ திருந்தா களா அவ்விடத்தில், இதையெல்லாம் கேட்டுக்கொண்டு ?

வி. ஆம், சத்தியசீலர் இருந்தார்.

ப. சத்தியசீலர் ! அவர் என்ன செய்தார் ? அவரும் வாளா இருந்துவிட்டாரோ ?

வி. ஆமாம்.

ப. ஆமாம்!—அவராவது நியாயம் அநியாயம் மஹாராஜாவுக்கு எடுத்துரைக்க லாகாதா ? மனோஹரன்தான் என்வாக்கால் கட்டுண்டிருக்கிறான் ; மஹாராஜாவோ, கேட்கவேண்டிய தில்லை, இந்த சத்தியசீலருக்கு எங்கே போயது ? சீ ! அவா களை யெல்லாம் வெறுத் தென்னபயன்? என் தலை யெழுத் தை நோகவேண்டும்.— [மஞ்சத்தின் மீது சாய்கிறாள்.]

ஐயோ ! இந்த நிலைமைக்கும் வந்து விட்டேனே நான் ! இப்படியு மிருந்ததோ என் விதி ! என்னை என் கணவன் முன்னிலையிலேயே, ஒருத்தி—இம்மாதிரியாகப் பேசவும் நேர்ந்ததே !

வி. 54 [பத்மாவதியின் கண்ணீரைத் துடைத்து] மாமி, அழவேண்டாம். மாமி, நீங்கள் கண்ணீர் விடுவதை நான் பார்த்து எப்படி சகிப்பேன்?

ப. எனக்காக நான் வருந்தவில்லை! அச் சொல்லைக் கேட்டபொழுது மனோஹரனது மனம் எவ்வாறு பற்றியெறிந்திருக்க வேண்டும்! இம் மானக்கேட்டைச் செவியுறக் கேட்டும் நாம் பழிவாங்கா வண்ணம் நமது தாயார் நம்மை பந்திந்து விட்டனளே என்று என்ன வருந்தினையோ! —மனோஹரா மனோஹரா! சீ! இப்பழி சொல்லைக் கேட்ட பிறகும் நான் உயிரோடிருக்கிறேனே! மனோஹரா! உன் பொருட்டே நான் உயிர் தரித்திருக்கிறேன், இல்லாவிடின் உடனே எனதுயிரை விட்டிருப்பேன்—மனோஹரனிடம் இப்பொழுது ஒரு வார்த்தை கூறுவேனாயின் மும்மூர்த்திகள் வந்து தடுத்தபோதிலும் வசந்தசேனையைக் கொல்வான் என்பதற்குச் சந்தேகமில்லை. மனோஹரனுக்கு விடையளிக்கவா வசந்தசேனையைக் கொல்லும்படி?—சீ! என்ன என்னை நானே மறந்தேன்! அப்படிச் செய்வேனாயின் நான் இதுவரையில் பொறுத்திருந்ததெல்லாம் என்ன பிரயோஜனமாகும்? இது எனக்கு ஏற்றதன்று, வருவனவெல்லாம் வரட்டும், இதை விட இன்னும் கேடு வேறென்ன சம்பவிக்கப் போகிறதெனக்கு? இதைப் பொறுத்தவள் எதையும் பொறுப்பேன். ஆயினும் மனோஹரன் வருந்திக்கொண்டிருப்பான். அவனுக்கு ஏதாவது சமாதானம் சொல்ல வேண்டும்.—விஜயா, மனோஹரன் எங்கே?

வி. நான் சற்று முன்பாகப் பார்த்தபொழுது காவிரியோரத்தில் தன் தலையை இடது கையில் தாழ்த்திக்கொண்டு ஜலத்தை உற்றுப் பார்த்த வண்ணமாய் உட்கார்ந்திருந்தார்.

ப. நாம் அங்கே போவோம் வா—இல்லை சற்றுப் பொறு, இதோ சத்தியசீலருக்கு ஒரு நிருபம் எழுதிவிட்டு வருகி

றேன். அவர் எவ்வாறு இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தாரோ கேட்போம்.

**[ஒரு பெட்டியினின்றும் ஓலையும் எழுது கோலும் எடுத்து ஒரு நிருபம் எழுதுகிறாள்.]**

விஜயா, நீ சென்று நீலவேணியை அழைத்துவா.

**[விஜயாள் போகிறாள்.]**

ஒரு யோசனை தோற்றுகிற தெனக்கு; நேரில் மஹாராஜா வுக்கே ஒரு நிருபம் எழுதிக் கேட்போம். எப்படி யிருந்த போதிலும் அக்னி சாக்ஷியாக மணந்த மனைவி நான் என் பதை அவர் மறந்திருக்கமாட்டார்! அவரை நான் பாரா விட்டாலும் ஏன் எழுதிக் கேட்கலாகாது? என்ன நியாயம் தான் சொல்லுகிறாரோ பார்ப்போம்.

**[இன்னொரு நிருபம் எழுதுகிறாள்.]**

சீ! என்ன! கண்ணீர் மறைக்கிறது!—

**விஜயாளும் நீலவேணியும் வருகிறார்கள்.**

நீ. அம்மணி, சற்று வேலையாகப் போயிருந்தேன், மன்னிக்க வேண்டும்.

ப. சரிதான்; நீலவேணி, நீயே இதைச் செய்யத்தக்கவள். இதோ இரண்டு நிருபங்களிருக்கின்றன. இந்த மேல் விலாசத்தின்படி இதை மஹாராஜாவுக்கும், இதை சத்தியசீலருக்குங் கொடுத்துவிடு. மஹாராஜவுக்குக் கொடுக்கும்பொழுது வேறொருவருமில்லாத சமயம் பார்த்துக் கொடு. இதில் ஒன்றும் தவறில்லை. ஆயினும் ஒருவரு மறியாதபடி கொடு, தெரியுமா?

நீ. அம்மணி, அப்படியே செய்கிறேன். தங்களுடைய வார்த்தைக்குக் குறைவுண்டோ? எப்படியாவது மஹாராஜாவும் தாங்களும் ஒருமைப்பட்டுச் சுகமாய் வாழ்ந்தாற் போது மெனக்கு,

ப. நீலவேணி, அப்படி ஒன்றுமில்லை. இதுவேறு சமாசாரம். நான் சொன்னபடி செய், போ சீக்கிரம்.

நீ. அப்படியே ஆகட்டும், அம்மா. [போகிருள்.]

ட. நாமினி போவோம் வா. [போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

## நான்காவது காட்சி.

இடம்:—அரண்மனையில் ஒரு மூலே.

காலம்:—காலே

விகடன் தள்ளாடிக்கொண்டு வருகிருன்.

விக. இதென்னமோ சமாசாரம் தெரியலே? என்னமோலேகியம் திச்தீச்சிக்கினு இருந்துதுண்ணு எடுத்து சாப்பிட்டுட்டேன் வயித்தியர் பொட்டியிலே யிருந்து, அது நம்மெ தள்ளுது—பூர்ணுதி லேக்யம்—நல்ல லேக்யம்!

[கீழே விழுகிருன்.]

வசந்தன் ஓடி வருகிருன்.

வ. ஐயா! ஐயா! விகடரே! எழுந்திருங்கையா!

விக. எங்கே?—லேக்கியம்!

வ. இங்கே வயித்தியரு வந்து கேட்டா, நானு இங்கே இல்லே இண்ணு சொல்லிடுங்கோ — தெரியுமா? சந்தேகமில்லே நானு இங்கே ஒளிசிக்கிறே!

[மூலேயில் ஒளிந்துகொள்கிருன்.]

விக. சர்தான், சர்தான்—ரொம்ப நண்ணு இருக்குது லேக்யம்!

அமிர்தகேசரி வருகிருன்.

அ. எங்கே காணும்? இங்கேதான் ஓடிவந்தாற்போலிருக்கிறது. இதோ விகடர் படுத்திருக்கிருர். இவரைக் கேட்போம்— ஐயா, விகடரே,—

விக. லேக்யம்! லேக்யம்!—

அ. என்ன லேக்யம்! ஐயா, சற்றெழுந்திருமையா! பகற் பொழுதில் தூங்கலாகாதென்று தன்வந்திரி கௌசிகர் கலைக்கோட்டுமுனி முதலிய பெரியோர்கள் வயித்திய சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறார்களையா; எழுந்திரும், இதென்ன தூக்கம்?

விக. அல்லாம் பூர்ணாதி லேக்யந்தா, போங்கையா!

அ. பூரணாதி லேகியந்தானா! என்ன விளையாடுகிறீர்? வசந்தர் எங்கே, பார்த்தீரா?

விக. என்னையா தொந்தரவு பண்ரிங்கோ? என்னையா வோணும்?

அ. வசந்தர் எங்கே?

விக. அல்லாம் அந்த வயித்தியரு பொட்டியிலே யிருக்கும், போயி நீங்களும் சாப்பிட்டுவாங்க.

அ. ஓஹோ! நம்முடைய பெட்டியிலிருந்து பூரணாதி லேகியத்தைத் திருடிச் சாப்பிட்டுவிட்டு மயங்கிக் கிடக்கிறார் போலிருக்கிறது!—ஐயா விகடரே, அது போனாற்போகிறது, வசந்தர் எங்கே?

விக. வசந்தனா? அதோ அங்கே இல்லே, போயி பாத்துக்குங்கோ வேணுமின்னா! [மறுபடியும் படுத்துக்கொள்கிறான்.]

அ. இதென்ன கஷ்டம்! அங்கே போய்ப் பார்ப்போ மெதற்கும்.

வ. [மூலையிலிருந்து] ஐயா! விகடரே! அந்த வயித்தியரு வந்தா இல்லேயிண்ணு சொல்லிடுங்கோ, தெரியுமா?

அ. ஓ! ஆசாமி உள்ளே யிருக்கிறார்—வாருமையா வெளியே.

வ. வரட்டுமா?

அ. வாரும்.

வ. [வெளியே வந்து] ஏ! நீங்களா?

அ. நான்தான், தயவு செய்து இந்த மருந்தைச் சாப்பிட்டு விடுங்கள்.

வ. அதிருக்கட்டுமையா!—ஐயா விகடரே! நீங்கதானே என்னெ காம்பிச்சி குடுத்திங்கோ! சந்தேகமில்லே

அ. கொஞ்சம் மருந்தைப் புசித்துவிடுங்கள்.

வ. இவரெ கேக்காதே நானு மருந்து சாப்பிடமாட்டேன்—ஐயா, விகடரே, இந்த மருந்து சாப்பிடலாமா?

விக. என்ன மருந்து, லேக்யமா?

அ. அவர் மயக்கமாய்க் கிடக்கிறார், அவரைக் கேட்பதில் பிரயோஜன மில்லை, ஐயா.

வ. என்ன மருந்து? சொல்லுங்க ஐயா—ஓகோ! என்னமானு வெஷங் கொடுத்துக் கொண்ணுடப் பாக்கறிங்களோ? வயித்தியரே! பயித்தரெ அஞ்சி, பத்திரம்!

அ. ஈசனே! ஜகதீசனே!—இது நெல்லிக்கனி லேகியம்.

வ. ஐயா, விகடரே, நெல்லிக் கண்ணி லேக்கியமாம், சாப்டலாமா?

விக. சீசீ! அதெல்லாம் ஒதவாத், பூர்ணாதி லேக்யம் சாப்பிடுங்கோ, பலே சொகுசு! [மறுபடியும் கீழே விழுகிறான்.]

வ. ஐயா, இது வாணும்; பூர்ணாதி லேக்யம் கொடுத்தா கொடுங்கோ, இது வாணும்.

அ. ஐயோ! பூரணாதியா? அதைச் சாப்பிட்டு விட்டு தான் மயக்கம் பிடித்துக் கிடக்கிறாரே இவர், தெரியவில்லையா? வேண்டாமையா, இதைப் புசியும்.

வ. இது வாணும், பூர்ணாதிதான் வேணும். சந்தேகமில்லே! சந்தேகமில்லே!

[ஒருவரை யொருவர் சுற்றி யோடி முடிவில் இருவருமாக விகடன் பேரில் விழ, விகடன் எழுந்திருந்து இருவரையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கூச்சலிடுகிறான்.]

வசந்தசேனை வருகிறாள்.

வஸே. இதென்ன! மஹாராஜா இருக்கு மிடத் தருகில் இவ்வளவு கூச்சலென்ன? இங்கு யாரும் காவலாளிக

ளில்லையா? உங்களுக் கென்ன வேலை இங்கே? போங்கள் வெளியே!

[வசந்தன் ஒரு புறமாக ஓடிப்போகிறான்.]

விக. அண்ணாத்தே, நம்மெ தூக்கிக்கினு போங்க, அண்ணாத்தே!

[அமிர்தகேசரியைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள அமிர்தகேசரி அவனை மெல்ல அழைத்துச் செல்கிறான்.]

வனே. [ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு.] எனக் கின்னது செய்கிற தென்று தோன்றவில்லை; ஒரு புறம், உடனே மஹாராஜாவைப் போய்ப் பார்க்கலாமா வென்று தோற்றுகிறது; ஒரு புறம் பார்க்கலாகாது என்று தோற்றுகிறது. இப்பொழுது பார்த்தால் ஒருவேளை என்னைக் கண்டதும் கோபம் முன்னிலும் அதிகரிக்குமோ என்னவோ? பாராவிட்டாலோ, அப்படியே இவரது மனம் திரும்பாது நிலைத்துவிட்டால் என் செய்வது? எப்படிப் பார்த்தபோதிலும் கஷ்டந்தான்! என்ன செய்வது?

நீலவேணி வருகிறாள்,

நீ. அம்மா, உம்மை அந்தப்புர மெங்கும் தேடி யலைந்து விட்டல்லவோ வந்தேன்.

வனே. என்னவோ முக்கியசமாசார மிருக்கவேண்டும்—என்ன சீக்கிரம் சொல்.

நீ. பத்மாவதிதேவி மஹாராஜாவுக்கு ஒரு நிருபம் எழுதி யிருக்கிறார்கள்.

வனே. பத்மாவதியா? எங்கே அது? மஹாராஜாவிடம் போய்ச் சேர்ந்துவிட்டதா அது?

நீ. இல்லை, என்னிடத்தில்தானிருக்கிறது.

வனே. கொடு இப்படி! கொடு இப்படி!

நீ. கொடுத்தால் என்ன தருகிறீர் எனக்கு?

வனே. என்ன வேண்டுமென்றாலும் தருகிறேன், கொடு இப்படி!

[நிருபத்தை வாங்கிப் பிரித்து வாசிக்கிறாள்.]

"பிராணநாதா, நான் ஏன் தங்களைப் பிராணநாதா என்று

அழைக்கலாகாது? எது எப்படி யிருந்தபோதிலும் தாம் எனது பிராணநாதர் என்பதை நான் எனதுயிருள்ளளவும் மறவேன். பிராணநாதா! நான் எவ்வளவு துயரந்தான் பொறுத்திருப்பேன்? நான் பொறுத்ததெல்லாம் போதாதோ? தமக்குப் பிறந்த குமாரனை ஒருத்தி வேசி மகனென்று கூறத்தாம் சும்மா கேட்டுக்கொண்டிருத்தல் நியாயமா? இப்பழிச் சொல் தம்மையும் சார்ந்ததன்றோ? இது நியாயந்தானோ? எல்லாமுணர்ந்த தமக்கு நான் என்ன கூறக்கூடும்? எல்லாம் தம்முடைய சித்தம். இங்ஙனம்—பத்மாவதி'—நீலவேணி, அதென்ன?

நீ. இதுவும் பத்மாவதி எழுதியதுதான். சத்தியசீலருக்குக் கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள்.

வனே. அப்படியா? கொடு இப்படி அதையும்.

நீ. [மெல்லிய குரலுடன்] மஹாராஜாவின் நிருபத்தை ஒருவருமறியாத சமயம் பார்த்துக்கொடுக்கும்படி கட்டளையிட்டார்கள்.

வனே. உம்! அப்படியா?—இதிலென்ன எழுதியிருக்கிறது பார்ப்போம்— [நிருபத்தைப் பிரித்து வாசிக்கிறாள்.]

"ஐயா, தாம் இந்த ராஜ்யத்தில் உயிருடனிருக்கும் பொழுது இப்படிப்பட்ட அநியாயம் நடக்கலாமா? மனோஹரனை ஒருத்தி வேசிமகன் எனக்கூறினால் தாம் அதைக் கேட்டுக்கொண்டு வாளாயிருப்பதா? இதுவோ உம்முடைய நீதி? மிகவும் அழகாயிருக்கிறது! இது வரையில் நற்பெயரெடுத்தது எதற்கு லாபம்? இது ஒன்றால் உமது புகழெல்லாம் அழியுமன்றோ? தாம் இவ்வசையைப் பொறுத்துக் கேட்டுக்கொண்டிருந்ததற்கு சீக்கிரம் நியாயமறிய விரும்புகிறேன். இங்ஙனம், பத்மாவதி"—ஆஹா! வசந்தசேனை அதைரியப்படாதே!—சற்று முன்பாக இனி என்ன இருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை. நல்லயோசனை! இந்த யோசனை எனக்கன்றி வேறு யாருக்குத்தான் தோன்றும்?

[ரகசியமாக நிருபங்களை மாற்றி விடுகிறாள்.]

நீலவேணி, உன்னையொத்த புத்திசாலிகளுடைய உதவி யிருக்குமளவும் எனக் கென்ன குறை?

நீ. அம்மா, எனக்கென்ன புத்தி யிருக்கிற தம்மா?

வனை. அப்படி யல்ல. உன் புத்தி உனக்குத் தெரியுமோ? பிற ருக்கல்லவோ தெரியும்; உன்னுடன் பல நாள் பழகி வந்த எனக்கல்லவோ தெரியும்.

நீ. எல்லாம் உம்முடைய் பாக்யந்தான்.

வனை. நீலவேணி, நீ இதுவரையில் எனக்குச் செய்து வந்த உப காரமெல்லாம் ஒரு பெரிதன்று; இப்பொழுது நீ எனக்கு ஒரு பெரிய உதவி செய்யவேண்டும். செய்கிறுயா?

நீ. அம்மணி, அதென்ன அப்படிக் கேட்கிறீர்களே! சொல் லும், இந்தக்ஷணமே செய்கிறேன்.

வனை. சந்தேக மென்ன!—நீலவேணி, நான் இப்பொழுது புறப் பட்டுப் போய் மஹாராஜாவிடம் பேசிக்கொண்டிருக்கி றேன். நீ தூரத்தில் அவருக்குத் தெரியாதபடி வந்திருக்க வேண்டும். நான் ஒரு சைகை செய்கிறேன். அப்பொழுது உடனே நீ அவரெதிரில் வந்து, இந் நிருபத்தை அவருக் குக் கொடுக்கவேண்டும், அவருடைய மேல் விலாசம் எழுதி யிருக்கிறது பார்த்தையா, இதைக் கொடுத்து, சற்றுதூரத் தில் நின்றுகொண்டிரு. நான் “ஏன் நிற்கிறுய்? போ” என்று கட்டளையிடுவேன். உடனே, போகும்பொழுது; அகஸ்மாத்தாய் இந்நிருபம் உன்னிடமிருந்து கீழே விழு வதுபோல், இதை நழுக விடவேண்டும்; அப்பொழுது மஹாராஜாவாவது நானுவது “அது என்ன?” வென்று கேட்க நேரிடும், உடனே நீ மிகவும் பயந்தவள்போல் பாசாங்கு செய்து, இதை ஒருவரு மறியாதபடி பத்மாவதி சத்தியசீலரிடம் கொடுக்கும்படி கட்டளையிட்டதாக அவ ரிடம் கூறவேண்டும். பிறகு நடக்கவேண்டிய காரியங்களை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். மஹாராஜா இந் நிருபத் தையும் தன்னிடம் கொடுக்கும்படி கேட்டால் முதலில்

இஷ்ட மில்லாதவள்போல் பாவித்து, பிறகு கொடுத்துவிடு, தெரியுமா?

நீ. அம்மா அப்படியே செய்கிறேன். இதில் அணுவளவும் பிசகேன்.

வஸே. ஆம், புத்திசாலியாகிய உனக்கு இன்னும் நான் கூற வேண்டியதில்லை, மறவாதே, நான் சொன்னபடி செய்; நான் மஹாராஜாவிடம் போகிறேன். [போகிறாள்.]

நீ. நம்மையே என்ன ஏமாற்றப்பார்க்கிறாள் இந்த வசந்தசேனை! இவளும் என்னைப்போல் தாதியா யிருந்தவள் தானே! தனக்கிருக்கிற புத்தி எனக்கும் இருக்கு மென்று நினைக்கவில்லை போலும்? ஆயினும் அதிர்ஷ்ட வசத்தால் மஹாராணியாய் விட்டாள்; அவள் சொற்படி நான் நடக்க வேண்டியதானே? எப்படியும் ஆயிரம் வராகன் பெறும் விதத்தைப்பார்க்கவேண்டும்! [போகிறாள்.]

காட்சி முடிகிறது.

# மூன்றாவது அங்கம்.

## முதற் காட்சி.

இடம்:—அரண்மனையில் அந்தரங்கமான ஓர் அறை—காலம்—பகல்.

புருஷோத்தமராஜன் வருகிறார்.

பு. சீ! இந்த வசந்த சேனையினாலேதான் நமக்கு எல்லாத் துன்பங்களும் நேரிடுகின்றன! பத்மாவதி என்னைப் பார்ப்பதுமில்லை. மனோஹரன் மகத்தான கோபங் கொண்டிருக்கிறான். பிரஜைகளெல்லாம் என்னை வெறுக்கிறார்கள். இனி அதர்ம வழியில் நான் செல்வது நியாயமன்று இனிமேலாவது திருந்தி நற்பெயரெடுக்கவேண்டும்; இவ் வசந்தசேனையைப் பார்ப்பதும் தவறு!—ஆம்!—ஆம்! வீண் தீர்மானங்கள்! வீண் எண்ணங்கள்! ஐயோ! என் மன வுறுதியை நான் என்னென் றிகழ்வேன்! இத் தீர்மானங்களெல்லாம் வசந்தசேனையின் பாதத்திலணிந்த கிண்கிணிச் சப்தத்தைக் கேட்கும் பொழுதே எங்கோ பறக்கின்றன! என் நல் லறிவெல்லாம் அவளது முகப் பார்வை பட்டவுடனே எங்கோ ஓடி ஒளிக்கிறதே! இல்லாவிடின் அவளைச் சிம்மாசனத்தில், பலரறிய சபையில், எனதருகில், உட்காரவைத்துக் கொள்வேனோ? இல்லாவிடின் என் சொந்த மனைவியை அவள் வேசியெனக் கூறவுங் கேட்டிருப்பேனோ?—ஜகதீசனே! உலகாளும் என்னை இவள் ஆள்கின்றனளே!--சீ! இதென்ன வாழ்வு? எல்லோரும் நகையார்களா? இனியாவது இவளது வலையிற்படாது தப்பிப் பிழைக்க வேண்டும்!

[உட்காருகிறார்.]

வசந்தசேனை மெல்ல வருகிறாள்.

உன்னை யார் இங்கு வரச்சொன்னது? போ, இனி என் முன் வரவேண்டாம்!

வசே. பிராணநாதா, இனி நான் வரவில்லை. இதுதான் கடைசி முறை நான் இப் புவியில் தம்மைக் கண்ணுற் பார்க்கப்

போகிறது. பிராணநாதா, இந்தப் பதினாறு வருஷ காலமாகத் தமக்கு மனைவியாயிருந்ததற்காக இப்பொழுது தான் தம்மை நான் ஒரு வரங் கேட்கிறேன்.—என் மீது கருணை புரிந்து இவ் வாளால் என்னைக் கொன்றுவிடும், தமது அழகிய கரத்தால். நான் வேண்டிக்கொள்வது இவ்வளவே! இதாவது செய்ய லாகாதா?

பு. வசந்தசேனை! இதென்ன இது?

வனை. பிராணநாதா, நான் இனி உயிர் வாழேன். நான் அறியாப் பேதமையால் வாய்தவறி ஏதோ குற்றமாகக் கூறிய போதிலும், தாம் என்னைக் கொல்லும்படியாகவாவது கருணைகூரலாகாதா? நான் வாய்தவறி ஏதோ கூறிவிட்டதற்காக இப்படியும் தண்டிக்கலாமா? பிராணநாதா, இனி அடியாள் இறந்தபின் உம்மை ஏதாவது வேண்டப் போகிறேனோ? இதுவே எனது கடைசி வேண்டுகோள்! இவ்வளவு மனமிரங்கி என்னைக் கொன்று என் துயரத்தைப் போக்கலாகாதா?

பு. வசந்தசேனை, நீ ஏன் இறக்கவேண்டும்?

வனை. பிராணநாதா, அதற்குக் காரணமுங் கேட்க வேண்டுமோ? இந்த வுடலை நான் தரிப்பதே தமது இன்பத்தின் பொருட்டு; என்னால் தமக்குத் துன்பம் நேரிடும் பக்ஷத்தில், இவ்வுடல் இருப்பானேன்? [அழுகிருள்.]

பு. வசந்தசேனை, அழாதே! அழவேண்டாம்!

வனை. பிராணநாதா, நான் இறப்பதற்காக அழவில்லை. நான் போன பிறகு தமது சுகத்தை யெல்லாம் என்னைப்போல் யார் பார்த்துக்கொள்ளப் போகிருர்களென்றே எனக்குக் கண்ணீர் வருகிறது.

பு. வசந்தசேனை, இறப்பதைக் குறித்து இப்பொழுது யோசிக்கவேண்டியதில்லை. அழாதே! நான் சொல்வதைக்கேள்! இப்படி உட்கார்—வசந்தசேனை, எது எப்படி யிருந்தபோதி

னும் மனோஹரனையும் பத்மாவதியையும் நீ அவ்வாறு தூஷிக்கலாமா?

வஸ. பிராணநாதா, நான் தான் ஏதோ வாய் தவறிச் சொல்லி விட்டேனென்று ஏற்றுக்கொள்ளுகிறேனே! இன்னுமென்ன இவ் வேதனையை அனுபவிப்பதைவிட நான் இறந்தலே நலம்!

பு. கண்ணே, போனது போகட்டும். இனி அதைக் குறித்து வருந்தாதே—இனி நீ இம்மாதிரி ஒரு காலும் கூறமாட்டாய், எனக்குத் தெரியுமே; அழாதே, நான் சொன்னபடி கேள்.—என்ன சமாசாரம்?

வஸ. ஒன்று மில்லை, பிராணநாதா—களைத் திருக்கிறாற்போல் இருக்கிறதே; காலையில் போஜனங் கொள்ள வில்லையோ?

பு. இல்லை, கண்ணே.

வஸ. அது ஏனப்படி? நான் ஒரு வேளை பாராவிட்டால் எல்லாம் கெட்டுப்போய் விடுகிறது. நான் சென்று சித்தஞ் செய்யச் சொல்லவா?

பு. வேண்டாம், சற்றுப் பொறுத்துப் போகிறேன்—வசந்த சேனை, அம்மட்டும் இரண்டுமுறை மனோஹரன் கரத்தினின்றும் தப்பிப் பிழைத்தனையே! நானருகில் இருந்திராவிடில் நீ இறந்தே யிருப்பாய்!

வஸ. அதைப்பற்றி யெல்லாம் இப்பொழுது யோசிப்பானேன்? பிராணநாதா, திருவையாற்றருகில் நமக்காக ஓர் நூதனத் துறை கட்டும்படி உத்திரவு செய்திருந்தீரே, அது முடிந்து போயிற்றா?

பு. முடிந்துபோய் விட்டது.—மனோஹரன் அருகிலிருக்கும் பொழுது எப்பொழுதும் நீ மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். சற்றும் யோசிக்காமல் என்ன மூடத்தனமாய் அவனை வேசி மகனென அழைத்தாய்!

வஸ. காரணமின்றி—பிராணநாதா, நாம் எப்பொழுது அந்தத் துறையைப் பார்க்கப் போவது?

பு. அதிருக்கட்டும்—என்னவோ கூறவந்தவள் நிறுத்தி விட்டனையே, என்ன கூறவந்தாய்? சொல், சொல்.

வஸ. அதெல்லா மிப்பொழு தெதற்கு?—பிராணநாதா, நாளைத் தினம் போவோமா அங்கு?

பு. கண்ணே என்னவோ கூறவந்தாய், சொல் அதை ஒளியாதே.

வஸ. ஒன்று மில்லை, காரணமின்றி இவ்வுலகத்தில் எதுவும் பிறவாது என்று கூறவந்தேன், வேறொன்றுமில்லை—பிராணநாதா, நாளைத்தினம் போய் நாம் ஜலக்கிரீடை செய்வோமா?—பிராணநாதா, அதைப்பற்றி யெல்லாம் ஒன்றும் யோசியாதீர்,—சொல்லும் நான் கேட்பதற்கு, என்ன பிராணநாதா?

பு. என்ன காரண மின்றிப் பிறவாது? நான் எதைப்பற்றி யோசிக்கிறேன்? வசந்தசேனை, உன் மனதில் ஏதோ இருக்கிறது, இன்னதென்று சொல்.

வஸ. ஒன்று மில்லை, பிராணநாதா.

பு. இல்லை, ஏதோ இருக்கிறது! கண்ணே, சொல் ஏன்? பயப்படுகிறாயா என்ன?

வஸ. பயமொன்று மில்லை, பிராணநாதா, வதந்தி காரண மின்றிப் பிறக்குமோ? உலைவாயை மூடினாலும் ஊர் வாயை மூடலாகுமா? என்கிறார்களே அதைத் தான் கூறினேன்.—அப்புறம், அந்தத் துறைக்குப் போகலாமா நாளை? சொல்லும் பிராணநாதா.

பு. வசந்தசேனை, என்ன வதந்தி?

வஸ. போம், பிராணநாதா! நான் கேட்டதற்குப் பதில் கூறாது என்னென்னவோ யோசிக்கிறீர்கள்.

பு. இல்லை, இல்லை; உன்னிஷ்டப்படி நாளையே போகலாம்.—அதென்ன வதந்தி சொல்லிவிடு. நான் கேட்பதை நீ மறைக்

கலாமா ? நீ கேட்பதை நான் மறுக்கிறேனோ ? என் கண் ணல்ல, சொல் சீக்கிரம்.

வஸே. பிராணநாதா, இந்தச் சமாசாரந் தவிர மற்ற சமாசாரங் களைக் கேளும். இதை மாத்திரம் கேளாதீர், உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.—நான் போய் உமக்கு போஜ னம் சித்தம் செய்யச் சொல்லவா ?

பு. இப்பொழுது வேண்டாம், சற்றுப்பொறுத்தாகட்டும்.— வசந்தசேனே, இப்படி வந் துட்கார். என்ன வதந்தி ? நான் அதைப்பற்றி யேன் கேட்கலாகாது ?

வஸே. மறுபடியும் அதைப்பற்றியே யோசித்துக் கொண்டிருக்கி றீரே, வேண்டாம்—போஜனத்துக்கு வாரும், இன்னும் நானும் போஜனங் கொள்ள வில்லை.

பு. வசந்தசேனே, நீ யெப்படியும் என்க்குக் கூறவேண்டும்.

வஸே. ஐயோ ! இதென்ன தொந்தரவு ! என் வாய் தவறி ஏதோ சொல்லிவிட்டேன், பிறகு கஷ்டமாய் முடிந்ததே—பிராண நாதா, நான் இப்பொழுதே சொன்னேன், அதை நீர் கேட் பது நியாய மன்று; நானும் உமக்குச் சொல்லுதல் நியாய மன்று.

பு. வசந்தசேனே, இந்த சமாசாரத்தை முற்றிலும் கூறின லொழிய நான் இன்றைத்தினம் போஜனங் கொள்ளேன் !

வஸே. ஐ ஐயோ ! பிராணநாதா இதென்ன தர்ம சங்கடம் ! நான் என்ன செய்வது ? வாரும் போஜனங் கொள்ள.

பு. நான் வரமாட்டேன், சொன்னல் வருகிறேன்.

வஸே. ஐயோ ! நீர் வாரும், அப்புறம் சொல்கிறேன்.

பு. முன்பு சொல், வருகிறேன்.

வஸே. பிராணநாதா, நான் எல்லா சமாசாரங்களையும் கூறி உமக் களவற்ற வருத்தத்தையும் அவமானத்தையும் கொண்டு வரமாட்டேன் உயிருள்ளளவும் இது உமக்குத் தெரியா

திருப்பதே நலம். வேண்டுமென்றால் இது பத்மாவதியைக் குறித்த விஷயமென்று மாத்திரம் கூறுகிறேன்.—வாரும் போஜனங் கொள்ள.

பு. பத்மாவதியைப் பற்றிய விஷயமா! அவளைப் பற்றிய விஷயமென்ன இருக்கப்போகிறது?—வசந்தசேனை, நீ முற்றிலும் ஆதியோடந்தமாகக் கூறினாலொழிய நான் வர மாட்டேன், ஒரே வார்த்தை!

வசே. பிராணநாதா, நீர் என்னைக் கொன்றாலும் சரி, நான் ஒருவர் மீது கோள் சொல்லமாட்டேன்.

[ஒரு புறமாய்ப் போய் உட்கார்ந்துகொண்டு, மெல்ல சைகை செய்கிறாள்.]

மெல்ல நீலவேணி வருகிறாள்.

நீ. மஹாராஜா, நான் வரலாமோ?

பு. என்ன சமாசாரம்?

நீ. ஒன்றுமில்லை, தங்க ளிடத்தில் ஒரு நிருபம் கொடுக்க வேண்டி யிருக்கிறது.

பு. என்ன நிருபம்?

நீ. பெரிய ராணி கொடுக்கும்படி கட்டளை யிட்டார்கள்.

பு. உனக்கென்ன பயித்தியம் பிடித்திருக்கிறதோ? என்னிடமா? பத்மாவதியா?

நீ. ஆம், இதோ பாரும்.

பு. இது கனவா?—[படிக்கிறார்.] "சோழ நாட்டுக் கெடிஸ் தலாதிபதி புருஷோத்தம மஹாராஜாவின் சன்னிதானத்திற்கு" பத்மாவதியின் கடிதமா இது?

நீ. ஆம்.

பு. ஆம், சந்தேக மில்லை. அவளுடைய கையெழுத்து எனக்கு ஞாபக மிருக்கிறது'—என்ன ஆச்சரியம்!

[பிரித்துத் தனக்குள் படிக்கிறார்.]

என்ன? இதென்ன இது—கனவு காண்கிறேனா என்ன?—

பத்மாவதியா நமக்கு இப்படி எழுதுகிறாள்? இன்னொரு முறை வாசித்துப் பார்ப்போம்—[மறுபடியும் படிக்கிறார் தனக்குள்.] சீ! சந்தேக மில்லை! இதென்ன விந்தை! எனக்கா, இப்படி எழுதுவது?

வனே. நீலவேணி, ஏன் இங்கு நிற்கிறாய்? போ.

[நீலவேணி அகஸ்மாத்தாய் விழுவதுபோல் மற்றொரு நிருபத்தைக் கீழே விட்டு, திடீரென்று பயந்தவள் போல் அதை எடுத்து மறைத்துக் கொள்கிறாள்.]

நீலவேணி, அதென்ன;

பு. நீலவேணி, அதென்ன, நிருபமா?

நீ. [பயப்படுவதுபோல் நடித்து] ஆம். [போக முயல்கிறாள்.]

பு. நீலவேணி! வா இப்படி, நான் கேட்டுக்கொண் டிருக்கிறேன், எங்கே போகிறாய்?

நீ. இல்லை.

பு. என்ன நிருபம் அது?—என்ன! நான் கேட்கிறேன், சும்மா இருக்கிறாய்?

நீ. மஹாராஜா!

பு. என்ன? சீக்கிரம் சொல்!

நீ. [மஹாராஜாவின் காலில் வீழ்ந்து] மஹாராஜா, என்னை மன்னிக்கவேண்டும். இந்த நிருபத்தைப் பற்றி என்னை ஒன்றும் கேட்கலாகாது, தம்மை இரந்து வேண்டிக்கொள்ளுகிறேன். பத்மாவதிதேவி யறிந்தால் எனதுயிர் போய் விடும்!

பு. என்ன ஆச்சரியமாயிருக்கிறது! பத்மாவதியின் நிருபமா? எனக்கா? யாருக்கு அது?

நீ. மஹாராஜா, தமக் கல்ல, பத்மாவதிதேவி—எனக்கு—

பு. எனக் கல்ல! பிறகு யாருக்கு?

நீ. இதை ஒருவருக்கும் வெளியிடலாகாது, வெளியிட்டால் உனதுயிர் போய்விடுமென்று எனக்குக் கட்டளை யிட்டார்கள் பத்மாவதிதேவி.

பு.70 நீலவேணி! கொடு இப்படி அந் நிருபத்தை!

நீ. மஹாராஜா! எனதுயிர் போனாலும் நான் கொடுக்கமாட்டேன்! என்னை மன்னிக்க வேண்டும். என்னை இதுவரையில் காத்து ரக்ஷித்த தேவிக்கு நான் ஒருகாலும் துரோகம் செய்யேன்! மஹாராஜா! மஹாராஜா!

பு. நீலவேணி! [வாளை உருவி] அந்நிருபத்தை நீயே கொடுக்கின்றையா அல்லது உன்னைக் கொன்று எடுத்துக்கொள்ளவா?

நீ. மஹாராஜா! தாம் எப்படியாவது என்னுயிரைக் காப்பாற்ற வேண்டும். ஐயோ! என்னுயிர் போனாலும் வேறெவருக்கும் காண்பிப்ப தில்லையென்று பிரமாணம் செய்திருக்கிறேனே!

பு. கொடு இப்படி! [பிடுங்கிக்கொண்டு] "மந்திரி சத்தியசீலர் அவர்களுக்கு"— [பிரித்து வாசிக்கிறார்.]

"எனது பிராணநாதர் அவர்களுக்கு" என்ன!

[திடுக்கிட் டெழுந்து நிருபத்தை விரைவில் தனக்குள் வாசித்துப் பார்த்து அதிக கோபத்துடன் கிழித்தெறிகிறார்.]

போ! என் முன் நில்லாதே!

[நீலவேணியைப் பிடித்து அறைக்கு வெளியாகத் தள்ளிவிட்டு, மஞ்சத்தின் மீது சாய்கிறார்.]

வஸே. பிராணநாதா! பிராணநாதா! இதென்ன? இதென்ன மஹாராஜா?

பு. வசந்தசேனை! என்னை இனி மஹாராஜாவென் றழையாதே! நான் இனி அப்பெயரை வகிக்கத் தக்கவனல்லன்.

வஸே. என்ன இது பிராணநாதா? ஏதோ நீலவேணி நிருபம் கொண்டுவந்து கொடுத்தாள்; அதைக் கிழித் தெறிந்துவிட்டு இவ்வாறு துயரப்படுகிறீரே! என்ன சமாசாரம்? என்ன நிருபம்? என்னிடங் கூறலாகாதா?

பு. வசந்தசேனை, நீ வாய்தவறிக் கூறியது நிஜமாய் முடிந்தது, மனோஹரன் வேசி மகன்தான்! பத்மாவதி வேசிதான்! சந்தேகமில்லை!—சீ! இப்படியுமிருந்ததா என்னுடைய விதி? இதுவரையில் என் கண் விளங்கா திருந்ததே! இந்த அவமானத்தையும் நான் பொறுக்க வேண்டுமோ?

வஸ. மஹாராஜா! ஐயோ! இப்படி தமக்குத் துக்கம் நேரிடுமென்றே இதைப் பற்றித் தாம் என்ன வற்புறுத்திக் கேட்டும் சொல்லமாட்டேன் என்றேன்.

பு. ஆனால் இது உனக்கு முன்பே தெரியுமோ?

வஸ. மஹாராஜா, தாம் ஒருவர் தவிர மற்றெல்லோருக்கும் இது நெடு நாளாகப் பிரசித்தமான விஷயமே! தமக்குக் கூறினால், எங்கு கோபங்கொள்ளுகிறீரோ என்று எல்லோரும் பேசாதிருக்கிறார்கள். நானும் எங்கு இப்படி தமக்கு மிகுந்த வருத்தம் நேரிடுகிறதோ என்று சும்மா இருந்தேன்!

பு. [முத்த மிட்டு] கண்ணே, நீயே பதிவிரதை!

வஸ. ஆயினும் மஹாராஜா, இவ்விஷய மெப்படி உமக்குத் தெரிந்த திப்பொழுது?

பு. எப்படித் தெரிந்ததா? அத்துஷ்டை சத்திய சீலனுக் கெழுதிய நிருபமே என் கையிற் கிடைத்தது! இதோ கிடக்கிறது பார்!—பத்மாவதி! சத்தியசீலா! உங்களிருவரையும் இன்னும் க்ஷணப்பொழுதில் கசக்கிப் பிழிந்து விடுகிறேன் பாருங்கள்! அப்படியா சமாசாரம்? இதோ புறப்படுகிறேன்!

வஸ. பிராணநாதா, தாம் அவசரப்படலாகாது; தீர விசாரியாது ஒரு காரியமும் செய்யலாகாது. பிறகு ஏதாவது தப்பிதமாயிருந்தால் தாம் வருத்தப்பட நேரிடும்.

பு. இன்னும் என்ன விசாரிப்பது? என் கண்ணால், பசுவின் தோலைப் போர்த்த புலியாகிய அப்பாதகி, சத்தியசீலனுக்கு

எழுதிய கடிதத்தையே நேரிற் கண்டபின், இன்னும் என்ன அத்தாக்ஷி வேண்டும்? இந்நிருபத்தில் அவனுக்குப் பிறந்த பிள்ளையாக மனோஹரனைச் சுட்டி எழுதி யிருக்கிருள்! இன்னும் என்னவேண்டும்?

வஸ. பிராணநாதா, "கண்ணாரக் கண்டதும் பொய், காதாரக் கேட்டதும் பொய், தீர விசாரித்தது மெய்" என்று தாம் இன்னும் விசாரியாது ஒரு காரியமும் செய்யலாகாது.

பு. இன்னும் என்ன விசாரிப்பது?

வஸ. அப்படி யல்ல, பூரணமாய் விசாரித் தறிந்துகொண்டு பிறகே தாம் சிட்சை செய்யவேண்டும்.—பிராணநாதா, வாரும், இப்படி யுட்காரும், இது சாதாரணம்தான், உலகத்தில் பத்தினிகள் ஆயிரத்தி லொருவர்.

பு. இதைக் கூறவோ என்னைத் தடுத்து அழைத்து வந்தாய்?

வஸ. இல்லை பிராணநாதா, தாம் நன்றாய் விசாரித்தறிய வேண்டும், அன்றியும்—

பு. என்ன, மறுபடியும் மறுபடியும் அதையே சொல்லிக் கொண்டிருக்கிறாய்? இன்னும் என்ன விசாரிப்பது? சொல்.

வஸ. பிராணநாதா, எனக்கு ஒரு யோசனை தோற்றுகிறது. இது உண்மையோ அன்றோ, என் அறியும்பொருட்டு சத்திய சீலரையே வரவழைத்து மனோஹரனைப் பற்றிப் பேசிப் பார்த்தாலோ?—

பு. பேசுவதாவது! அவர்களைக் கொல்வதை விட்டுப்பேசுவதாவது? இந்த வேசியின் மகனோ எனக்குப் பிற்காலம் இந்நாட்டை யாள்வது? அவனுக்கோ நான் இளவரசு பட்டம் சூட்டுவது? அவனையே முதலில் கொல்ல வேண்டும்.

வஸ. பிராணநாதா, நான் சொல்வதைச் சற்றே செவியுற்றுக் கேளும். எனக்கொரு நல்ல யுக்தி தோற்றுகிறது. சத்தியசீலரை வரவழைத்து, அவரை திடீரென்று ஒரு காரணமுங் கூறாமல், மனோஹரனைக் கொன்று வாவென்று

கட்டளை யிட்டனுப்பினால், அவர் என்ன உத்தரம் கூறுகிறாரோ பார்ப்போம்; தனக்கு பிறந்த சொந்த மகனாயிருந்தால் மனோஹரனைக் கொல்ல ஏற்றுக் கொள்ள மாட்டார், பின் வாங்குவார். அதில் எல்லா வுண்மையும் வெளியாகும். பிராணநாதா, யாரா யிருந்தபோதிலும் தீர விசாரியாது தண்டிக்கலாகாது.

பு. வசந்தசேனை, இதுவே நல்ல யோசனை. அப்படி உண்மை வெளியாகும் பக்ஷத்தில் சத்தியசீலனைக்கொண்டே மனோஹரனைக் கொல்வித்தால், இது சத்தியசீலனுக்கும் தக்க தண்டனையாகும்.—யார் அங்கே வெளியே? சேவகா!

[*சத்தியசீலர் வருகிறார்*]

சத்தியசீலரே! வாரும். உம்மைத்தான் அழைத்துக் கொண்டு வரும்படி கட்டளை யிடவிருந்தேன். தாமே இங்கு வந்ததேது அகஸ்மாத்தாய்?

ச. மஹாராஜா காலைமுதல் போஜனம் செய்யாதிருப்பதாகச் சேதி வரவே, என்ன காரணமென்று விசாரித்துப்போக வந்தேன். தேகம் ஒன்றும் அசௌக்கிய மில்லையே?

பு. தேகத்திற் கொன்றும் அசௌக்கியமில்லை.

ச. மிகவும் சந்தோஷம்—ஆனால் தாங்கள் போஜனங்கொள்ளச் செல்லலாமே?

பு. இதோ போகிறேன்.—ஆயினும் அதற்குள் உம்மை ஓர் கேள்வி கேட்கவேண்டும்; அதற்காகத் தான் உம்மை வரவழைக்க விருந்தேன்—ராஜத்துரோகிகளுக்கு என்ன தண்டனை விதித்திருக்கிறது நமது சாஸ்திரங்களில்?

ச. மஹாராஜா, செங்கோன் முறைமைப்படி ராஜ்ய பரிபாலனம் செய்யும் அரசர்க்குத் துரோகம் செய்பவர்களை சிரச்சேதம் செய்து விடும்படி மனு கூறி யிருக்கிறார்.

பு. மந்திரிகளுடைய கடமை மஹாராஜாவின் உத்திரவின் படி நடக்கவேண்டு மென்ப தல்லவா?

ச. ஆம், சந்தேக மில்லை.

பு. சத்தியசீலா! எங்கே பார்க்கிறாய்? உடனே புறப்பட்டுப் போய்—மனோஹரனைக் கொன்று வா!

ச. யாரை?

பு. மனோஹரனை.

ச. என்ன? மனோஹரரையா?

பு. ஆம்.

ச. மஹாராஜா! தம்முடைய குமாரரையா?

பு. ஆம்.

ச இதென்ன எனக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறதோ? அல்லது மனோப்பிராந்தியோ?

பு. சத்தியசீலா! என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்? புறப்படு உடனே!

ச. மஹாராஜா! இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது! வேடிக்கையார்த்தமாகக் கூறுகிறீரா என்ன?—மனோஹரரையா கொன்று வரும்படி கட்டளையிடுகிறீர்?—நானோ—மனோஹரரைக் கொல்வது?

பு. வேடிக்கையென்ன இருக்கிறது இதில்? உண்மையாகத் தான் கட்டளை யிடுகிறேன்.

ச. நானெப்படி அவரைக் கொல்வது? எதற்காகக் கொல்ல வேண்டும்? இதென்ன நியாயம்! தம்முடைய புத்திரரைக் கொல்லும்படி தாமே கட்டளையிடுகிறீரே! மஹாராஜா, நான் நம்பத் தக்கதா யில்லையே!

பு. சத்தியசீலா! மந்திரியினுடைய கடமை மஹாராஜாவின் சொற்படி நடப்பதென்றனையே! இது தானே? என்னை நீ ஒரு நியாயமுங் கேட்கவேண்டியதில்லை, போ! இந்த க்ஷணமே சென்று மனோஹரனைக்கொன்று வரவேண்டும்!

ச. மஹாராஜா, தமது சொற்படி நான் நடக்கவேண்டிய துண்மையே. ஆயினும் இதைப் பார்க்கிலும் முக்கியமான

கடமையொன்று மந்திரியாகிய எனக்கிருக்கிறது. அது, மஹாராஜா ஏதாவது ராஜ தர்மத்திற்குத் தவருய் நடந்தால், அதை எடுத்துக் கூறவேண்டுமென்பதே! மஹாராஜா எப்படிப்பட்ட மஹாபாதகம் செய்தவனையும் திர விசாரியாமலும், அவனுக்குக் காரணங் கூருமலும் தண்டிப்பது நியாயமன்று. விசாரித்த பிறகே அக்குற்றத்திற்குத் தக்க தண்டனை விதிக்க வேண்டும். முதலில், மனோஹரர் என்ன குற்றஞ் செய்தார்?

பு. சத்தியசீலா! என்ன அதிகமாய் பேசுகிருய்? உன் நியாயமெல்லாம் எதற்காகக் கூறுகிருய் என்று எனக்கு நன்ருய்த் தெரியும்; நான் சொன்னபடி செய்கிருயா மாட்டாயா? நான் காரணம் சொல்லமாட்டேன்.

ச. மஹாராஜா, சற்று என்மீது தயைக்கூர்ந்து நான் கூறுவதைக் கேட்கவேண்டும். இது நியாய மல்ல, காரணமின்றி மனோஹரரைக் கொல்லும்படி விதிப்பது எல்லா சாஸ்திரங்களுக்கும் விரோதம். அதுவுமன்றி அதனுல் ராஜாங்கத்திற்குப் பெருங்கேடு விளையும். நமது ராஜ்யத்திற்கெல்லாம் பேராண் போலிருக்கிருர், அவரை—

பு. மந்திரி! இந்நியாயங்களெல்லாம் உன்னை நான் கேட்கவில்லையே! நீ என் கட்டளைப்படி மனோஹரனைக் கொல்கின்றனையா மாட்டாயா?—மாட்டாய்?—

[புருஷோத்தமன் ஒரு நிருபம் எழுதுகிருர்.]

ச. மஹாராஜா தாம் ஏதோ புத்தி சபலத்தினுல் இவ்வாறு கட்டளை யிடுகிறீர்கள், சற்று நிதானிப்பீராகில் எல்லாம் தணிந்து விடும். மனோஹரர் உயிரிழக்கத் தண்டிக்கும்படியாக என்ன குற்றம் செய்திருக்கக் கூடும்? ஒன்றுமிராது! தாம் அவசரப்பட்டு ஏதாகிலும் செய்வீராகில் முடிவில் இது தமது ராஜ்யத்தை வேருடன் அழிக்கும் காரணமாம்.

பு. சத்தியசீலா! என்ன சும்மா பேசிக்கொண்டிருக்கிருய்? போதும் நிறுத்து! இதோ இதைப் பார்த்துக்கொள்

[நிருபத்தை எறிந்து] உன்னிஷ்டம்!—வசந்தசேனே, வா போவோம் நாம் போஜனங்கொள்ள.

[வசந்தசேனையுடன் போகிருர்.]

ச. இதென்ன வசந்தனுக்குப் பிடித்திருக்கும் பயித்தியம் இவருக்கும் பிடித்திருக்கிறதா என்ன?—இதில் என்ன எழுதியிருக்கிருர்?—“இன்றைத்தினம்! சூரியன் அஸ்தமிக்கு முன் நீ மனோஹரன் என்பவனைக் கொல்லாவிட்டால் உன்னைச் சிரச்சேதம்! செய்துவிடுவேன். இது சத்தியம்—புருஷோத்தமன்”—ஐயோ! இதென்ன! என் தலைவிதியோ? சரி நம்முடைய வேலை முடிந்தது! நான் இப்பொழுது என்ன செய்வது! சீ! தகப்பனுக்கும் மகனுக்கும் சண்டை மூட்டி வைத்தவனெனும் கெட்ட பெயர் நமக்கு வேண்டாம். ஆயின் நான் வீணில் இறப்பதோ! போய் கேட்டுப் பார்ப்போம் மனோஹரரையே, இதற்கு என்ன நியாயம் கூறுகிருரென்று; அவர் சத்தியவான், எப்படியும் இருவரி லொருவர் இறக்க வேண்டிவரின், நாணிறக்கவேண்டுமே யொழிய மனோஹரர் இறப்பது நியாய மன்று—நான் இறக்கத்தான் வேண்டும்! இப்படிப்பட்ட மஹாராஜாவிடம் மந்திரியா யிருந்ததற்குத் தண்டனை வேண்டாமோ?—ஐயோ! நானெப்படி மனோஹரரிடம் இதைக் கொடுத்துக் கேட்பது? ஈசனே! ஈசனே! எல்லா முனது செயல்.

[போகிருர்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாவது காட்சி.

இடம்:—நந்தவனம். காலம்—மாலை.

மனோஹரன் ஒரு ஊஞ்சலின்மீது சயனித்திருக்க, விஜயாள் பக்கத்திலுட்கார்ந்து வெற்றிலை மடித்துக் கொடுக்கிருள்.

வி. பிராணநாதா, பாண்டிய தேசத்திற்குப் போய் வந்தீரே, என்ன சமாசாரம்? எல்லாம் சொன்னீரா என்னிடம்?

ம. உன்னிடம் என்ன சமாசாரம் சொல்வது? உனக்கென்ன தெரியும்?

வி. எனக்கொன்றும் தெரியாதோ? எல்லாம் தெரியும். என்னிடம் சொல்ல இஷ்டமில்லையென்று சொல்வதுதானே! வேறு யாராவது கேட்டால் சொல்லுவீர்கள்; நான் கேட்டால் சொல்வீர்களா? உம்! உம்!

ம. கண்ணே, ஏன் கோபித்துக் கொள்ளுகிறாய்? என்ன வேண்டுமென்றாலும் சொல்லுகிறேனுனக்கு. உறந்தை நகரைப் பிடித்த சமாசாரஞ் சொல்லவா? அல்லது முத்து விஜயனது குஞ்சரத்தைக் கொன்றதைப் பற்றிச் சொல்லவா? அல்லது முத்து விஜயனை வாள் யுத்தத்தில் முடித்ததைப் பற்றிச் சொல்லவா?

வி. உம்! உம்! இதெல்லாம் யார் கேட்டது? எப்பொழுது பார்த்தாலும் உங்களுக்குக் கொல்லுகிறதும், வெட்டுகிறதும், ஜெயிக்கிறதுந்தானே! தூங்கும்பொழுது கூட அதைப் பற்றியே கனவு காண்கிறீர்கள். என்னைப் பற்றி எப்பொழுதாவது கனவு காண்கிறீர்களா? உம்! உம்!

ம. கண்ணே, கோபித்துக் கொள்ளாதே! உன் மாமியார் உன் மீது கோபித்துக் கொள்ளவேண்டாம் என்று நன்றாய்க் கட்டளையிட்டாலுமிட்டார்கள்! என்பாடு கஷ்டத்தில் வந்து விட்டது. பிறகு என்னதான் சொல்லச் சொல்கிறாய்! கண்ணே, விஜயா, இப்படி வா, கோபங் கொள்ளாதே இதற்கெல்லாம்; கொடு அந்த வெற்றிலைச் சுருளை இப்படி.

வி. பிராணநாதா, அங்கெல்லாம் போயிருந்தீரே, அங்கே பெண்கள் ஏதாவது நூதனமாக ஆபரணங்கள் அணிந்து கொள்ளுகிறார்களா? என்ன என்ன ஆபரணங்கள் அணிகிறார்கள்? சொல்லும் ஒன்று விடாது.

ம. விஜயா, இதுதானா எனக்கு வேலை? நான் அங்கே ஸ்திரீகள் என்ன அணிகின்றனர் என்று அறியவோ போயிருந்தேன் வேறேதாவது யுக்தியாய்க் கேட்கலாகாதா?

வி. உம்! உம்! எனக்கு வேறொரு சங்கதியும் வேண்டாம். நான் மாமியிடம் போகிறேன்.

ம. [அவளைத் தடுத்து] அடடா! இதென்ன சங்கடமாய் முடிந்தது!—விஜயா, வா இப்படி, என் கண்ணாயிற்றே நீ, உட்கார் இப்படி. வேறெதையாவது கேள். இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்?

வி. ஆனால் பிராணநாதா, வெளியில் போயிருந்தீரே எனக்கென்ன கொண்டுவந்தீர்கள்?

ம. கொண்டு வந்ததை நான் சொன்னால் என்ன தருகிறாய் எனக்கு?

வி. என்ன வேண்டு முமக்கு?

ம. என்ன தருகிறாய் எனக்கு?

வி. [தன் முகத்தை மூடிக்கொண்டு] ஒரு முத்தந் தருவேன்!

ம. அப்பா! உன்வாய் முத்தம் அவ்வளவு விலை உயர்ந்ததோ?

வி. இல்லையோ, பிராணநாதா?

ம. ஆமாம் நீ கோபித்துக் கொள்ளாதே அம்மட்டும்.

வி. எனக்கென்ன கொண்டுவந்தீர் சொல்லும்.

ம. உனக்காக என்னைத்தான் கொண்டு வந்தேன்!

வி. இவ்வளவு தானே, பிராணநாதா?

[முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள்.]

ம. விஜயா, உனக்கு என்னைப் பார்க்கிலும் வேறென்ன வேண்டும்? என்னைவிட உனக்கு மேலான பொருள் என்ன இருக்கிறது?

வி. ஆம், பிராணநாதா, உண்மையே. [ஒரு முத்தம் கொடுத்து] இன்னும் என்ன கொண்டு வந்தீர்கள்?

சத்தியசீலரும் ராஜப்பிரியனும் ஒரு புறமாகப் பேசிக்கொண்டு வருகிருர்கள்.

ரா. உதவாது! நான் எப்படியும் சொல்வேன்.

ச. வேண்டாம்! நான் சொன்னபடி கேளும்.

ம. ராஜப்பிரியா! சத்தியசீலரே! என்ன இருவரும் சச்சர விட்டுக்கொண்டு வருகிறீர்கள்?—விஜயா, நீ போ.

[விஜயாள் போகிருள்.]

ச. அரசே, நாங்கள் இந்த சமயத்தில் இங்கு வந்ததற்காக மன்னிக்கவேண்டும்.

ம. அதுவொன்றுங் குற்றமில்லை. நீங்கள் வந்தாலென்ன? ஏன் இருவரும் சண்டை யிட்டுக்கொண்டு வந்தீர்கள்?

ச. ஹா! [கண்ணீர் விடுகிருர்.]

ம. சத்தியசீலரே! என்ன கண்ணீர் விடுகிறீர்?

ச. ஒன்று மில்லை; தங்களிடம் விடைபெற்றுப்போக வந்தேன்; தெய்வாதீனத்தால்—

ம. என்னிடம் விடைபெற்றுக் கொள்வதாவது? என்ன சமா சாரம்?

ச. அரசே, தெய்வாதீனத்தால் நான் சீக்கிரம்—இறக்க வேண்டி வந்திருக்கிறது.

ம. என்ன!

ச. ஆகவே அதற்குள் தம்மைக் கண்டு விடை பெற்றுச் செல்ல வேண்டுமென்று வந்தேன்.

ம. இதென்னசமாசாரம்? உமக் கென்ன பித்தம் அதிகரித் திருக்கிறதா என்ன? தாம் ஏன் இறக்கவேண்டும்? ராஜப் பிரியா, இதெல்லாம் என்ன?

[சத்தியசீலர் மஹாராஜாவின் உத்தரவைக் கையில் கொடுக்கிருர்.]

[படித்துப் பார்த்து] இதென்ன ஆச்சரியம்! மஹாராஜா வுக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறதோ? அல்லது விநாச

காலம் கிட்டியதோ? இது உண்மையா யிருக்குமோ? அல்லது நான் உறங்குகிறேனோ? மஹாராஜாவாவது இப்படிப் பட்ட கட்டளை யிடுவதாவது!—சத்தியசீலரே, இதெல்லாம் என்ன விளையாட்டு?—ராஜப்பிரியா, உனது வேடிக்கையோ இது?

ச. அரசே, இவ்வளவும் உண்மை தான். மஹாராஜாவே சற்று முன்னர் என்னை அழைத்து இவ்வண்ணம் கட்டளை யிட்டார்.

ம. என்ன காரணம்பற்றி இவ்வாறு கட்டளையிட்டார்? இது நம்பத் தக்கதாயில்லையே!

ச. நான் எவ்வளவோ தர்மங்களைக்கூறி இரந்து கேட்டும் இதற்கு நியாயமொன்றுங் கூறேனென்றார். பிறகு இதை எழுதி என்னிடம் கொடுத்துவிட்டுச் சரேலென்று அந்தப் புரஞ் சென்றார்.

ம. மஹாராஜாவுக்குப் பயித்தியம் பிடித்திருக்கிறது என்பதற்குச் சந்தேக மில்லை.—சத்தியசீலரே, இப்பொழுதென்ன செய்யப்போகிறீர்?

ச நான், செய்வ தென்ன இருக்கிறது? மஹாராஜா ஆக்கினைக்குட்பட்டு, நான் இறப்பதே! வேறென்ன இருக்கிறது?

ம. ஏன், என்னைக் கொல்லுகிறது தானே?

ச. அரசே, இதுவரையில் நான் பட்டது வருத்தமன்று! இப்பொழுது தான் எனக்குத் துக்கமாயிருக்கிறது! தம்முடைய வாயால் இவ்வண்ணம், கூறுகிறீரே நான் இதற்கோ பாத்திரன்? மஹாராஜாவின் கட்டளையைக் கேட்டவுடனே இறந்திருப்பேன். ஆயினும் தம்மைக் கடைசி முறை பார்த்துவிட்டு, பிறகு தற்கொலை புரியலாமென்று வந்தேன்.

ம. [கட்டியணைத்து] சத்தியசீலரே! மெச்சினேன்! மெச்சினேன்! இப்படிப்பட்ட ஆப்தன் என் பொருட்டு உயிரிழக்க நான் சும்மா பார்த்துக்கொண்டிருப்பேனோ? சத்தியசீலரே, இதற்கு நான் ஒருகாலும் சம்மதியேன்! என் உயி

ருள்ளளவும் என் பொருட்டு நீர் உயிர்விட ஒரு காலும் உடன் படேன்! இந்தப் புருஷோத்தம மஹாராஜாவினுல் என்ன முடியும்? அரிஹரப் பிரம்மாதிகள் வந்த போதிலும் நான் உம்மைக் காப்பாற்றுவேன்! அஞ்சாதீர்!

ச. அரசே, நான் இறப்பதற்கு அஞ்சவில்லை, ஆயினும் நாம் மஹாராஜாவின் கட்டளையின்படி நடக்கவேண்டும்.

ரா. எல்லாம் அவர் கட்டளையின்படி இதுவரையில் நடந்தது போதும்! ஏன் ஐயா? இனியாவது நான் இளவரசருடன் பேசலாமா?—அரசே, இனி நாம் தாமதிக்கலாகாது. இது வரையில் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தோம், இனி பொறுப்பது தவறு. நாம் பொறுக்கப் பொறுக்க இது அதிகரிக்கிறதே யொழிய குறைந்த பாடில்லை. வில் வளை கிறதே யென ஏமாந் திருக்கின்றனர் போலும்! அரசே இக் காரியத்திற்கெல்லாம் மூல காரணமாயிருப்பவள் அந்த வசந்தசேனையே! மஹாராஜா அவள் சொற்படி ஆடி வருகின்றனர்! உடனே நாம் புறப்பட்டுப் போய் இந் க்ஷணமே அவளைக் கொன்று வருவோம் முன்பு. பிறகு எல்லாம் சரியாய் விடும். நம்முடைய சைனியங்களெல் லாம் நமது வசத்திலிருக்கிறார்கள். நாம் ஒரு வார்த்தை கூறினும் பட்டண முழுமையும் ஹதம் செய்து விடு வார்கள்!

ம. ராஜப்பிரியா, நீ கூறியதிற் சந்தேகமில்லை! அந்த வேசி வசந்தசேனை தான் இதற்கெல்லாங் காரணமாயிருக்கிறாள் சற்றும் சந்தேக மில்லை. இந்த க்ஷணமே போயவளை நானே கொன்று வருகிறேன். என் தாயாரை அவள் ஹிம்சித்ததற்கெல்லாம் பழி வாங்கவேண்டும்! எடுத்துவா என் உடைவாளை!

ச. அரசே, அவசரப்படாதீர்! சற்று தாமதியும்!

ம. என்ன தாமதிப்பது இனி?—ராஜப்பிரியா! எடுத்துவா உடைவாளை, இல்லாவிட்டால் நான் இப்படியே போகி றேன். [போகப் புறப்படுகிறான்

[ஒரு புறமாக மனோஹரனுக்கு] அரசே, தம்முடைய தாயாருக்குக் கூறிய வார்த்தையைத் தாம் பழுதுபடுத்தலாகாது!

[மனோஹரன் அசைவற்று நின்று விடுகிருன்.]

ரா. என்ன ஐயா கூறினீர்? இப்படிப்பட்ட சமயம் நேர்ந்த போதிலும், சும்மா இருப்பதாகச் சத்தியஞ் செய்தாரோ? தன்னைக்கொல்ல வந்தது பசுவானாலும் கொல்லும்படி கூறியிருக்கிறதை மறந்தீரோ? வசந்தசேனை மனோஹரருடைய உயிருக்கே வழி தேடிவிட்டாளே! இனி தாமதிப்பதெதற்கு?

ம. ராஜப்பிரியா, அப்படியல்ல; என தன்னை உத்தரவின்றி யன்றோ இவர்களைத் தொடுவதில்லையென்று பிரமாணம் செய்து கொடுத்தேன். இவ்விஷயங்களையெல்லாம் கேட்பார்களாயின் எப்படியும் அவர்களே உத்திரவு கொடுப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. வாருங்கள் போவோம். இத்துஷ்டையைப் பொடிப் பொடியாக்கி சற்று நேரத்தில் காற்றில் தூற்றி விடுகிறேன்! மனோஹரனை அறியாள் போலும்! வசந்தசேனை! எனது சௌரியத்தைக் காண்பாய் சீக்கிரம்!—வாருங்கள் போவோம்.

[எல்லோரும் போகிருர்கள்.]

காட்சி முடிகிறது.

## மூன்ரும் காட்சி.

இடம்—அந்தப் புரத்திலோர் அறை. காலம்—மாலை.

ஒரு புறமாக பத்மாவதி, விஜயாள் வருகிருர்கள்.

எதிர்ப்புறமாக மனோஹரன், சத்தியசீலர், ராஜப்பிரியன் வருகிறர்கள்.

வி. [மனோஹரன் காலில் விழுந்து] பிராணநாதா! பிராணநாதா! எனக்கு மாங்கல்ய பிக்ஷை தாரும்.

ம. ஓஹோ! நாம் வருமுன் இவர்களுக்கு எப்படியோ சமாசாரம் தெரிந்து விட்டாற்போ லிருக்கிறது விஜயா, இதென்ன இது? உனக் கென்ன வேண்டும்?

வி. நீர் இறப்பதில்லையென்று எனக்குச் சத்தியம் செய்து கொடும்.

ம. நான் எப்பொழுதும் இறப்பதில்லை யென்ரு?

வி. இப்பொழுது நீர் இறப்பதில்லையென்று சத்தியம் செய்து கொடும். இல்லாவிட்டால் உமது பாதத்தை நான் விடேன்.

ம. இதென்ன விந்தை? விஜயா! என் காலை விடு! அதோ பார், என் தாயார் எனக்காக நின்றுகொண் டிருக்கிருர்கள்!

வி. நீர் சத்தியம் செய்து கொடுத்தாலொழிய நான் விடவே மாட்டேன் பிராணநாதா! [அழுகிருள்.]

ம. கண்ணே! அழவேண்டாம். அப்படியே ஆகட்டும், எழுந் திரு.—அம்மணி, நாங்கள் வருமுன் எல்லா விஷயங்களும் உங்களுக்குத் தெரிந்துவிட்டாற்போ லிருக்கிறது! யார் சொல்லி யிருக்கக்கூடும்?

ப. சத்தியசீலரே, இது உண்மை தானு? என்ன காரணத்திற் காக மஹாராஜா இவ்வாறு கட்டளையிட்டார்?

ச. அம்மணி, உண்மைதான். தாங்களே நேரிற் பார்த்துக் கொள்ளலாம். [உத்தரவைக் கையில் கொடுத்து] ஆயினும் அம்மணி, தாங்களெல்லோரும் ஏன் வருத்தப்படவேண் டும்? நானிறக்கச் சித்தமா யிருக்கிறேன்.

ப. [உத்தரவைத் திருப்பிக் கொடுத்து] மஹாராஜா இதற்கு ஒரு காரணமுங் கூறவில்லையா?

ச. அம்மணி, நான் எவ்வளவோ நியாயங்களைக்கூறிப் பார்த் தேன்! எவ்வளவோ வேண்டினேன்! ஒரு காரணமுங் கூற மாட்டேனென்ருர்.

ப. சத்தியசீலரே, இப்போதிதற் கென்செய்வது?

ரா. என்ன செய்வதாவது?

ம. என்ன செய்வதாவது! அம்மணி, இன்னும் சந்தேகமா? இவ்வளவிற்கும் அத் துஷ்டை வசந்தசேனை காரணமா

யிருக்கிறாள் என்பதற்குச் சந்தேகமில்லை; ஆதலால், ஒரு வார்த்தை சொல்லும், இந்த க்ஷணம் நான் வசந்தசேனை யைக் கொன்று பழி வாங்குகிறேன்!—அம்மணி, என்ன நான் கேட்பதற்குப் பதில் கூறுதிருக்கிறீர்கள்?

ரா. அம்மணி, இனி தாங்கள் உத்தரவளிக்கத் தாமதிக்கலாகாது! தாங்கள் ஒன்றிற்கும் அஞ்சவேண்டாம். வசந்த சேனை இறப்பாளாயின் மஹாராஜாவைப் பிடித்திருக்கும் சனி ஒழியும்; அவர் முன்போலாகி விடுவார். வசந்தசேனை யிறந்தால் நமக்கு மாத்திரமல்ல, இந் நகர வாசிகளுக் கெல்லாம் சுபமாகும். எப்படியாவது தாங்கள் பரோபகா ரத்தை யெண்ணியாவது இந்த உத்தர வளிக்கவேண்டும்.

வி. ஆமாம், மாமி! வசந்தசேனை செத்தால்தான் நல்லது; என்னையும், பிராணநாதரையும், உம்மையும், என்ன என்ன வைதாள் அன்றைத்தினம்!

ச. அம்மணி, ஒரு விதத்தில் இது நல்ல யோசனை யென்றே தோன்றுகிறதெனக்கு, எப்படியும்—

ப. சத்தியசீலரே! என்ன நீரும் இவர்களுடன் சேர்ந்தீர்?—மனோஹரா, நீ கூறியதெல்லாம் உண்மையே. வசந்த சேனைதான் ஒருவேளை இதற்கெல்லாம் காரணமாயிருந் தாலுமிருக்கலாம், ஆயினும் நாம் பழிவாங்குகிற விஷயத் தைப்பற்றி யோசிக்குமுன், மஹாராஜா என்ன காரணத் தைக் குறித் திவ்வாறு கட்டளையிட்டாரென்று விசாரித் தறியவேண்டும்—

ம. அம்மணி, இதென்ன மறுபடியும் பழைய கதை ஆரம்பிக் கிறீர்களே? இன்னும் நியாயங் கேட்ப தென்ன அவரை? நான் சாகவேண்டிய நியாயந்தான்! வேறென்ன வேண்டும்? இந்த நியாயம் தங்களுக்குச் சம்மதிதானே?

வி. பிராணநாதா, தாம் இப்பொழுது இறப்பதில்லை யென்று எனக்கு வாக்களித் திருக்கிறீர்கள், மறவாதீர்!

ம. கொஞ்சம் பேசாதிரு, விஜயா—அம்மணி, இது உமக்கே நியாயமாகத் தோற்றுகிறதா? இனி என்னுல் சும்மா

யிருக்கமுடியாது! ஒரு வார்த்தை சொல்லும். ஹரிஹரப் பிரம்மாதிகள் வந்து தடுத்தாலும், அந்த வசந்தசேனையைக் கொன்று அரை க்ஷணத்தில் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடுகிறேன்; அம்மா! அம்மா! இனி என்னுல் பொறுக்க முடியாது! ஒரு வார்த்தை சொல்லும்! ஒருவார்த்தை ஒரு வார்த்தை! [காலில் வீழ்ந்து தேம்பி அழுகிறுன்.]

ப. [வாரி எடுத்துக் கட்டி முத்தமிட்டு] கண்ணே! மனோஹரா! நீ கூறுவதெல்லாம் உண்மையாயிருப்பினும், நாம் ஒரு காரியத்தைத் தீர விசாரியாது ஒன்றும் செய்யலாகாதே.

ம. அம்மா, நீர் என்மீது கொண்டிருக்கும் பட்சத்தைவிட வசந்தசேனையின்மீது அதிக பட்சமுடையவர்களாயிருக்கிறதுபோல் தோன்றுகிறது. அவளுக்காகத் தாம் இவ்வளவு பரிந்து பேசுவானேன்? நான் எவ்வளவு துயரம் சஹிக்கிறேனென்று உங்களுக்குத் தெரியாது கொஞ்சமேனும்! [ஒரு புறம் கோபமாய்ப் போய் நிற்கிறுன்.]

ப. [ஒரு புறமாக சத்தியசீலருக்கு] சத்தியசீலரே, சற்று நாம் பொறுப்போமாயின், மஹாராஜாவின் மனம் திரும்பினும் திரும்பும். மனோஹரன் நேராகச்சென்று மஹாராஜாவை நியாயங் கேட்டுப் பார்க்கிறது தானே?

ச. ஆம், அது நல்ல யோசனையெனத் தோன்றுகிறதெனக்கு.

ப. கண்ணே, மனோஹரா, இப்படி வா. [அவனிடம் போய்] ஏன் என்மீது வீணிற் கோபித்துக் கொள்ளுகிறுய்?

ம. உங்கள்மீது கோபங் கொள்ளவில்லை யம்மா! ஆயினும் நான் எவ்வளவுதான் பொறுத்திருப்பது?

ப. கண்ணே, நான் சொல்வதைக் கேள். நீ இப்பொழுதே நேரிற் சென்று மஹாராஜாவைக்கண்டு நியாயங் கேட்டுப் பார். அவர் என்ன சொல்லுகிறுரோ அதை யறிந்து கொண்டு பிறகு நடக்கவேண்டிய காரியங்களைத் தீர்மானிப்போம்.

அம்மணி, அம்மணி! இதிற் சற்றும் பிரயோஜன மில்லை அரை நொடியில் முடிக்கவேண்டிய வேலைக்காகத் தாம் எவ்வளவு கஷ்டம் வைக்கிறீர்கள்! ஆயினும் தமக்காக அப்படியே செய்கிறேன்; இதன் பிறகாவது என் னிஷ்டப் படிச் செய்ய உத்தரவு கொடுக்கிறீர்களா?

அதற்கென்ன? பார்த்துக் கொள்வோம். நீ சீக்கிரம் புறப் படு—சத்தியசீலரே, ராஜப்பிரியா, நீங்க ளிருவரும் உடன் செல்லுங்கள்.

அப்பா இப்படி கட்டுப்பட்டிருப்பதைவிட, இந்த உலகத் தில் பிறவாதிருப்பதே நலம். அல்லது பிறந்தால் பேடியாக வாவது பிறக்கவேண்டும்! நான் வருகிறேன் அம்மணி!

[மனோஹரன் சத்தியசீலர் ராஜப்பிரியன் போகிறார்கள்.]

**காட்சி முடிகிறது.**

---

## நான்காம் காட்சி.

இடம்.—மஹாராஜாவின் கொலு மண்டபம் **காலம்**:—மாலை.

புருஷோத்தமன் வசந்தசேனையுடன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறார்; மந்திரிகள் பிரதானிகள் முதலானோர் புடைசூழ்ந்திருக்கின்றனர். வசந்தன், விகடன், அமிர்தகேசரி, ஒருபுறம் உட்கார்ந்திருக்கின்றனர். மற்றொருபுறமாக ரணவீரகேது முதலானோர் உட்கார்ந்திருக்கின்றனர். ராஜப்பிரியன் சிம்மாசனத்திற்கு எதிரில் நிற்கிறான்.

ராஜப்பிரியா, எதற்காக அவன் என்னைப் பார்க்க விரும்பு கிறான்?

ா. அது அவர் வந்து நேரிற் காணும்பொழுது தெரிகிறது. மஹாராஜா, எப்படியாவது சீக்கிரம் காவலாளிகட்கு உள்ளே விடும்படி உத்தரவு செய்யும். இல்லாவிடின் உண்

மையைக் கூறுமிடத்து அவர்களை யெல்லாம் மீறிக் கொண்டு வருவார், அவ்வளவுதான்!

[வசந்தசேனை மஹாராஜாவின் காதில் ஏதோ ரகசியமாய்க் கூறுகிருள்.]

பு. அப்படியல்ல—ராஜப்பிரியா, அப்படி மனோஹரன் என்னைக் காணவேண்டுமென்முல் நமது அரண்மனைச் சேவகர்களைக்கொண்டு இரும்புச் சங்கிலிகளால் கட்டிக்கொண்டு வரும் பக்ஷத்தில் காண்கிறேன், இல்லாவிட்டால் பார்க்கமாட்டேன்.

ரா. உத்தரவுபடி, மஹாராஜா நான் சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டேன். பிறகு தங்களுடைய இஷ்டம். அவரிடம் சென்று இதைச் சொல்லுகிறேன் இதனாலுண்டாகும் நன்மை தீமை தம்மையே சேரும்! [போகிருன்.]

வ. சந்தேகமில்லே! நானில்லெயோ? சந்தேகமென்ன? மஹாராஜா! இவ்வளவு கஷ்டம் என்னத்துக்கு? நம்போ பயித்தியர்கிட்டச் சொல்லி, மருந்து குடுக்கச் சொன்ன, சுருவா தீந்துப் பூடுவாரு அண்ணாத்தே, சந்தேகமென்ன இதுக்கு? அவருக்கும் பயித்தியம் புடிச்சி இருக்குது, உங்களுக்கும் பயித்தியம் புடிச்சி யிருக்குது, எல்லாருக்கும் பயித்தியம் புடிச்சி இருக்குது. சந்தேக மில்லே! சந்தேக மில்லே!

பு. விகடா! வசந்தனை இங்கு யார் அழைத்து வரச் சொன்னது? அழைத்துக்கொண்டு போ வெளியே!

விக. ஐயா! போதும் உங்க பிரசங்கம், வாங்க, பழி ஓரண்டே, பாவம் ஓரண்டே வாங்க, ஐயா வாங்க.

வ. இல்லே மஹாராஜா! எம் முதுவெகூட வளைச்சுட்டாரு, நப்போல் வளை! மஹாராஜா நப்போல்வளை! சந்தேகமில்லே! சந்தேகமில்லே! [விகடன் உட்காரும்படிச் செய்கிருன்.]

சத்தியசீலர் விரைந்து வருகிருர்.

பு. சத்தியசீலா! உன்னை யார் இங்கு வரச் சொன்னது? நான் உனக்கிட்டிருக்கும் கட்டளை யென்ன, நீ நடப்பதென்ன?

ச. மஹாரா்ஜா ! அவைகளை யெல்லாம் பற்றி இப்பொழுது யோசிப்பதற்குக் காலமில்லை. மனோஹரர் அடங்காக் கோபங்கொண்டிருக்கிறார். இப்பொழுது இன்னும் சற்று நேரம் தாம் சும்மா யிருப்பீராயின், சோழ நாடெல்லாம் அழியு மென்பதற்குச் சந்தேகமில்லை ! இனி யோசிப்பதற்கு நேரமில்லை. ஐயனே ! மிஞ்சிவிடும் ! உடனே சேவகர் களுக்கு அவரை உள்ளே விடும்படி கட்டளை யிடா விட்டால் இந்த அரண்மனை ஹதமாய்விடும் அரைநொடியில் என்பதற்குச் சந்தேகமில்லை ! மஹாராஜா, இனி தாமதிக்க லாகாது !—

எல்லோரும். [நின்று] ஆம் ! ஆம் ! மஹாராஜா ! உடனே கட்டளை யிடும்.

ம. [உள்ளே இருந்து] ஆ ஹா ! யார் அவன் என்னை உள்ளே விடேன் என்கிறது ?

எல்லோரும். வந்து விட்டார் ! வந்து விட்டார் !

[கொலுவில் குழப்ப முண்டாகிறது.]

இரும்புச் சங்கிலிகளால் தன்னைக் கட்டிப்பிடித்திருக்கும்
சேவர்கர்களை அப்படியே யிழுத்துக்கொண்டு மனோஹரன்
கோலாகலமாய் விரைந்து நுழைகிறான்.
ராஜப்பிரியன் சற்று பின்னால் வருகிறான்.
பத்மாவதி யாவரு மறியாதபடி பின்னால் வந்து ஒரு புறமாக
முக்காடிட்டு நிற்கிறாள்.

ம. தந்தையே ! நான் விலங்கிற் பூட்டப்பட்டாலன்றி என்னைக் காணமாட்டேனென்றது உண்மைதானா ? இப்பொழுது இங்கிருக்கும் காவலாளர்க்கு என்னை உள்ளே விடலாகாது என்று நீர் கட்டளை யிட்டது உண்மைதானா ? ஏன் தலை குனிந்து கொள்ளுகிறீர்கள் ? நேராக என்னைப் பாரும்! அவைகளெல்லாம் போனாற்போகட்டும். என்னை என்ன காரணம் பற்றிக் கொல்லும்படியாகச் சத்தியசீலருக்குக் கட்டளையிட்டீர் ? நான் என்ன குற்றஞ் செய்தேன் ? என்

னைக் கொல்லாவிட்டால், இன்று சாயங்காலத்திற் குள்ளாக சத்தியசீலரைச் சிரச்சேதஞ் செய்வதாக எழுதிக் கொடுத்தீரே, என்ன காரணம்பற்றி? அவரும் என்ன தவறு செய்தார்?—என்ன சொல்லுகிறீர்கள்? எனக்கு நியாயமாவது கூறும்--அல்லது அக்கட்டளையையாவது மீட்டுக் கொள்ளும்! உமது மைந்தனுயிற்றே நான் என்று கேட்க வரவில்லை; யாராயிருந்தாலுமென்ன? நியாயம் என்பது எல்லோருக்கும் ஒன்றுதான்,—என்ன காரணம்பற்றி என்னைக் கொல்லும்படி கட்டளையிட்டீர்கள்? காரணத்தைச் சொல்லும். அப்படி நான் செய்த குற்றம் உயிரிழக்க வேண்டிய அவ்வளவு கொடியதானல், நானே, உமது முன்னிலையிலேயே, எனதுயிரைப் போக்கிக் கொள்கிறேன்.—என்ன சொல்லுகிறீர்? நான் பன்முறை கேளேனினி. நீதி வழுவாது அரசு செலுத்திய புருஷோத்தமராஜன் ஒரு காரணமுமின்றி தன் மைந்தனைக் கொல்லும்படி கட்டளையிட்டாரென்னும் வசை யாரைச் சேரும் முடிவில்? உம்மையன்றோ?—

பு. தன் மைந்தன்! என் மைந்தன்! என் மைந்தனு நீ?

ம. என் மைந்தனு நீ! என்ன சொன்னீர்? ஹா!

[திமிறித் தன்னைக் கட்டிய சங்கிலிகளை யெல்லாம் அறுத்துக்கொண்டு.]

அப்படியா சமாசாரம்!

எல்லோரும். ஹா! ஹா! [ஆரவார முண்டாகிறது.]

ம. புருஷோத்தம மஹாராஜனே! என்ன சொன்னீர்? அந்த வேசி வசந்தசேனை கூறியதைத் தாமும் நம்புகிறீரோ! இதோ உம்மிருவரையுங் கொன்று பழி வாங்குகிறேன்!

[உடைவாளை வீசி சிம்மாசனத்தினருகே விரைகிருன்.]

எல்லோரும். ஆ! ஆ! அரசே பொறும்! பொறும்!

ம. தனதுயிரை ஒரு பொருளாக மதிக்கின்றவன் என் எதிரில் நில்லான் இப்பொழுது!

[மந்திரி பிரதானிகள் இரண்டு புறமும் ஒதுங்கிப் பயந்து போகின்றனர்.]

க. [உரக்க] அரசே! அவசரப்படாதீர்! அவசரப்படாதீர்! தம்முது தாயாருக்குக் கூறிய வார்த்தையை மறவாதீர்! நான் சொல்வதைக் கேளும்!

ம. சத்தியசீலரே! நிற்காதீர் என்னெதிரில்! எனக் கிப்பொழுதிருக்கிற கோபத்திற்கு உம்மையும் பாரேன்! நில்லாதீர் என்னெதிரில்!—[ஒரு புறமாக அவரைத் தள்ளி விட்டு] புருஷோத்தமராஜனே! என்ன யோசிக்கிறீர்? எடுத்துக்கொள்ளும் உமது வாளை. மனோஹரனுடைய புயவலியை இன்றே காண்பீர்! நிராயுதனாயிருக்கும் உம்மைக் கொல்வது நியாயமன்று—எடும் வாளை! புருஷோத்தமராஜனே! காத்துக்கொள்ளும் உமது தலையைச் சௌரியமிருந்தால்!

[சிம்மாசனத்தின் மீது பாய்ந்து வாளை யோங்குகிறான். சபையோருக்குள் பெருங்குழப்பமும் ஆரவாரமுமுண்டாகிறது.]

மறைந்திருந்த பத்மாவதி வேகமாய் வருகிறாள்.

ப. [மனோஹரன் கரத்தைப் பிடித்துக்கொள்ளுகிறாள்; முக்காடு நழுவி முகம் விளங்குகிறது.] மனோஹரா! நில்! விடு வாளை!

எல்லோரும். பத்மாவதிதேவி! பத்மாவதிதேவி!

ம. அம்மா! இங்கெங்கு வந்தீர்கள்? அங்கல்லவோ இருந்தீர்களென்று பார்த்தேன்! இங்கே ஏது வந்தது?

ப. அதெல்லா மிருக்கட்டும், விடு வாளை! நீ எனக்கு வாக்களித்த தென்ன, இப்பொழுது செய்யத் துணிந்த தென்ன? விடு வாளை!

ம. அம்மணி! இப்பொழு தென்னை மன்னிக்கவேண்டும். இவ்விருவரையுங் கொன்றே என் வாளை விடுவேன்!—புருஷோத்தமராஜனே! எங்கே நழுகப் பார்க்கிறீர்?—

ப. மனோஹரா! என்ன, உன்னையும் மறந்து பேசுகிறாய்! விடு உடனே வாளை!

ம. அம்மணி! சற்று முன்பாக மஹாராஜா கூறியதைக்கேட்டீரா நீர்? இதோ இவர்களிருவரையும் க்ஷணப்பொழுதில் கொன்று, நமக்கு இவர்களிழைத்த தீங்கிற்கெல்லாம் பழி வாங்குகிறேன், இதோ உமது கண்முன்பாகவே! சற்று ஒதுங்கி யிரும்? என் முன் நிற்கவேண்டாம்!

ப. நீ இந்த வாளைக் கொடுத்துவிட்டுப் பின் சென்றாலல்லாமல் நான் இவ்விடத்தை விட்டுப் பெயரேன்!

ம. அம்மணி! சுத்தவீரனாகிய நானோ முன் வைத்த காலைப் பின் வாங்குவேன்? மானமாகிய ஆபரணத்தையே முதலாகக் கொண்ட நானோ என்னை இழிவாகப் பேசியவர்களைச் சும்மா விட்டுவிடுவேன்?

ப. மனோஹரா, என் சொற்படி கேளாய் நீ? எனக்குச் செய்த வாக்குத் தத்தத்தை மறந்தனையோ?

ம. அம்மா! அதை யெல்லா மிப்பொழுது நான் யோசிக்க மாட்டேன். இப்பொழுது நீர் என்னைத் தடுப்பதிற் பயனில்லை! ஒதுங்கி யிரும் சற்றே!

ப. மனோஹரா என் சொல்லைக் கேட்கமாட்டாய் நீ?

ம. கேளேன் இப்பொழுது மும்மூர்த்திகள் வந்து தடுத்த போதிலும், என் பகையை முடித்தே மறுவேலை பார்ப்பேன்!

ப. நீ என் குமாரன் என்பது உண்மையானால் விடு வாளை!

ம. அம்மணி! இதென்ன இது?

ப. மனோஹரா! உனக்கு என் சொற்படி நடக்க இஷ்டமில்லாதிருக்குமாயின், முதலில் உன்னைப் பெற்ற தாயாகிய என்னைக் கொன்ற பிறகே நீ அங்கு செல்வாய்! உன்னைப் பெற்ற உதிரத்தின் உதிரத்தில் உன் வாளைத் தோய்த்த பிறகே மஹாராஜாவிடம் நீ அணுகுவாய்! அப்படி உனக்கிஷ்ட மிருந்தால்-இதோ நிற்கிறேன்—நான் பெண்பால், உன்னை யீன்ற பேதை—என்னை முதலிற் கொன்றுவிட்டு பிறகு ஒரு அடி யெடுத்து வைப்பாய்!—உம்! ஏன் யோசிக்

றுய்? கொல் என்னை முன்பு! இதற்குத் தானே உன்னைப் பத்து மாதம் சுமந்து வருந்திப் பெற்றேன்!

ம. [பாதத்தில் வீழ்ந்து கதறிப் புலம்பி] அம்மணி! அம்மணி! என்ன வார்த்தை சொன்னீர்கள்! ஐயோ! இதையும் உமது வாயினின்றும் நான் கேட்க வேண்டுமோ? அம்மா! என்னை உயிருடன் கொல்கிறீர்களே உமது மொழியால்! மஹாராஜா என்னைக் கொல்லப்பார்த்தார், நீர் என்னைக் கொன்றே தீர்த்து விடுகிறீர்கள்! ஒரு வார்த்தை சொல்லுமே, ஒரு க்ஷணப்பொழுது எனக்கு விடையளியுமே! அதற்குள் இவர்களிருவரையும் கொன்று, என் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுகிறேன்! ஐயோ! வெற்றி வீரனாகிய மனோஹரன் இவ்வசையைக் காதாரக்கேட்டும் சும்மா பொறுத்துக் கொண்டிருந்துவிட்டான் என்று எல்லோரும் ஏளனம் செய்வார்களே நாளை! அம்மணி! அம்மணி;

மனோஹரா! அப்படி ஒருகாலும் ஏளனம் செய்யமாட்டார்கள் மூவுலகையும் வெல்லும் வல்லமையுடைய மனோஹரன், தன் தாயார் சொற்படி நடந்தானெனப் புகழ்வார்கள்! மனோஹரா, இனி நான் பன் முறை உனக்குக் கூறமாட்டேன், நீ என் பிள்ளை யென்பது உண்மையானால் எழுந்திரு உடனே!

ம. அம்மணி! [எழுந்திருக்கிறான்.]

ப. என் சொற்படி நடக்கிறாயா, மாட்டாயா? நீ என் மகனல்லவா?

ம. என்ன உமது சொற்படி நடப்பது?

ப. உனது வாளை இப்படிக் கொடு.

ம. இதோ! [வீசி எறிகிறான்.]

ப. மனோஹரா! உனக்கென்ன அவ்வளவு அவமரியாதை?

ம. அம்மா, இப்பொழுதாவது ஒருவார்த்தை சொல்லும், நிராயுதபாணியாய் இப்படியே இவர்களிருவரையும் கசக்கிப் பிழிந்து விடுகிறேன்!

ப. அதெல்லாமிருக்கட்டும்! என் சொற்படி கேட்கிறாயா மாட்டாயா?

ம. தீர்ந்ததே, இன்னும் மென்ன?

ப. நீ மஹாராஜாவின் சொற்படி நடக்கவேண்டும்.

ம. மஹாராஜாவின் சொற்படி நடப்பதாவது! அவர் சொற்படி நடப்பதென்றால் நான் இறக்க வேண்டியதுதான்!

ப. ஆம்!—உன்னை யிறக்கும்படியாகத்தான் சொல்லுகிறேன். மஹாராஜா அவ்வாறு கூறிய பிறகு, நாமிவ்வுலகில் இருப்பது நியாயமன்று. அவர் சொற்படி நீ இறப்பாய்—நானும் விஜயாளும் இதோ அக்னிப் பிரவேசமாகி உன்னை வந்து சேர்கிறோம்—அஞ்சாதே!

ம. அம்மணி! என்னை இறக்கும்படியா சொல்லுகிறீர்கள்!

ப. ஆம்.

ம. அம்மா! உம்முடைய வாயால்—என்னை இறந்துபோகும்படியா சொல்லுகிறீர்கள்?

ப. ஆம்.

ம. ஆம்!—சரி, இனி உயிர் வாழ்வது நியாமன்று!—சத்திய சீலரே! என் பிரக்ஞை தப்பும் போலிருக்கிறது! நான் மூர்ச்சையா யிருக்கும்பொழுதே என்னைக் கொன்று விடும்—உமது கையால்! [மூர்ச்சையாகிறான்.]

எல்லோரும். ஹா! ஹா! [கண்ணீர் விடுகின்றனர்.]

ப. சத்தியசீலரே! மனோஹரனை மூர்ச்சையா யிருக்கும் பொழுது கொல்வது தர்மமன்று; பிரக்ஞை வந்தவுடன் நமது அரண்மனைக் கொத்தளத் தருகிற் கொண்டுபோய்—கொன்று விடும்!

[தன் முகத்தை மூடி விரைந்து வெளியிற்செல்கிறாள்.—சபையில் ஆரவார முண்டாகிறது—புருஷோத்தமன் வசந்தசேனையை ஒரு புறமாகத தள்ளிவிட்டு மற்றொரு புறமாக போகிறார். தலைசாய்த்தவண்ணமாய் வசந்தசேனை பின்தொடருகிறாள். சபைகலைகிறது.]

காட்சி முடிகிறது.

## ஐந்தாம் காட்சி.

இடம்—கோட்டைமதில். காலம்—நள்ளிரவு

புருஷோத்தமன் ஓர் சேவகனைப்போல் வேஷம்பூண்டு

அலங்கத்தின் ஓர் புறத்திலிருந்து வருகிறார்.

என் மனம்போலவே இன்று ஆகாயமெல்லாம் இருண்டிருக்கிறது! ஆஹா! நான் என்ன தப்பிதம் செய்ய விருந்தேன்! பதிவிரதையாகிய பத்மாவதியின்மீது பழி சாற்றி, என் மைந்தனாகிய மனோஹரனைக் கொல்ல விருந்தேனே! பத்மாவதி வந்து தடுக்காவிட்டால் நான் இன்று மனோஹரன் வாளால் இறந்திருப்பேனென்பது நிச்சயம்! எனக்குத் துரோகம் செய்திருப்பவளாயின், நான் அவளை இந்தப் பதினாறு வருடங்களாகப் பிரிந்திருந்தது மன்றி, எவ்வளவோ தீங்கிழைத்தற்கு, என்னைக் கொல்லும்படி யல்லவோ கட்டளையிட்டிருக்கவேண்டும்!—இது தான் குறித்த இடமென்பதற்குச் சந்தேகமில்லை இருளில் எனக்கொன்றும் தெரியவில்லை; எப்படியும் நான் மனோஹர னுயிரைக் காப்பாற்றவேண்டும்! ஐயோ நான் மஹாராஜாவாயிருந்தும் நேரிற் சென்று இதைக் கூற மன வுறுதி இன்றி, இவ் வேடந்தரித்து, ஒற்றனைப்போல் என் மைந்தன் முன்னே நான் சொல்லும்படி நேரிட்டதல்லவா? ஆம், ஆம்! மனோஹரன் முகத்தை நான் இவ்வளவு தூரம் எல்லாம் நடந்துவிட்ட பிறகு, எப்படி ஏறநோக்குவது? அதோ வருகிறார்கள்! அவர்கள் தான் போல் தோற்றுகிறது—மனோஹரனும் சத்தியசீலனுந் தான்! சந்தேகமில்லை. நான் ஒளிந்திருந்து இவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்களெனக் கண்டறிந்து பிறகு சமயத்தில் இவ்வோலையையும், கணையாழியையுங் கொடுத்து மனோஹரன் மடியாவண்ணம் செய்ய வேண்டும்; இதோ வந்து விட்டார்கள்!

மனோஹரனும், சத்தியசீலரும் வருகிறார்கள்.

ச. அரசே, வேறு வழியில்லையா இதற்கு? என் கையினாற்றான் கொல்லவேண்டுமோ உம்மை?

ம. என்ன மறுபடியும் பழையபடி ஆரம்பித்தீர்? வேறு வழியில்லை, முடியும் உமது வேலையை! நான் உமக்குத் தீங்கு செய்வேன் என்றஞ்சவேண்டாம்; மனோஹரன் உயிருடனிருக்கும்பொழுது ஒருவனுக்கும் அஞ்சினதில்லை, இறப்பதிலும் ஒருவருக்கும் அஞ்சா திறக்கப் போகிறான், பாரும்!

ச. அரசே! என்னுடைய கரத்தால் உமது சென்னியை நான் எவ்வாறு சேதிப்பது? எனக்கு மனம் எப்படி துணியும்? கைதான் எப்படி எழும்? ஐயனே! மற்றெல்லோருமிருக்க பாவி என் கரம்தான் இம்மஹாபாதகத்தைப் புரியவேண்டுமோ? இதற்கென்றோ நான் இப்புவியிலுதித்தேன்?

[வருந்துகிறார்.]

ம. ஐயா! இவைகளை யெல்லாம் குறித்து இப்பொழுது வருந்திக்கொண்டிருப்பதற்குக் காலமில்லை நேரமாய் விட்டது! என் மனவுறுதியைக் கலக்காதீர்! சீக்கிரம்!

ச. ஈசனே! ஈசனே! இதுவும் உமது திருவிளையாட்டோ!

[கண்ணீர் விடுகிறார்.]

ம. என்ன ஐயா! அழுதுகொண்டிருக்கிறீர்கள்! எடும் வாளை! என்னைக் கொல்கிறீரா என்ன இப்பொழுது?

ச. அரசே, உமது கட்டளைப்படியே ஆகட்டும். ஆயினும் நீர் இறப்பதன்முன் எனக்கு ஒரு வரம் கொடுக்கமாட்டீரா?

ம. ஐயா! நல்ல சமயம் பார்த்தீர் என்னை வரம் கேட்க! இப்பொழுது தமக்குக் கொடுக்கும்படியாக என்னிடம் என்ன இருக்கிறது? என்றால் இந்த ஸ்திதியில் கொடுக்க முடியுமானால் கொடுக்கிறேன். சீக்கிரம் கேளும், காலமாய் விட்டது, இறப்பதானால் நான் சீக்கிரம் இறக்கவேண்டும்!

ச. அரசே, நான் வாளை வீசி யுமது சென்னியை வாங்கும் பொழுது நீரும் உமது வாளை வீசி எனது கந்தரத்தையும் வெட்டுவதாக வரமளியும்!

ம. என்ன! நான்தான் இறக்கவேண்டும், என் விதி! உமக்கென்ன? நானுவது உம்மைக் கொல்வதாவது! ஒரு காலும் மாட்டேன்.

ச. அரசே, தாம் எனக்கு வரமளித்தபின் பின்வாங்குவது நியாயமன்று; நீர் இறந்தபின் உம்மைக் கொன்ற கொடும் பாவியாகிய நானே உயிர் வாழ்ந்திருப்பேன்? அப்படி யிறப்பவன், தம்முடைய கரத்தால் இறப்பேனுயின் என் ஜன்மம் புனிதமாகும், அவ்வளவே நான் வேண்டிக்கொள் வது. அரசே! உமக்காக நான் சிறுவயதுமுதல் பாடு பட்ட தற்காக தாம் இவ்வளவு செய்யலாகாதா?

ம. [கட்டி யணைத்து] சத்தியசீலரே! மெச்சினேன் உமது பேரன்பை உம்மைக்கொல்ல எனக்குச் சிறிதும் மனமில்லை; ஆயினும் நீர் வேண்டுவதை மறுக்கலாகாதென வுடன்பட் டேன். எடும் வாளை?

ச. அரசே, நாமிருவரும் நமது கோரிக்கையைக் கூறி யிறப் போம். உமது நிச்சயமென்ன?

ம. [வாளை வீசி] என்னைப்பெற்ற தாய்தந்தையரன்றி எனக்குப் பிறிதொரு தெய்வமில்லை! சுத்த வீரமே என்றும் நிலைத் திருக்குமாக!

ச. [வாளை வீசி] பிறருடைய நன்மைக்காக வாழ்வதே மாந்தர் கடமை! சத்தியமே என்றும் நிலைபெற்றிருக்குமாக!

[இருவரும் வாளை ஓங்குகிறார்கள்.]

மறைந்திருந்த புருஷோத்தமராஜன் வேகமாய் வெளியே வருகிறார்.

பு. [இருவருக்கும் இடையில் நின்று] பொறும்! பொறும்!

இருவரும். யார் அது?

பு. [குரலை மாற்றி] நான் ராஜாவினால் அனுப்பப்பட்ட சேவகன். அவர் முன்பு இட்ட கட்டளையை மீட்டுக்கொண்டதாகக் கூறி, இளவரசர் இறவாதிருக்கும்படி தடுத்து, இவ்வோலையையும், தன் அடையாளமாக இக்கணையாழியையும் கொடுக்கச் சொன்னார்.

ச. அரசே! இது மஹாராஜாவின் முத்திரை மோதிரந்தான் சந்தேகமில்லை. இவ்வோலையிலென்ன எழுதியிருக்கிறது பார்ப்போம்; இருளில் ஒன்றும் தெரியவில்லை! அரசே! எப்படியாவது தெய்வாதீனத்தால் நீர் உயிர்பிழைத்தீரே!

**ராஜப்பிரியன் வருகிறான்.**

ரா. யார் அங்கே?

ம. யார் அங்கே? ஓர் பந்தத்தை யெடுத்துக்கொண்டு வருகிறான். ராஜப்பிரியனா?

ரா. அரசே, உம்மை உயிருடன் காணப்பெற்றேனே!—இது என்ன சத்தியசீலரே?

[புருஷோத்தமராஜன் மறைந்து விடுகிறார்.]

ச. ராஜப்பிரியரே! கொடும் அப்பந்தத்தை இப்படி! அப்புறம் எல்லாம் சொல்லுகிறேன். [படிக்கிறார்.] "மந்திரி சத்திய சீலருக்கு, முன்பு யாம் உமக்கிட்ட கட்டளையை மீட்டுக் கொண்டோம். மனோஹரனைத்தாம் கொல்லவேண்டியதில்லை. புருஷோத்தம சோழன்"—அரசே, சிரஞ்சீவியாக வாழ்வீராக!

ரா. ஆம்! ஆம்!

ம. ராஜப்பிரியா, உனக்கென்ன பயித்தியம் பிடித்துவிட்டதா என்ன? என்ன குதிக்கிறாய்! பந்தத்தை யவித்து விட்டனையே!

ரா. இனி அதற்கு வேலை யில்லை. உமதுடலிருக்கு மிடத்தைக் கண்டு நானும் உயிர் விடலாமென்று தேடிக்கொண்டுவந்த பக்கம். நீர் உயிர் பெற்றதைக் கண்டபின் எதற் குடம்போகும்?

ச. எங்கே இதைக் கொண்டுவந்த சேவகன்?—எங்கும் காணோம், எங்கேயோ போய்விட்டான்!

ம. ராஜப்பிரியா, மஹாராஜா ஏன் இவ்வாறு தன் கட்டளையை மீட்டுக்கொண்டா ரென்று எனக்கு வருத்தமாகவே யிருக்கிறது! நான் இறப்பதே நலம்! நானினி உயிர் வாழ்வானேன்?

ரா. இதென்ன அரசே மறுபடியும்?

ம. நான் ஒரு காலும் இப்பட்டணத்துட் பிரவேசியேன் இனி.

ரா. வேண்டாம்; வாரும், நாம் மூவரும் இப்படியே புறப்பட்டு மாறுவேடம் பூண்டு தேசசஞ்சாரம் செய்வோம் சிலகாலம்; என்னசொல்லு கிறீர்களிதற்கு?

ச. ஆம், அரசே; இதுவே நல்ல யோசனை.

[மூவரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## ஆறும் காட்சி.

இடம்—பத்மாவதியின் அறை. காலம்—இரவு.

பத்மாவதியும் விஜயாளும் வருகிறார்கள்.

வி. மாமி, நான் சொல்வதை நம்புங்கள். என் பிராண நாதர் உயிரோடுதா னிருக்கிறார்; இறக்கவில்லை. தாம் ஒன்றும் அவசரப்பட்டுச் செய்துவிட லாகாது. அக்கினிப் பிரவேசமாவதற்குச் சித்தஞ் செய்து வைத்திருந்த தீயை அவித்துவிடும்படி கட்டளை யிட்டுவிட்டு வந்தேன். தாம் இனி ஒன்றுக்கும் வருத்தப்படவேண்டாம்.

ப. விஜயா, நீ சொல்வதொன்றும் எனக்கு நன்றாக விளங்கவில்லை. மனோஹரன் இறக்கவில்லை யென்று உனக்கெப்படி உறுதியாய்த் தெரியும்?

வி. மாமி, எல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும்; என்னிடந்தா னிப்பொழுது இறப்பதில்லை யென்று வாக்களித்தாரே, இதினின்றும் தவறுவாரோ?

ப. இதைக்கொண்டோ இறக்க வில்லையென்று கூறிவிட்டாய்?

வி. இல்லை மாமி, உட்காருங்கள் இறந்திருந்தால் அவருடைய உடலெங்கே? நீங்கள் தான் கொத்தளங்களிற் போய்ப் பார்த்தீரே, அகப்பட்டதா?

ப. ஆம்,—சத்தியசீலரைக் கேட்கலாமோ வென்றால் அவரையுங் காணோம்.

வி. ராஜப்பிரியரையுங் காணோம்—மாமி இவர்கள் மூவரும் எங்கேயோ போய்விட்டார்கள் என்று நினைக்கிறேன். நீர் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்.

ப. மனோஹரன் இவ்வளவு காரியமெல்லாம் நடந்த பிறகு எப்படி உயிர்பிழைத் திருப்பான்? ஆயினும் இம் மூவர்களையுங் காணதிருப்பது சந்தேகத்திற்கு இடங்கொடுக்கிறது. [தனக்குள்] விஜயாளைக் கேட்பதில் பிரயோஜன மில்லை. அவளுக்கு ஒன்றும் தெரியாது.

நீலவேணி வருகிறாள்.

நீ. அம்மா, மஹாராஜா வாயிலில் வந்திருக்கிறார்! தம்மைப் பார்ப்பதற்காக உள்ளே வரலாமா வென்று கேட்டுக்கொண்டு வரச்சொன்னார்!

ப. யார்? மஹாராஜாவா?

நீ. ஆம் அம்மா, உண்மையாகத்தான். அம்மணி, இனி நீங்களும் அவரும் ஒருமித்த மனமுடையவராய்ச் சுகமாக வாழ்வீர்களாக! ஏதோ மஹாராஜாவினுடைய மனம் திரும்பியிருக்கின்றதென்பதற்குத் தடையில்லை?

ப. மஹாராஜா என்னை இங்குப் பார்ப்பதாவது!

நீ. ஆம், அம்மணி, நான் அவரை உள்ளே வரச்சொல்லவா?

ப. வேண்டாம்! இப்பதினாறு வருடங்களாக என்னைப் பாராதவர் இவ்வளவு தூரம் நடந்தபின்பு இனிமேல் பார்க்கப் போகிறாரோ? வேசியாகிய என்னை அவர் பார்க்கவேண்டிய நிமித்த மில்லை. ஒருவேளை வழிதவறி வந்திருப்பார். அவ

ளுடைய மாளிகை தென் பாரிசத்திலுள்ள தென அதற்கு வழி காட்டு, போ!

நீ. அம்மா, இதென்ன? அவராக வேண்டி வரும்பொழுது தாமிப்படி பிடிவாதம் செய்யலாமா?

பு. நீலவேணி! நான் சொன்னபடி சொல், போ!

[நீலவேணி போகிருள்.]

இதென்ன ஆச்சரியமா யிருக்கிறது! மஹாராஜா இங்கு வருவானேன்? இதிலெல்லாம் ஏதோ இருக்கிறது.—மனோஹரன் உயிருடன் இருக்கிருனென எனக்குள் ஏதோ சொல்லுகிறது! அவ்வண்ணம் தப்பியிருந்தால் நம்மிடம் வந்து சொல்லாமல் எங்கேயாவது போயிருப்பானோ?

நீலவேணி மறுபடியும் வருகிருள்.

நீ. அம்மா, நான் என்ன சொல்லியும் போகமாட்டேனென்கிருர். எப்படியாவது தம்மைக் காணவேண்டு மென்கிருர். வரச் சொல்லவா? அம்மா, அவர் அவ்வளவு வேண்டிக் கேட்கும்பொழுது தாம் பாராதிருத்தல் தர்மமோ?

பு. நீலவேணி! நீ எனக்கு தர்மம் கூறவேண்டியதில்லை. என்னையும் என் மைந்தனையும் இக்கோலங் கண்டவர் என்னைப் பார்க்கவேண்டிய அவசியமில்லை! உலகம் நகைக்கும்! போ நீ! என்முன் நில்லாதே. [நீலவேணி போகிருள்.]

வி. மாமி, மாமாவாக வந்து இவ்வளவு கேட்கும்பொழுது தாம் பார்க்கிறதுதானே? இதிலென்ன தவறு? என் பிராணநாதர் தான் பிழைத்து விட்டாரே!

பு. எப்படித்தெரியு முனக்கு நிச்சயமாக? விஜயா, நீ சற்றுப் பேசாமலிரு.

வி. என்ன மாமி? ஒரு வேளை பிராணநாதர் சமாசாரம் தான் எதாவது சொல்ல வந்திருக்கிருரோ என்னவோ? உள்ளே வரவழைத்து கேட்கிறதுதானே? தம்முடைய புருஷனைத் தாம் பார்ப்பதில் என்ன தவறிருக்கிறது?

ப. விஜயா, நீ ஒன்றும் அறியாதவள்; இவ் விஷயங்களிலெல்லாம் தலை நுழைத்துக்கொள்ளாதே—

மறுபடியும் நீலவேணி வருகிறாள்.

நீ. அம்மா! தாம் கூறியதைச் சொன்னேன். அவர் உடனே யிருந்த விடத்திலேயே உட்கார்ந்துகொண்டு, உன் தலைவியினிடம்போய் என்னைப் பாராவிட்டால் இன்று இப்படியே இந்த விடத்தை விட்டுப் பெயராது உயிரை விடச் சித்தமாயிருக்கிறேனென்று சொல்லி வா, என்றார்.

ப. இதென்ன சங்கடமாயிருக்கிறது? நீலவேணி இத்திரையைத் தள்ளிவிடு. இதற்கப்புற மிருந்து என்னுடன் பேசுவதானால் வரச்சொல், போ. [நீலவேணி போகிறாள்.] என்ன ஆச்சரியம்! ஏது மஹாராஜா இப்படி கூறும்படி நேரிட்டது? என்பொருட்டு அவ்வளவு மன உருக்கம் வந்துவிட்டதோ? என்ன என்னுடன் பேச வந்திருக்கிறார்? ஏதோ அவருடைய மனம் திரும்பியிருக்கிற தென்பதற்குச் சந்தேகமில்லை—ஆயினும் இனி திரும்பி என்ன, திரும்பாமல் என்ன!

புருஷோத்தமராஜன் திரைக்கு ஓர் புறமாக வந்து நிற்கிறார்.

பு. ஆம்! ஆம்! மஹா பாதகனாகிய நான் உன்னைக் கண்ணெடுத்தும் பார்க்கத் தக்கவனல்லன்! பத்மாவதி—பெயரிட்டாவது உன்னை நான் அழைக்க லாகாதோ?

ப. விஜயா, எதற்காக வந்திருக்கிறார் என்று கேள்?

வி. மாமா—

ப. ஸ்! மஹாராஜா என்று அழை, அவர்தான் உனது மாமனார் அல்லவென்று சபையறியச் சொல்லிவிட்டாரே!

வி. மஹாராஜா—தாங்கள் எதற்காக வந்தீர்களென்று கேட்கச் சொல்லுகிறார்கள்?

பு. வேண்டும்! வேண்டும்! எனக்கு இந்தத் தண்டனையும் வேண்டும்! அதிகமும் வேண்டும்! நான் செய்த தப்பிதத்திற்கெல்லாம் இதுவும் போதாது! ஆயினும்—பத்மாவதி!

என்னை நேரிற் பாராவிட்டாலும் ஒரு வார்த்தையுங் கூறலா காதா? நான் அவ்வளவு இழிந்தவனாய் விட்டேனோ?

இதெல்லாம் இப்பொழு தென்னத்திற்கு? வந்த சேதியைச் சொல்லும்படி—கேள் விஜயா.

பத்மாவதி நீ அக்னிப் பிரவேசமாகச் சித்தஞ் செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டு அதைத் தடுக்க வந்தேன்.

ஏது? மஹாராஜாவுக்கு—வேசையாகிய—என்மீது இந்தப் பதினறு வருஷங்களாக இல்லாதபட்சம் இப்போது வந்தது?—கேள் விஜயா.

ஐயோ! பத்மாவதி! இன்னொருமுறை இதைக் கூறுவையாயின், அதை நேற்றைத்தினம் கூறியதற்காக என் நாவை உன் முன்னிலையிலேயே அறுத்தெறிவேன்! ஐயோ! நானிதற்காக இதுவரையிற் பட்டதுயரமெல்லாம் போதாதோ? நீயும் என்னை வருத்தவேண்டுமோ? பத்மாவதி! பத்மாவதி! இந்தப் பதினறு வருஷங்களும் உனக்குத் துரோகியாக இருந்த நான் செய்ததெல்லாம் தவறு! தவறு! ஒப்புக்கொண்டேன்! உத்தம பத்தினியாகிய உன்னைத் தூஷித்ததெல்லாம் தப்பிதம்! தப்பிதம்! இப்பாதகன் உனது மகிமையை யறியாது செய்ததெல்லாம் தவறென ஏற்றுகொள்ளுகிறன்! நான் உனது கரத்தைப் பற்றிய கணவனயிற்றே என்றாயினும் சற்றிரங்கி, என்னை மன்னித்ததாக ஒரு வார்த்தையாயினும் எனக்கு நேராகக் கூறலாகாதா? மங்கையர்க்கரசியே! இன்னும் நான் என்னசொல்வது? நான் உனது புருஷனதல்பற்றி, உனது சீர் தங்கிய பாதங்களில் வீழ்ந்து வேண்டாத குறையொன்று தான்—அதுவும் செய்ய வேண்டுமென்றால் செய்கிறேன்.

ப. விஜயா, மஹாராஜா இக் காரியம் செய்தால் தவறெனச் சொல்லித் தடுத்துவிட்டு வா.

வி. மாமா, அப்படி செய்ய லாகாதென்று மாமி தடுக்கச் சொன்னார்கள்.

பு. விஜயா, உன் புருஷனை நான் தூஷித்ததெல்லாம் நீயும் மன்னிப்பாய்!

வி. சரிதான் மாமா.

பு. நீ கூறியபடி உனது மாமியும் என் மனங்குளிர அப்படியே கூறலாகாதா?

ப. ஒரு அற்ப வேசியினுடைய மன்னிப்பு அவருக் கென்னத்திற்கு?

பு. பத்மாவதி! நான் இதுவரையில் என் துக்கத்தைப் பொறுத்துப்பார்த்தேன்; இனி என்னால் பொறுக்க முடியாது! பத்மாவதி, இதோ, கடைசி வார்த்தை சொல்லுகிறேன் நான் செய்த குற்றங்களை யெல்லாம் நீ மன்னித்ததாக இப்பொழுது கூறுவிட்டால் இதோ உன் முன்பாகவே என துயிரை இவ்வுடைவாளுக்கு இரையாக்குவேன். என்ன சொல்லுகிறாய்?—இனி நான் தாமதியேன்.—பத்மாவதி இதோ நீயே என்னைக் கொல்கிறாய்!

ப. பிராணநாதா!—மஹாராஜா! வேண்டாம்! வேண்டாம் பொறும்! நான் உம்மை மன்னித்தேன்! மன்னித்தேன்

பு. கண்ணே, இன்றே நான் புனிதனானேன்! இன்றே என் ஜன்மம் சபலமாயது! போது மிவ்வளவு! இனி நான் இறந்தாலும் பெரிதல்ல! பிராணநாதா என்று உன் வாயினின்றும் இப்பதினாறு வருஷங்களாகக் கேளாத செவி இன்றே இச்சொல்லைக் கேட்டின் புற்றது!

ப. விஜயா, உன் மாமனாரிடம் சென்று அந்த வாளை வாங்கிக் கொண்டுவா இப்படி.

பு. ஓஹோ! பத்மாவதி இனி யொன்றிற்கும் அஞ்சவேண்டாம்; விஜயா, வேண்டுமென்றால் எடுத்துக்கொண்டுபோ, இதோ.

ப. மஹாராஜா, நான் விடை பெற்றுக்கொள்ளுகிறேன். நீர் இனி சுகமாய்—அவளை மணந்து நெடுநாள் வாழ்வீராக!

நான் சுகமாய் வாழ்ந்திருப்பதா? இனி அந்தப் பாதகியை நினைப்பேனாயினும், உத்தம பத்தினிகளுக்குத் துரோகம் செய்யும் பாதகர்கள் செல்லும் அழியா நரகத்தில் அமிழ் வேனாக! இதிருக்கட்டும்—பத்மாவதி, விடை பெற்றுக் கொள்கிறேனென்றனையே, அது என்ன சமாச்சாரம்?

ப. நான் இவ்வுலகிற் பிறந்தவேலை நிறைவேறிவிட்டது; ஆகவே நான்—

பு. ஓஹோ! பத்மாவதி, நீ இறப்பானேன் இப்பொழுது? அக் னிப் பிரவேசமாகச் சித்தம் செய்திருப்பதாகக் கூறினார்கள், அதைத் தடுக்கவன்றோ நான் வந்தேன்? இனி நீ இறப்பா னேன்? எல்லாம் சரியாய்விட்டதே!

ப. மனோஹரன்—இறந்தபின்—நான் உயிர்வாழவேண்டிய நியா யமில்லை.

பு. கண்ணே, அதைக் கூறவே நானும் சற்று முன்பாக வாயெ டுத்தேன். மனோஹரன் இறக்க வில்லை! சத்தியசீலருக்கு நான் முன்பிட்ட கட்டளையை மீட்டுக்கொண்டு மனோஹர னைக் கொல்லாதிருக்கும்படி கட்டளையிட்டேன்—மனோஹர னிறக்க வில்லை.

ப. இது உண்மைதானா?

பு. என் சொல்லை உறுதியாய் நம்பு. இன்னும் உண்மையைக் கூறுகிறேன். நானே மாறு வேஷம் பூண்டு அவ்வுத்தரவை யும் எனது கணையாழியையும் எடுத்துச் சென்று, மனோ ஹரனும் சத்தியசீலரும் ஒருவரை யொருவர் கொல்லப் போகும் சமயத்தில் தடுத்து, அவ்வுத்தரவையும் அறிகுறி யாகக் கணையாழியையுங்கொடுத்தேன். என் சொல்லை உறுதியாய் நம்பு.

வி. மாமி, நான் அப்பொழுதே சொன்னேனே! பார்த்தீர்களா! என்னிடம் இப்பொழுது இறப்பதில்லையென்று சொல்லி

பு. பத்மாவதி, இனியாவது உன்னை நான் நேரிற்காணலாகாதா !

ப. மஹாராஜா, என்னைத் தாம் பலவந்தப்படுத்தலாகாது நான் ஓரேவார்த்தை சொல்லுகிறேன். உம்மை நான் மன்னித்தது உண்மையாயினும், மனோஹரனை என் கண் முன்பாகப் பார்க்குமளவும், உம்மை நான் நேரிற் காணேன். அவனை யழைத்து வந்து என் முன்பாக விடும், அப்பொழுது உம்மைப் பார்க்கிறேன், இது சத்தியம் !

பு. சரி ! அப்படியே, உன் இஷ்டப்படி; பத்மாவதி, கடைசியில் நான் உன்னை ஒரு கேள்வி கேட்கலாமோ ? என் மீது கோபம் கொள்ளலாகாது.

ப. கேளும்.

பு. சில தினங்களுக்குமுன் சத்தியசீலருக்கு நீ ஒரு நிருபம் எழுதியது உண்மைதானா ?

ப. ஆம்.

பு. என்ன எழுதினை ?

ப. மனோஹரனை வசந்தசேனை தூஷித்தபொழுது அவரும் அருகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தன ராதலின், நீர் இந்த அநியாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா ? அப்படிப் பொறுத்துக்கொண் டிருந்ததற்குக் காரணத்தை உடனே அறிய விரும்புகிறேன், என்று கேட்டிருந்தேன்.

பு. என்ன !—எனக்கு நீ ஒரு நிருபம் எழுதிய துண்மைதானா ?

ப. ஆம், அன்றைத்தினமே உமக்கும் ஒன்று எழுதினேன்.

பு. அதில் என்ன எழுதினை ?

ப. ஏன் ? அதில் என்ன தவறிருந்தது ?—பிராணநாதா என்று உம்மை அதில் நான் அழைத்தது தவறென்கிறீர்களோ ? இப் பதினாறு வருஷங்களாகப் பார்க்கமாட்டே னென்றவள், பிராணநாதா என்று தம்மை எவ்வண்ணம் அழைக்கிறாளென உமக்கு ஆச்சரியமாயிருந்ததோ ? எது எப்படியிருந்தபோதிலும் என் கங்களைப் பிராணநாதா என்ற

அழைக்கலாகாது என்று அதிலேயே கேட்டிருந்தேனே, மறந்தீரோ?

பு. ஓஹோ!—பத்மாவதி, இன்னும் என்ன எழுதினை, நன்றாய் ஞாபகப்படுத்திச் சொல்.

ப. அதையேன் கேட்கிறீர்?

பு. சொல், சொல்கிறேன்.

ப. அப்பொழுது தாமே இவ்வாறு சந்தேகங்கொண்டிருந்தீரென்று தெரியாது. ஆகவே தம்முடைய மகனை ஒருத்தி வேசிமகனெனக் கூறியபொழுது, தாம் சும்மா கேட்டுக் கொண்டிருந்தது நியாயமாவென்றும், இது தமக்கும் இழிவன்றோ வென்றும் கேட்டிருந்தேன்.

பு. எனக் கெழுதிய நிருபத்திலா?

ப. ஆம்! சந்தேகமென்ன? வேறு யாருக்கு நான் இப்படி எழுதுவது?—மஹாராஜா! என்ன சமாசாரம்?

பு. சந்தேகமில்லை! சந்தேகமில்லை! அந் நிருபங்கள் மாறுபட்டிருக்கவேண்டும் பத்மாவதி! பத்மாவதி! இன்று என் மனத்திலிருந்த ஒரு பெரும் பாரத்தைப் போக்கினை, இப்பொழு தெல்லாம் தெளிவாய் விட்டது—அப்பா! இனிமேல் நான் மனச்சஞ்சலமின்றி உறங்குவேன்—கண்ணே! கண்ணே! உன்மீது வீணில் என்ன சந்தேகங்கொண்டேன்!

ப. மஹாராஜா! என்ன சமாசாரம்?

பு. கண்ணே, நீ எனக்கும் சத்தியசீலருக்கும் எழுதிய நிருபங்கள் மாறுபட்டிருக்கவேண்டும். அதைக்கொண்டே உன் மீது நான் சந்தேகங்கொண்டேன், இத்தீமைகளெல்லாம் நேர்ந்தன. நான் உடனே சென்று நீலவேணியை விசாரித்து, இன்னும் இதனுண்மையை அறிந்து விடுகிறேன். அவளே அந்நிருபங்களை யென்னிடங் கொடுத்தாள்; நான் இதோ வந்துவிட்டேன்! என்னை மன்னிப்பாய்!

[விரைந்து போகிறார்.]

காட்சி முடிகிறது.

# நான்காவது அங்கம்.

## முதற் காட்சி.

இடம்—பள்ளியறை. காலம்—இரவு.

நீலவேணி வருகிறாள்.

நீ. வேண்டும் இவளுக்கு இந்தக் கதி! இன்னும் மற்ற சமாசாரங்களையும் சொல்லி எரிகிறகொள்ளியை ஏறத் தள்ளிவிடுகிறேன். என்னைப்போன்ற தாதியா யிருந்தவளுக்கு இந்த வாழ்வு வந்தால் எத்தனை நாளைக்கு நிற்கும்? வாழ்வு வந்தாற்றானென்ன? தன் பழைய ஸ்திதியையும் பழைய சிநேகிதர்களையும் மறக்கும்படியாகவா சொல்லிற்று? தன் பழைய ஞாபகங்களை யெல்லாம் மறந்துவிட்டு என்னைத் தன் பணிவிடைப் பெண்ணைப்போல வன்றோ உபயோகித்து வந்தாள்? ஆகட்டும்! ஆகட்டும்! அதுவுமன்றி உத்தமியாகிய பத்மாவதிக்கும் மனோஹாருக்கும் என்னென்ன தீங்கிழைத்தாள்! அவைகளெல்லாம் இப்பொழுது இவள்மீதே திருப்பிக் கொள்ளுகின்றன! வேண்டும்! வேண்டும்! வசந்தசேனை! சற்று பொறு, சீக்கிரத்தில் பழைய ஸ்திதிக்கு என்னைப்போல் வந்துவிடுவாய்! பயப்படாதே! உன்னை நான் எப்பொழுதும் சின்ன ராணி யென்றல்லவோ அழைக்க வேண்டு மென்று கட்டளையிட்டாய்? இன்னும் அந்த அந்தஸ்து உனக்கு எத்தனை நாள் நிற்கிறதோ பார்ப்போம். மஹாராஜாவுக்கு உன்னுடைய சூதெல்லாம் ஏறக்குறைய முழுவதும் வெளியாய்விட்டது. இன்னும் மற்றதையும் நான் சொல்லிவிடுகிறேன், அஞ்சவேண்டாம்.

வசந்தசேனை விரைந்து வருகிறாள்.

வஸே. [படுக்கையின்மீது சாய்ந்து] நீலவேணி! நீலவேணி! நீ கூறியதெல்லாம் உண்மைதான்; ராஜப்பிரியனையுங் காணோம். இனி மஹாராஜா என்னைக் கண்ணெடுத்தும் பார்க்கப் போகிறதில்லை ஐயோ நான் இதுவரையில் பட்ட கஷ்டங்களெல்லாம் வீணாயினவே! வீணாயினவே!

அம்மா தாங்களேன் துக்கப்படுகிறீர்கள்? எப்படியும் சின்ன ராணியா யிருக்கும் தங்களுக்கென்ன குறை?

பஊ. நீலவேணி, என்னை யினி நீ சின்ன ராணி யென்றழைக்க வேண்டாம். அவ் வாழ்வெல்லாம் அடியுடன் ஒழிந்தது. எப்பொழுது மஹாராஜா பத்மாவதியின் முகத்தை நேரிற் பார்த்தாரோ சபையில், அப்பொழுதே எனக்குத் தெரியும்! ஆயினும் மஹாராஜா நான்தான் இதற்கெல்லாம் காரண மென்று ஒருவாறு சந்தேகங் கொண்டிருக்கிறாரே யொழிய, நான் செய்த சூது இன்னதென்று தெளிவாக அறிந்திலர்! அந்தமட்டும் எனது பாக்கியந்தான். இதையும் அறிந்தால் தானாகவே என்னைக் கொன்று விடுவார்!—நீலவேணி, ஜாக்கிரதை! அந்த நிருபங்களின் சமாசாரம் ஒருவருக்கும் தெரிவிக்காதே!

இல்லை, யம்மா. தாங்கள் எனக்கெவ்வளவோ உபகாரங்களெல்லாம் செய்திருக்கிறீர்களே, அவற்றை யெல்லாம் நான் மறப்பேனா?

பஊ. சரிதான்; நீலவேணி, என் தலை என்னவோ பளுவாயிருக்கிறது. நீயும் இந்த அறையில் ஓர் புறமாக உறங்கு சற்றே.

அப்படியே அம்மா. [ஒரு புறமாய்ப் படுத்துக்கொள்கிறாள்.]

பஊ. கண்ணை மூடிக்கொண்டு பார்ப்போம், அப்பொழுதாவது தூக்கம் வருகிறதா என்று. ஐயோ!—கண்ணை மூடும் பொழுதெல்லாம் மனோஹரனும் பத்மாவதியும் எதிரில் தோன்றுகிறது போலிருக்கிறதே! ஐயோ! நான் என்ன செய்வது? தூக்கமும்பிடிக்கவில்லை. சற்று உலாவிப் பார்க்கவா? [எழுந்திருந்து உலாவி]—சீ! இதிலும் பிரயோஜனமில்லை. என்ன சங்கடம்! என்ன சங்கடம்! ஐயோ! நித்திரையாவது வாராதா! [படுத்து] இல்லை! இல்லை!—அப்பா! மனோஹரா!—சீ! என்ன மனப்பிரமை! மனோஹரன் வந்து என்னைக் வெட்டினாற்போல் தோற்றியதே! சித்தப்பிரமை! ஐயோ! எனக்கும் பயித்தியம் பிடித்து விட்டதா என்ன?—சீ!

இதென்ன? மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு தூங்கிப் பார்ப்போம்.

[மறுபடியும் சயனித்துக்கொள்கிருள்.]

கேசரிவர்மன் அருவம் தோன்றுகிறது.

யார் அது?—ஐயோ! வந்தாயா மறுபடியும்?

கே. வசந்தசேனை! வந்தேன் மறுபடியும்!

வனே. உன்னை யார் அழைத்தது? போ! போ! ஐயா! நான் படுவதெல்லாம் போதாதோ? நீயும் வந்து கிளறவேண்டுமோ?

கே. வசந்தசேனை!—நான் அப்பொழுதே சொன்னேனே கேட்டனையா? படு இப்பொழுது! உன் தீவினை உன்னையே அழித்தது!

வனே. அழித்துத்தான் விட்டதே! இன்னும் என்ன இருக்கிறது? எல்லாம் தீர்ந்ததே!—

கே. எல்லாம் தீர வில்லை! இதனுடன் உனது துக்கம் நீங்கியதென எண்ணுதே! என்னைக் கொன்றதற்கும், உத்தமியாகிய பத்மாவதிதேவிக்கும் மனோஹரனுக்கும் நீ செய்த தீங்கிற்கும், தக்க தண்டனையாக நீ சீக்கிரம் இறப்பாய்!

வனே. இறந்துபோனால் போகட்டும்; உன்னை கேட்கவில்லை போ!

கே. வசந்தசேனை! என் மைந்தனாகிய வசந்தனும் உன் பொருட்டு—

வனே. ஐயோ! அருவமே! உறக்கக் கூவாதே, யாராவது கேட்டுவிடப் போகிறார்கள்! மஹாராஜாமுதல் எல்லோரும் வசந்தனை மஹாராஜாவின் மைந்தனென்றே கருதி யிருக்கிறார்கள். இதுவும் தெரிந்துவிடப்போகிறது. அவனாவது சுகமாய் வாழட்டும், நானிறந்தாலும் பெரிதல்ல!

கே. உன் பொருட்டு அவனும் இறக்கப்போகிறான்! அதைக் கண்டே நீ சாவாய்! அவனை நீ கரு தரித்தவுடன் மஹா

ராஜாவை உனது வசமாக்கி, என்னைக்கொன்று, பிறகு பிறந்த வசந்தனை மஹாராஜாவின் குழந்தையென எல்லோரும் நம்பும்படி நீ செய்த சூதுக்கெல்லாம் இதுவே தக்க தண்டனை!

வனே. ஐயோ! ஐயோ! வசந்தனும் நானும் இறக்கவேண்டுமோ?

கே. ஆம்!

வனே. ஐயோ! நீ இன்னும் என்னை வருத்தாதே, ஒழிந்துபோ!

கே. இதோ போகிறேன். நீ இறந்து சீக்கிரம் என்னுடைய ஸ்திதிக்கு வருவாய்! [மறைகிறது.]

வனே. அப்பா மறைந்துவிட்டது!—ஒரு வேளை நீலவேணி இது பேசியதெல்லாம் கேட்டிருந்தாளோ?—நீலவேணி நீலவேணி!

வேகமாய் நீலவேணி எழுந்திருக்கிறாள்.

நீ. ஏன் அம்மா! [அருகில் வந்து] ஏன் அழைத்தீர்?

வனே. இங்கு ஏதாவது—யாராவது வந்தார்களா, பார்த்தனையா?

நீ. இங்கு யாரம்மா வருவது? ஒருவரும் வரவில்லையே!

வனே. சரிதான், நீ உறங்கப் போ.

நீ. [தனக்குள்] இப்படி ஏதாவது இருக்கவேண்டுமென்று அப்பொழுதே நான் சந்தேகப்பட்டேன்! இல்லாவிட்டால் மஹாராஜவுக்குப் பிறக்கும் குழந்தை, பயித்தியக்காரனாய், கறுப்பா யிருப்பானா? அம்மட்டும் நான் உறங்காது கேட்டிருந்தது நலமாயிற்று. கேசரிவர்மருக்கு வழி வைத்த ஆசாமி தாங்கள் தானா! [ஒரு புறம்போய்ப் படுத்துக் கொள்கிறாள்.]

வனே. ஐயோ! போதாக் குறைக்கு இது வொன்றோ?—என் தலையெல்லாம் என்ன சுழல்கிறதே! எனக்குப் பயித்தியம் தான் பிடித்திருக்கிறதென நினைக்கிறேன்! இல்லாவிட்டால் எனக்கேன் தூக்கம் வரவில்லை? [படுக்கையில் புரள்கிறாள்.]

புருஷோத்தமராஜன் கையில் வாளுடன் விரைந்து வருகிறார்.

பு. எங்கே நீலவேணி?—நீலவேணி!

நீ. [எழுந்திருந்து] மஹாராஜா!

பு. வா இப்படி துஷ்டையே!

வனே. ஐயோ! இதென்ன?

பு. [போகும்போது] அந்த நிருபத்தைக் குறித்து உண்மையைக் கூறிவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவேன்!

[புருஷோத்தமனும் நீலவேணியும் போகிறார்கள்.]

வனே. தீர்ந்தது, நான் நினைத்தவண்ணமே முடிந்தது!—நிருபம்!—உண்மை!—இவள் எப்படியும் கூறிவிடுவாள்!—சந்தேகமில்லை! நான் வாழ்ந்விட்டால் அவள் மாத்திரம் மஹாராஜாவுடன்— கூடி வாழ்வானேன்?— எப்படியும் இறக்கப் போகிறேன்—பழி வாங்கிவிட்டு இறக்கிறேன்!

[அங்கிருக்கும் ஓர் கட்கத்தைக் கையில் எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியே ஓடுகிறாள்.]

காட்சி முடிகிறது.

## இரண்டாவது காட்சி.

இடம்—அரண்மனையில் ஒரு திட்டிவாசல், காலம்—இரவு.

ஒரு புறமாக விகடனும் மற்றொரு புறமாக அமிர்தகேசரியும் வருகிறார்கள்.

விக. அந்தமட்டும் ஒழித்துவிட்டோமே சனியை! இல்லாவிட்டால் நம்மையுங்கூடத் தேடச்சொல்லும். இரண்டு நாளாக எனக்குத் தூக்கமே யில்லை. பட்டணமெல்லாம் இளவரசரைக் காணோமென்று குழப்பமாகி எல்லோரும் நம்மைக் கேட்க ஆரம்பித்து விடுகிறார்கள் அவர் எங்கே யென்று. அப்பா! சற்று இந்த இருட்டிலாவது நித்திரை செய்வோம். [படுத்துக்கொள்ளப் பார்க்கிறான்.]

வ. [உள்ளே யிருந்து] ஆம்! சந்தேகமில்லை, நான் தான் மஹாராஜா!

விக. ஐஐயோ! இந்தப் பயித்தியம் இங்கே இருக்கிறதையா; அதோ தூரத்தில் வருகிறதே!—அடடா!—மஹாராஜாவின் ஆடையாபரணங்களை யெல்லாம் அப்படியே மாட்டிக் கொண்டிருக்கிறதே! தூரத்தில் வித்தியாசமுந் தெரியவில்லையே!—இது யார் இந்தப் பக்கம்?

வசந்தசேனை விரைந்து வருகிறாள்.

வனை. விகடா!

விக. அம்மணி!

வனை. மஹாராஜா எங்கே யிருக்கிறார்?

விக. இதோ வருகிறாரே, சாக்ஷாத் மஹாராஜா!

எதிர்புறமாக சிரித்தவண்ணம் வசந்தன் வருகிறான்.

வனை. [அவன் மீது பாய்ந்து] புருஷோத்தம ராஜனே! [கட்கத்தை ஓங்கி]

இனி பத்மாவதியுடன் சுகமாய் வாழும்!

[குத்திக் கொல்கிறாள். வசந்தன் வீழ்ந் திறக்கிறான்.]

விக. அம்மணி! அம்மணி! என்ன வசந்தரைக் கொன்றுவிட்டீரே!

அமிர்தகேசரி வருகிறான்.

அ. ஐ ஐயோ! வசந்தர் இறந்து விட்டாரே!

வனை. ஆம், ஆம்! வசந்தன்தான்! சந்தேகமில்லை! கேசரிவர்மன் சொன்னது நிறைவேறிவிட்டது! இனி நானிருப்பானேன்?—பொறு, மனோஹரா! ஆ! நீ என்னைக்கொல்ல விடுவேனென்று பார்த்தாயோ! என்னை யாரென்று நினைத்தாய்? வசந்தசேனை!—நீ என்னைக் கொல்வதென்ன! நானே என்னைக் கொன்று கொண்டு மாள்கிறேன்! போ!

[தன்னையும் குத்திக்கொண்டு மகன் மீது விழுந்து சாகிறாள்.]

அ. விகடரே, நீர் முன்பு அழுத சகுனத்திற்குச் சரியாக முடிந்ததே! நாமிப்பொழு தென்ன செய்வது?

புருஷோத்தமராஜன், பந்தங்களுடன் சேவகர் புடைசூழ வருகிருர்.

பு. இதென்ன இங்கு கூச்சல்!—வசந்தசேனை! வசந்தன்

விக. மஹாராஜா, வசந்தர் உமது உடை முதலியவற்றை எல்லாம் அணிந்துகொண்டு இப்படி வர, சின்ன ராணி எதிர் பக்கமாக வந்து மஹாராஜா எங்கே என்று கேட்டார்கள் நான் வேடிக்கையாக இதோ வருகிருர் மஹாராஜா, என்றேன். உடனே வசந்தர்மீது பாய்ந்து கொன்று விட்டார்கள்!

பு. ஆம்! உங்கள்மீது குற்றமில்லை! சரி, என்னைக் கொல்ல வந்தவள் தெய்வாதீனத்தால் வசந்தனையே கொன்று விட்டனள்!—வசந்தசேனை! உன்கெடுமதிக்குத் தக்கதண்டனையே உனக்குத் தெய்வகடாக்ஷத்தால் விதிக்கப்பட்டது உம்!—ஆயினும்—எனது மனைவியைப்போல் சிலகாலம் வாழ்ந்திருந்தாய், இறந்த பின்னும் தக்க மரியாதையுடன் செல்வாய்—நீ செல்லவேண்டிய இடத்திற்கு!

[வெளியில் யுத்த பேரிகை முழங்குகிறது

என்ன இந்த சமயத்தில் யுத்தபேரிகை முழங்குகிறது என்ன சமாசாரம்? [விரைந்து போகிருர்

காட்சி முடிகிறது.

# ஐந்தாம் அங்கம்

## முதற் காட்சி.

இடம்—காவிரிக் கரையிலோர் வசந்த மண்டபம். காலம்—பகல்.

இடையில் திரையிட்டிருக்க, ஒரு பக்கத்தில் புருஷோத்தமராஜனும் மற்ருெரு பக்கம் பத்மாவதியும் விஜயாளும் இருக்கின்றனர்.

ப. மஹாராஜா, தாம் ஒன்றும் அதைரியப்படவேண்டாம் உடனே புறப்பட்டுப்போய், பகைவரை வென்று வெற்றி மாலை புனைந்து வருவீராக!

பு. கண்ணே, பத்மாவதி, பதிவிரதையாகிய உனக்கு நான் செய்த குற்றங்களை யெல்லாம் மன்னித்து இப்பொழுதாவது உனது வதனத்தை ஒரு முறை நோக்கிவிட்டுச் செல்ல விடையளிக்கலாகாதா?

ப. மஹாராஜா, தாம் எப்படியும் வெற்றி பெறுவீர் என்று எனக்கேதோ தோன்றுகிறது. தாம் ஒன்றிற்கும் வருந்த வேண்டாம். ஆயினும் நான் செய்த பிரதிக்ஞையினின்றும் தவறுவது நியாயமன்று, மன்னிக்கவேண்டுமென்னை.

பு. ஆனால் என்னை எப்பொழுதும் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டாயோ?

ப. அப்படி யன்று. எப்பொழுது மனோஹரனை உயிருடன் என் கண்முன்பாகப் பார்க்கிறேனோ, அந்த க்ஷணமே உமது வேண்டுகோளுக் கிசைவேன். அதுவரையில் தாம் என்னை நிர்ப்பந்திப்பது நியாய மன்று.

பு. மனோஹரா, மனோஹரா!—பத்மாவதி, உன்னிஷ்டம்; ஆயினும் உனது கரத்தையாவது சற்றுக் கொடு. அதையாவது முத்த மிட்டுச் செல்கிறேன், உன்னைப் பார்த்து விட்டுச் செல்லக்கொடுத்துவைக்காமற் போன போதிலும்!

வி. அதையாவது செய்கிறதற் கென்ன மாமி? இந்தத் திரையைச் சிறிது கிழித்து, கையை வெளியில் விடுகிறதுதானே?

பு. ஆம்! இதோ என்வாளால் வழி செய்கிறேன்.

[கிழித்த திரையின் வழியே பத்மாவதி கரத்தை நீட்ட அதற்கு முத்தமிடுகிறார்.]

இவ்வளவாவது கொடுத்துவைத்தேனே! இனி நான் இறந்தாலும் பெரிதல்ல!

ப. [கையைச் சரேலென்று இழுத்துக் கொண்டு] மஹாராஜா, இதென்ன! தாம் கண்ணீர் விடுகிறீரே! மனோஹரனுடைய தந்தையா யிருந்தும் தாம் யுத்தத்திற்குச் செல்ல வியசனப்படுவதா? இதென்ன கண்ணீர்?

பு. கண்ணே! பத்மாவதி, நானதற்காக வருத்தப்படவில்லை, யுத்தத்தில் ஒரு வேளை இறக்க வேண்டுமேயென எனக்குச் சிறிதும் அச்ச மில்லை. நான் வருந்திய தெல்லாம் இவ்வள வழகிய காத்தையுடைய பெண்மணியை மணந்து, அவ ளுக்குத் துரோகம் செய்து, இக்கரத்தைப் பற்றி அக்கினி சாக்ஷியாய் மணந்தபொழுது நான் செய்த பிரதிக்ஞைகளை யெல்லாம் தவறினேனே யென்று வருந்திக் கண்ணீர் விட் டேனெயொழிய வேறொன்றுமில்லை. [வெளியில்பேரிகை]

ஜெயபேரிகை முழங்குகிறது! ஏதோ நற்சகுனமாகத் தானிருக்கிறது!—பத்மாவதி, நான் விடை பெற்றுச் செல்கிறேன்.—விஜயா, நான் வருகிறேன். [போகிறார்.]

காட்சி முடிகிறது.

—o—

## ரண்டாவது காட்சி.

இடம்—யுத்தகளம், காலம்—பகல்.

சோழ சைனியங்கள் முறியடிக்கப்பட்டு ஓடுகின்றன, மற்றொரு புறமாக புருஷோத்தமராஜன் பாண்டிய சைனியங்களால் துரத்தப்பட்டு ஓடிவருகிறார்.

பு. அடே! வீரர்களானால் ஒருவன் ஒருவனுகச் சண்டை செய்யுங்கள்!

பா.சை. அடே! இவரே அல்லாருமா சேர்ந்து கொண்ணுட்டா தாண்டா சரி! [புருஷோத்தமன் பாண்டியர்களால் எதிர்க் கப்பட்டு கடைசியில் காலில் வெட்டப் படுகிறார்.]

பு. மனோஹரா! மனோஹரா! [கீழே விழுகிறார்.]

மாறுவேஷத்தில் மனோஹரன் பௌத்தாயனர், சத்தியசீலர் ராஜப்பிரியன் சைனியங்களோடு, விரைந்து வருகிறார்கள்.

ம. இதோ! வந்தேன்! [புருஷோத்தம ராஜனை எதிர்த்தவரை வெட்டி அவரைக் காப்பாற்றுகிறான். பாண்டிய சைனியங்கள் பறக்கின்றனர்.]

அப்படியே பாசறைக்கு எடுத்துச் செல்லுங்கள் சீக்கிரம்!

பௌ. இன்னும் உயிரிருக்கிறது! ஆயினும் மூர்ச்சையா யிருக்கிறார்! காயப்பட்டிருக்கிறது! ஜாக்கிரதை! ஜாக்கிரதை!

[சத்தியசீலரும் ராஜப் பிரியனும் மூர்சசையா யிருக்கும் அரசனை அப்படியே தூக்கிக் கொண்டு போகிறார்கள்.]

ம. சோமூர்களே! வாருங்கள்! வாருங்கள்! ஓடுகிறார்கள் பகைவர்கள்!

பௌ. ஆம், ஆம்! இது தான் சமயம், வாருங்கள்! வாருங்கள்!

ம. ஜெய!

எல்லோரும். ஜெய! ஜெய! [எல்லோரும் போகிறார்கள்.]

காட்சி முடிகிறது.

## மூன்றாவது காட்சி.

இடம்—மஹாராஜாவின் சபை. காலம்—காலே.

இடையில் ஓர் திரை யிடப்பட்ட சேர தேசத்துச் சிங்காதனத்தின் மீது ஒரு புறம் புருஷோத்தமராஜனும் மற்றொருபுறம். பத்மாவதியும் வீற்றிருக்கின்றனர்.

விஜயாள் பத்மாவதியின் அருகில் தாதியர் புடைசூழ நிற்கிறாள். குரு, ரணவீரகேது, மந்திரி பிரதானிகள் சபையில் உட்கார்ந்திருக்கின்றனர் மனோஹரன், சத்தியசீலர். ராஜப்பிரியன், பௌத்தாயனன், நால்வரும் முழுக்கவச மணிந்து முகத்தை மூடி, வருகின்றனர்.

சபையோர்களெல்லாம் ஜெய கோஷம் செய்கின்றனர்.

வீரகேசரி! வாரும்! என துயிரைக் காத்த வீர சிங்கமே வாரும்! தாம் எனக்கும் எனது பிரஜைகளுக்கும் செய்த

உதவிக்குத் தக்க கைம்மாறு செய்ய நான் அசக்தனாயிருக்கிறேன். ஆயினும் தாம் என்னால் கொடுக்கத்தக்க எதையாவது கேளும், தருகிறேன். இந் நாடு முழுவதையுங் கேட்டபோதிலும் தருகிறேன்! என துயிரை வேண்டினும் தருகிறேன்! நீர் காத்தபடியால் அது உம்முடையதே!—உம்முடைய வேண்டுகோளின்படி நானும் எனது பத்தினியுமாக, இதோ சிம்மாசனத்தின் மீது வீற்றிருக்கிறோம். இனி தடையின்றி கேட்டுப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

ம. [சிங்காதனத் தெதிரிற் போய் முழந்தாளிட்டுப் பணிகிறான்.]

பு. வீரகேசரி! இதென்ன? எனக்கு முழந்தா ளிடுகிறீரே?

ம. மஹாராஜா! நான் இவ்வுலகில் எதை முக்கியமாகப் பெற விரும்பினேனோ அதைப் பெற்றேன், இனி எனக்கு வேறொன்றும் வேண்டியதில்லை!—அம்மணி!

[முகத்தின் மூடியை எடுத்து]

நான் அன்று செய்த சபதத்தை நிறைவேற்றினேனன்றோ?

ப. [எழுந் தோடி மனோஹரனைக் கட்டியணைத்து] கண்ணே! நிறைவேற்றினை! நிறைவேற்றினை!

வி. பிராணநாதா! பிராணநாதா!

[மனோஹரனைக் கட்டிகொள்ளுகிறாள்.]

எல்லோரும். மனோஹரர்! மனோஹரர்!

பு. [சிங்காதனத்தினின்றும் இழிந்து மனோஹரனைக் கட்டியணைத்து] நான் கனவு காணவில்லையே! இல்லை, இல்லை!—கண்ணே! மனோஹரா! மனோஹரா! இன்றே உன்னைப் பெற்றேன்! இன்றே உன்னைப் பெற்றேன்!

[சத்தியசீலர், ராஜப்பிரியன் பௌத்தாயனன் மூவரும் தங்கள் தங்கள் முக மூடியைக் களைகின்றனர். சபையோரெல்லாம் சந்தோஷத்தால் ஆரவாரிக்கின்றனர்.]

பு சத்தியசீலரே! ராஜப்பிரியா! பௌத்தாயனா!—இதென்ன எனக்குப் பயித்தியம் பிடிக்கும்போலிருக்கிறதே!—என்ன

ஆச்சர்யம்!—மனோஹரா! நீயோ எனதுயிரைக் காப்பாற்றிய வீரகேசரி? ஆம் ஆம்! உன்னையன்றி வேறெந்த வீரன் அச்செய்கை செய்திருப்பான்? கண்ணே! நான் உனக்குச் செய்த தீங்கிற்கெல்லாம் என்ன கைம்மாறு செய்தனை! சத்தியசீலரே! அப்பொழுதே நீங்களின்னாரென ஏன் எனக்குக் கூறியிருக்கலாகாது?—ராஜப்பிரியா! நீயாவது என்னிடம் கூறியிருக்க லாகாதா?

வி. மாமா, நான் அப்பொழுதே சொன்னேனே கேட்டீர்களா? எப்படியும் பிராணநாதர் வந்து நமக்கு உதவி செய்வாரெனச் சொல்லவில்லையா?—பார்த்தீரா மாமி, இறந்து விட்டார் இறந்து விட்டார் என்று வருந்திக் கொண்டிருந்தீர்களே! எனக்கு இப்பொழுது இறப்பதில்லையென வாக்களித்துவிட்டு இறப்பாரோ?

ப. கண்ணே, உண்மையே, உன் புத்தியைக் கேட்பானேன்!

பு. என்ன ஆச்சரியம்!—ஏதோ என் முன்னோர்களுடைய பூர்வ புண்யபலனே இது. என் மனைவியாகிய கற்பிற்கரசி பத்மாவதியை நேரிற் காணப்பெற்றேன்! என் மைந்தனாகிய மனோஹரனும் வந்து சேர்ந்து விட்டான். மந்திரிகளுக்குள் நாயகம் போன்ற சத்தியசீலரும் உயிர்பிழைத் திருக்கப்பெற்றேன். ராஜப்பிரியன் முதலிய எல்லோரும் என்னை அடைந்து விட்டனர். இனி இவ்வுலகில் நான் பெறத்தக்கதென்ன இருக்கிறது?

ப. ஈசன் அருள்!

காட்சி முடிகிறது.

நாடகம் முற்றியது.

Printed at the "Peerless Press" 13, Thambu Chetty St., Madras.